
# கலைக்க முடியாத வேஷங்கள்



இந்திரா சௌந்தர்ராஜன்

# கலைக்க முடியாத வேஷங்கள்

இந்திரா சௌந்தர்ராஜன்

திருமகள் நிலையம்
புதிய எண் 13, பழைய எண் 28,
சுக்கான்ஸ் அப்பார்ட்மென்ட்ஸ்
சிவபிரகாசம் சாலை
தி. நகர், சென்னை - 600 017.
போன் 24342899, 24327696
Fax : 91-044-24341559
E-mail ID enquiry@thirumagalnilayam.com
Website www.thirumagalnilayam.com

முதற் பதிப்பு டிசம்பர், 1999
இரண்டாம் பதிப்பு ஆகஸ்ட், 2011

உரிமை ஆசிரியருக்கு

**KALAIKA MUDIYATHA VEASHANGAL**

**By : Indra Soundarrajan**

First Edition December- 1999
Second Edition August - 2011
No.of Pages 200
Paper Used 11.6 Book Print

**விலை ரூ. 90-00**

**Thirumagal Nilayam**
New No. 13, Old No. 28, Sucons Aprt.
Sivaprakasam Salai,
T.Nagar, Chennai - 600 017

**Laser at** *Goodwill Computers,* T.Nagar, Chennai 17
E-mail goodwilltngr@yahoo.co.in Cell:9940254493

**Printed at : மஞ்சு ஆப்செட்,**

# பதிப்புரை

கோட்டைப்புரத்து வீடு, மர்மதேசம், அசுர ஜாதகம் என பல வித்தியாசமான நாவல்களின் மூலம் வாசகர்களின் மனத்தில் நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டிருப்பவர் எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜன். எழுத்தாளர்கள் முதலில் சிறுகதை எழுத ஆரம்பித்து பின்குறுநாவல், நாவல் என எழுத்தில் முன்னேறுகிறார்கள். பிரபலமாகிறார்கள். இருந்தாலும் அவர்களும் பல சமயங்களில் சிறுகதைகளும் எழுதியே தீர வேண்டிய கட்டாயம் உண்டு. பத்திரிகைகள் தீபாவளி மலர், பொங்கல் மலர், சிறப்பு மலர்கள் என்று வெளியிடும்போது பிரபல எழுத்தாளர்களின் சிறுகதைகளும் இடம்பெறச் செய்ய விரும்புவதுண்டு. சில சமயங்களில் எழுத்தாளர்களும் தங்களைப் பாதித்த சம்பவங்களை சிறு கதையாக எழுதி முடித்த பின்பே மனம் நிம்மதியடைவர். அப்படி பல சமயங்களில் பல பிரபல பத்திரிகைகளில் இந்திரா சொந்தர்ராஜன் எழுதிய சிறுகதைகள் தொகுக்கப்பட்டு சிறுகதைத் தொகுதியாக வாசகர்களுக்கு இச்சிறுகதை விருந்தளிக்கிறது.

கதைகளில்தான் எத்தனைவிதமான குணச்சித்திரங்கள், எத்தனைவிதமான கதைக்களங்கள். நாவல்கள் முழு விருந்து என்றால் சிறுகதைகள், இனிப்பு காரம் காபி போன்ற சிற்றுண்டி விருந்து. சிற்றுண்டி விருந்து எல்லோருக்கும் பிடிக்கும். 'கலைக்க முடியாத ஒப்பனை'யில் உள்ள தொகுதியில் சிறுகதைகளும் வாசகர்களுக்கு பிடிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

– பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


1. கலைக்க முடியாத வேஷயங்கள் ............................ 5
2. ஞானத்தின் விலை நாற்பதாயிரம் ........................ 24
3. நல்ல விதை ........................................ 33
4. ஒதுக்கீடுகள் ........................................ 41
5. புலியன் ............................................ 51
6. தேரு வருதே ........................................ 58
7 காதல் போயின்... .................................... 66
8. வலி ................................................ 75
9. கோயம்புத்தூர் ...................................... 82
10. வாத்தியார் 100
11. கையெழுத்து போடு போஸ் ............................ 108
12. கொல்லையில் ஒரு பாம்பு 117
13. பலி ................................................ 129
14. நடந்தால், வாழி! 138
15. மனுஷனாகணும்! 145
16. அகலிகைக்கல் ........................................ 153
17 ஆசை நெசவு ........................................ 166
18. தலை தீபாவளி 178
19. முற்பகலும் பிற்பகலும் .............................. 189


❑❑❑

# 1

# கலைக்க முடியாத வேஷங்கள்

ஒரே வரியில் மறுத்து விட்டாள் அகல்யா.

“சாரி.... முடியாது! வேற ஆளை பாத்துக்குங்க...” – அவள் அப்படி மறுக்கக் காரணம் இருக்கிறது. மொத்தமாக அறுபது நாட்கள் கால்ஷீட் வேண்டுமாம். ஒருநாள் கூட இடைவெளியின்றி ஷூட்டிங்காம். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தரத் தயார் என்கிறார் புரொட்யூசர்.

அதற்காக தவழத் தொடங்கியிருக்கும் குழந்தையை விட்டு விட்டு எப்படி வெளியூர் போவதாம்...?

மனசுதான் கேட்குமா?

இல்லை குழந்தைதான் தாங்குவாளா?

நிர்தாட்சண்யமாக மறுத்துவிட்டு அகல்யா போய் விட்டாள். ஆனால் புரொட்யூசரைப் பிடித்து இழுத்து நிறுத்தி வைத்திருக்கிறான் ராமமூர்த்தி.

“நீங்க கவலப்படாதீங்க. நான் சம்மதிக்க வைக்கறேன். எனக்கு உங்க நிலை நல்லா தெரியுது. அகல்யாவுக்கும் இந்தப் படம் நல்ல பிரேக் தரும்...”

— அவரைச் சமாதானப்படுத்தி தினத்தந்தி பேப்பரை எடுத்துப் படித்துக் கொண்டிருங்கள் என்று கொடுத்து விட்டு மாடிக்குத் தாவி ஏறுகிறான்.

தலை சிக்கை எடுத்துவிட்டுக் கொண்டிருகிறாள் அகல்யா.

"அகல்... என்ன நீ இப்படி மூஞ்சில அடிச்சி சொல்லிட்டு வந்துட்டே. எப்பேர்ப்பட்ட சான்ஸ் தெரியுமா இது?"

"நல்ல சான்ஸ்தான், இல்லேங்கலே. ஹரிணியை யார் பார்த்துப்பாங்க...?"

"இப்ப அதான் பெரிய சிக்கலாக்கும். அந்தக் கவலை உனக்கு எதுக்கு?"

"ஐய்யோ என்ன நீங்க... குழந்தைக்கு குறைந்தபட்சம் ஆறுமாசமாவது நான் பால் தரணும்."

"போறும் நீ இவ்வளவு நாள் தந்ததே போதும். ஃபாரெக்ஸ் செரலாக்னு ஏகப்பட்ட ஐட்டம் மார்க்கெட்ல இருக்கு. நான் பாத்துக்கறேன். நீ போய் அக்ரிமென்ட்ல கையெழுத்துப் போடு..."

— ராமமூர்த்தி அவளை வளைக்க ஆரம்பித்து விட்டான். இந்த விஷயத்தில் அவனொரு மலைப்பாம்பு. அவளுக்கும் தெரியும். அவனை கலக்கத்துடன் பார்க்கிறாள்.

"காத்துள்ள போதே தூத்திக்கணும்டா... என்கிறான் மிருதுவாக.

"எனக்குக் கொஞ்சம் கூட நடிக்கவே பிடிக்க லைங்க... சம்பாதிச்சது போதாதா?" – அவள் ஈனசுரத்தில் கேட்கிறாள்.

"இப்ப இருக்கற விலைவாசிக்கு நீ சம்பாதிச்சது அஞ்சு வருஷம் தாங்கினா அதிகம். இதோ பார், முன்னையாவது நீயும் நானும் மட்டும்தான். இப்ப மகள் ஒருத்தி வந்துட்டா. அவளுக்கு, அவளோட எதிர்காலத்துக்குன்னு சேர்க்க வேண்டாமா?"

— அவன் கேள்வி அவளை மெல்ல அசைக்கிறது. பக்கத்தில் கட்டிலில் மல்லாக்கப் படுத்தபடி கைகால்களை உதைத்தபடி விளையாடிக் கொண்டிருக்கிறது மகள் என்னும் அந்த உயிர்ப்பதுமை!

— எப்பேர்ப்பட்ட மனசும் இப்படி ஒரு காட்சி பார்த்தால் சற்று ஈரப்பட்டுப் போகும்.

—— அவளும் பார்க்கிறாள்.

— ஈரத்தோடு பாசமும் பீறிடுகிறது.

"சரி நான் ஒப்புக்கறேன். ஆனா ஒரு கண்டிஷன்!"

"என்ன... சீக்கிரம் சொல்லு."

"நீங்களும் குழந்தையோட அவுட்டோர் வரணும். நான் ஹரிணிக்குப் பால் தந்தே தீரணும்."

அவன் முகம் அடுத்த நொடி குத்துப்பட்ட மாதிரி கலங்கிப் போகிறது.

"முண்டம்.... ஊரைப் பொறுத்து நீ கனவுக் கன்னி... ஒரு வருஷமா நீ நடிக்காம ஒதுங்கி அமெரிக்கா போய்ட்டவ. இருந்தும் உன் க்ரேஸ் ஜனங்க கிட்ட குறையலை. அதை எப்படிக் காப்பாத்திக்கறதுன்னு யோசி. குழந்தையை நான் பாத்துக்கறேன்."

அவன் அவளை அடக்குகிறான். அவளும் அடங்கிப் போகிறாள். அவளுக்குக் கல்யாணம் நடந்திருப்பதோ குழந்தை பிறந்திருப்பதோ இந்த நிமிஷம் பிரம்ம ரகசியம்.

அவன் கருவிலேயே கொல்ல கத்தியும் கபடாவுமாய் நிற்கத்தான் செய்தான். ஆனால் டாக்டர் கருவைக் கலைத்தால் உயிருக்கு ஆபத்து என்று கூறிவிட்டதால் வேறு வழியின்றி பெற்றுக் கொள்ள வேண்டியதாய்ப் போய்விட்டது.

அதற்காக ஹாலிவுட்டில் நடிப்புப் பயிற்சி பெறப் போகிறேன் என்றெல்லாம் அளக்கும்படியும் ஆகிவிட்டது.

எப்படியோ இந்த நிமிஷம் ஒருவருக்கும் தெரியாது. சில நரித்தனமான நிருபர்கள் மோப்பம் பிடித்துவிட்ட போதும் அவர்களை கவனித்து விட்டதால் கப்சிப்!

புரொட்யூசர்களும் கனவுக் கன்னி, இந்திரலோக சுந்தரி என்கிற நினைப்போடும் நம்பிக்கையோடும் வரத்தொடங்கி விட்டனர்.

எவ்வளவு கேட்டாலும் அள்ளித்தரத் தயார்.

அப்புறமென்ன...?

அவுட்டோருக்கு கிளம்பி வந்து விட்டாள். தங்கி இருக்கும் லாட்ஜ் ஜன்னல் வழியாக வெளியே பார்க்கிறாள். அம்பா சமுத்திரம் தெரிகிறது. சரியான வயல் சார்ந்த வாழை தழைத்த ஊர். பசுமை பொழியக் கிடக்கிறது.

லாட்ஜுக்குப் பின்னாலேயே வாழைத் தோப்பு. வரப்பில் நீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. வாழையைத் தண்ணீர் ஏமாற்றவில்லை. ஆனால் நான் என் குழந்தையை ஏமாற்றிச்

கொண்டிருக்கிறேனே... பாவம் குழந்தை... என்ன பாடுபட்டுக் கொண்டிருக்கிறதோ?

மனதை எவ்வளவு கட்டுப்படுத்தினாலும் மீறிக் கொண்டு அது பாய்கிறது. ஒரு கணம் அதன் அழுகுரல் கேட்டால் கூடப் போதும். மனது கொஞ்சம் சமாதானமடைந்து விடும் இதனால் தானோ என்னவோ இன்று ஷூட்டிங்கிலும் டேக்குக்கு மேல் டேக் வாங்கிவிட்டாள்.

கூடவே இருக்கும் அசிஸ்டென்ட் புரிந்து கொண்டு கேட்கிறாள்.

"வீட்டுக்கு ஒரு எஸ்.டி.டி. கால் போடட்டு மாம்மா..?"

"முதல்ல போடு... ஹரிணி எப்படி இருக்கான்னு தெரியணும்" – அவள் அறையில் இருந்தபடியே முயற்சிக்க, மறு முனையில் சிக்குகிறான் ராமமூர்த்தி

"என்னங்க நான்தான்...

"நினைச்சேன். என்னடா இன்னும் போன் பண்ணலையேன்னு."

"பாப்பா எப்படி இருக்கா?"

"நல்லாருக்கா உன் தங்கச்சி வித்யா உன் ஜாடையா? ஆகையால அழல்லாம் இல்ல. அவளையே நீன்னு நினைச்சுக்கறா நல்லா..."

"அவளை போய்க் கூட்டிகிட்டு வந்தீங்களாக்கும்."

"என்ன பண்றது, சமாளிக்கணுமே?"

“நான் இங்க நடிக்கறேன். வித்யா அங்க நடிக்கறா ளாக்கும்?”

“எங்க நடிச்சாலும் அதை நல்லா செய்துட்டா யாருக்கும் ஒரு பிரச்னையும் இல்ல..”

“எனக்கு இப்பவே ஹரிணியைப் பார்க்கணும் போல இருக்குங்க..”

“கவலைப்படாதே... உன் தங்கச்சி கூட்டிக்கிட்டு வருவா. யாரும் கேட்டா அவ குழந்தைன்னு சொல்லிச் சமாளிச்சுக்கலாம்.”

“முதல்ல அனுப்பி வைங்க...

“நீ ஷூட்டிங்கல கான்சன்ட்ரேட் பண்ணு அகல்யா. நாங்க வர்றோம்.”

— அவன் போனை முடக்கப் போகிறான். அகல்யா பெரிதாகக் கத்தி அவனைத் தடுக்கிறாள்.

“என்னங்க ஒரு நிமிஷம். ஒரு நிமிஷம்.”

“என்ன?”

“குழந்தை குரலைக் கொஞ்சம் கேட்கணும்.”

“ஊஹூம்! நீ இப்படி இருந்தா தேற முடியாது அகல்.. இதுதான் லாஸ்ட்டைம்...” சொல்லிவிட்டுச் செல்கிறான். சில வினாடிகளில் குழந்தை ஹரிணியின் அழுகை சப்தம் தொலைபேசி வயர் வழியாக, கிட்டதட்ட அறுநூற்று சொச்சம் கி.மீ. கடந்து வந்து காதில் பாய்கிறது.

“ஏன் குழந்தை அழறா... பசியா?”

“முண்டம். குரலை கேட்கணும்னியேன்னு கிள்ளினேன். அதான் அழுவறா,”

அகல்யா அடுத்த நொடி போனை முடக்குகிறாள். கண்களில் நீர் சேர அப்படியே படுக்கையில் விழுகிறாள்.

அசிஸ்டென்ட்டுக்குப் புரிகிறது.

“குழந்தை அழுதிச்சாம்மா?”

“ஆமாம் லட்சுமி... நான் கேட்கணும்கறதுக்காக கிள்ளி விட்ருக்காரு. இப்படின்னு தெரிஞ்சிருந்தா கேட்டிருக்கவே மாட்டேன்.”

விசும்பி விசும்பி அழத் தொடங்குகிறாள் அகல்யா.

“அழாதீங்கம்மா... கொஞ்ச நாள். பிறகுதான் போய்டப்போறோம்ல...”

அவள் சமாதானப்படுத்திய முகூர்த்தமோ என்னவோ – நாட்கள் எப்படியோ நகர்ந்து முடிய, ஷூட்டிங் முடிய இரண்டு நாள் இருக்கும்போது ராமமூர்த்தி குழந்தையுடனும் தங்கையுடனும் வந்து சேருகிறான்.

செட்டில் மேக் அப்பில் இருக்கும்போது வித்யா அவள் குழந்தையுடனும் ராமமூர்த்தியுடனும் வந்து நிற்கிறாள். பார்த்த மறுநொடி பாய்ந்து போய் குழந்தையை வாங்கிக் கொள்ள, அது வீறிட்டு அலறுகிறது. செட்டே திரும்பிப் பார்க்கிறது. திரும்ப வித்யா வாங்கிக் கொள்ளவும்தான் அழுகை நிற்கிறது. முன் போல் போஷாக்காய் இல்லை. என்ன இருந்தாலும் தாயின் அரவணைப்பு போல் வருமா?

கவலை தட்டிப் போய் பெற்றவளைப் பார்த்து ஏதோ புதியவளைப் பார்க்கிற மாதிரி வெறிக்கிறது.

“வாடா கண்ணு.... வாடா ராஜா... என் செல்லம்... வா... வா... – ஆனமட்டும் கூப்பிட்டு பார்க்கிறாள். அது வருவேனா என்கிறது.

“போடா தங்கம்... ஆன்ட்டி கூப்பிடறாங்க பார்... போ! போ... – ராமமூர்த்தியும் கொம்பு சீவி விடுகிறான். அவளுக்கு நெஞ்சைக் கரிக்கிறது. அம்மா ஆன்ட்டியாகி விட்ட கொடுமையை ஜீரணிக்க முடியாமல் மனதுக்குள்ளேயே உடைந்து அழ ஆரம்பிக்கிறாள்.

“மேடத்துக்குதான் குழந்தைங்கன்னா எவ்வளவு பிரியம் பார்த்தீங்களா?” – செட்டில் வேடிக்கை பார்க்கும் ரசிகன் ஒருவன் முணுமுணுத்துக் கொள்கிறான்.

“பேக் அப்... – டைரக்டர் குரல் கொடுத்துவிட்டு அகல்யாவை நெருங்கி “மேடம் நீங்க வேஷத்தை கலைக்க லாம். இனி நாளைக்குத்தான் ஷூட்டிங்...” என்கிறார்... எந்த அர்த்தத்தில் சொன்னாரோ?

அகல்யா நொறுங்கிப் போகிறாள்.

“இங்க போட்ட வேஷத்தைக் கலைச்சுடலாம். வாழ்க்கைல போட்ட வேஷத்தை எப்படிக் கலைப்பேன்...?”

## முன்னதாக:

**ம**துரை கலெக்டர் அலுவலகத்தில் எனக்கொரு நண்பர் இருக்கிறார். அவரை சந்திக்க அடிக்கடி கலெக்டர் ஆபீஸ் சென்று வருவேன்.

சமீபமாக நானும் அந்த நண்பரும் 'இந்தியன்' படத்தைச் சேர்ந்து பார்த்தோம். ஊழலுக்கு எதிரான சிந்தனைகள் அதன் காரணமாக தோன்றின.

கமலஹாசனைப் போல கத்தி எடுத்து மிரட்டி ஊழலை நசுக்க முடியாது என்று முடித்தார் அவர்.

என்றால் ஊழல் இல்லாத நிலைக்கு வழி?

அவரே தனது அனுபவம் ஒன்றைச் சொன்னார்.

இந்த கதைக்கான கருவும் எனக்குக் கிட்டியது.

வினைகள் விடுவதில்லை. ஆம் அது விடுவதே யில்லை. நல்லார்க்கு நல்லவிதமாய், அல்லார்க்கு அல்லாதது மாய் அது கணக்குத் தீர்ப்பதை நானும் அனுபவத்தில் அறிந்திருக்கிறேன். அந்த அனுபவத்தை உணர்ந்தவர்கள் விலைபோய் விடுவதில்லை.

## நாலு நாள்

**அ**திசயமாக அன்று எல்லா சீட்டிலும் ஆட்கள்.

பழனிவேலுக்கு ஆச்சரியமாக இருக்கிறது!

அந்த அலுவலகத்தில் எப்பொழுதாவது இப்படி எல்லோரும் நேரத்திற்கு வந்துவிடுவதுண்டு. அனேகமாக அதற்கு ஏதாவது ஒரு வலுவான காரணம் நிச்சயம் இருக்கும்.

இன்றைய காரணம்? புது டி.ஆர்.ஓ.!

"மனுஷன் பயங்கர ஸ்ட்ரிக்டாம். மந்திரியை பேர் சொல்லி கூப்பிடற அளவு நெருங்குன பழக்கமாம்...!"

“ஏத்தாப்பூர் கலவரத்துல தனியாளா ஃபீல்டுல நின்னவ ராம்ல...?”

“அந்த ஆள் குடிக்கிற தண்ணியகூட வீட்ல இருந்து எடுத்துகிட்டு வந்திடுவார்...”

அந்த கலெக்டர் ஆபிசின் மேஜைக்கு மேஜை... காரிடார், கக்கூஸ், புண்ணியமூர்த்தி டீக்கடை, தழையத் தழைய வளர்ந்துள்ள மரநிழலடிகள் – என்று எல்லா இடங்களிலும் இதுதான் அன்றைய தலைப்புச் செய்தி.

ஜூனியர் அஸிஸ்டெண்ட் சுவாமிநாதன் முகம் இதனால் மாறினது போல் தெரிகிறது.

அருகில் நிற்கும் டிசில்வா பெனடிக்டை அதன் காரணமாக குடைகிறான்.

“மாப்ள.,. என்னடா இது, இனிமே சில்லரை பேராது போல தெரியுதே?”

“எத்தினி நாளைக்குடா? எத்தினி நாளைக்கு...? எல்லாம் நாலு நாள்தான். போய் வேலையப் பாரு. இந்தியாவுல இனிமேஒரு அரிச்சந்திரன்  இருக்கமுடியாது.

தப்புக்கு மேல தப்பாவே நின்னுகிட்டு சரியான விஷயங் களை கண்காட்சி சாமான் மாதிரி பாக்கறதுதான் எப்பவும் நம்ம வழக்கம்.

போய் வேலைய பாரு.

இந்தியாவுல எந்த நல்ல விஷயத்துக்கும் ஆயுள் நாலு நாள்தான்!”

அவர்கள் பேச்சு பழனிவேல் காதிலும் விழத்தான் செய்தது. ஆனால் அவர்மட்டும் நாலுநாள் கடந்தவர். இந்த கலெக்டர் அலுவலகத்துக்கு வந்து நாலரை வருஷமாகிவிட்டது. டெபுடி தாசில்தார் என்கிற இடத்தை கிட்டதட்ட ஒன்பதுவருட காத்திருத்தலில் கைப்பற்றியிருப்பவர்.

பெனடிக்ட் பேச்சை அவரும் அசை போடுகிறார். எந்த ஒரு நல்ல விஷயத்துக்கும் ஆயுள் இங்கே நாலு நாளைக்குதான்! அதன் பின் அதற்கு குற்ற சொரூபம் ஏற்பட்டுவிடுகிறது.

இதை தவிர்க்க முடியவில்லை.

புது ஆட்சி, புதுத் தார்ச்சாலை, புது பூங்கா, புதுவீடு புது சைக்கிள் எல்லாத்துக்கும் இது பொருந்துகிறது.

"புது டி ஆர் ஓ?"

— கேள்வியில் விழுந்தபோது பியூன் வந்து சேதி சொன்னான்.

"சார் உங்களை டி.ஆர்.ஓ. கூப்பிட்டாரு...

'முதல் அழைப்பே தனக்கா?!' பழனிவேல் பட படக்க கிளம்புகிறார். அறைக்குள் நுழைகிறார்.

"வாங்க பழனிவேல் வணக்கம்."

"நான்தான் முதல்ல சொல்லணும். நீங்கபோய்...

"என் வரையில நல்லதை முதல்ல சொல்ற ஆள் நானாத் தான் இருக்கணும் நினைக்கிறேன். உக்காருங்க."

பழனிவேலும் 'இருக்கட்டும் சார்' எனும் பாசாங்கு கள் இன்றி உட்காருகிறார்.

“உங்களைப்பத்தி நிறைய கேள்விபட்டிருக்கேன். உங்களுக்கு ஒரு வேலை கொடுக்கலாம்னு – ரொம்ப கான்ஃபிடன்ஷியல்!”

“சொல்லுங்க சார்...

— டி.ஆர்.ஓ. பழனிவேல் எதிரே ஒரு மொட்டைக் கடிதத்தைத் தூக்கிப் போடுகிறார்.

அது அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தில் வளர்ந்திருக்கும் நாவல் மற்றும் மருத மரங்களைச் சில அரசு அதிகாரிகளின் உதவியோடு ஒருவர் ஏப்பம் விட்டதைச் சொல்லி நின்றது.

“இந்த மரத்திருட்டு எந்த அளவு உண்மை இந்த அதிகாரிகள் எவ்ளோ காசு வாங்கிகிட்டு இந்த தப்பை கண்டும் காணாம இருந்திருக்காங்கன்னு எனக்கு தெரிஞ்சாகணும்.”

“ஓ.கே. சார்... இரண்டு நாள்ல என்கொயரிய முடிச்சி ரிப்போர்ட் சப்மிட் பண்ணிட்றேன். சார் ஒரு சின்ன சந்தேகம்..”

“என்ன பழனிவேல்?”

“நீங்க நேரடியா பண்ணாம என்னை என்கொயர் பண்ணச் சொல்றீங்களே என்ன காரணம்னு தெரிஞ்சுக்கலாமா?”

“ஒரே காரணம்தான். உங்க நேர்மையே எனக்கு இருக்கிற நம்பிக்கை.”

“சந்தோஷம் சார்...

பழனிவேல் வெளியே வந்தார். தன் நேர்மை மேலும் ஒருவர் நம்பிக்கை வைத்திருக்கிறார். அதிலும் வைக்க வேண்டியவர் வைத்திருக்கிறார். அதனால் அதிக மகிழ்ச்சியாக இருந்தது.

சற்று முன்வரை வாய்வுப் பிடிப்பில் முதுகுப் பக்கமெல்லாம் வலி வளைத்துக்கட்டி கபடி விளையாடிக்கொண்டிருந்தது.

இப்போது வலி தெரியவில்லை

மதிக்கப்படுதலே மருந்தோ?

உண்மைதான்!

புறம்போக்கில் காக்கை குருவி விதைபோட்டு பருவமழை தீனிபோட்டு உருளத் திரள வளர்த்த மரங்களெல்லாம் மாயமாய் மறைந்து விட்டிருந்தன.

கூட வந்த அதிகாரிகள் முகத்தில் இப்போது சவக்களை.

"ஆமா யார் செஞ்சதுன்னு தெரியலையா உங்களுக்கு?"

"சத்யமா தெரியாது சார்...

"வேண்டாம்யா... நேரா விஷயத்துக்கு வந்துடுங்க. புது டி.ஆர்.ஓ. ரொம்ப ஸ்டிரிக்டாம். என்னை பத்தியும் உங்களுக்குத் தெரியும்னு நினைக்கறேன்."

"என்ன சார் இது... யாரோ எழுதின மொட்டக் கடுதாசிய வைச்சுகிட்டு நீங்களும் இவ்வளவு பேசறீங்க..."

"யாரோ எழுதினதுதான். மொட்டக்கடுதாசிதான். ஆனா மரங்களை வெட்டியிருக்காங்களே உங்க கண்ட்ரோல்ல உள்ள ஏரியாதானே? உங்களுக்கு எதுவும் தெரியாதுன்னா எப்படி...?"

அவர்கள் இருவர் முகமும் இப்போது வேறுவிதமாக மாறுகிறது. தனியே ஒதுங்குகின்றனர். சிறிது நிமிட பேச்சுக்கு பின் பழனிவேலை நெருங்குகின்றனர்.

“சார்... நான் நேராவே விஷயத்துக்கு வந்துட்றேன். நடக்காதது ஒண்ணும் நடந்துடலை. இந்த காலத்துல ஒரு சின்னவியாபாரிகூட வியாபாரத்துல முன்னுக்குவந்து மாருதி, டாடா சுமோன்னு வாங்கிடறான். ஆனா ராவில்ல பகலில்லனு வேலை பாக்கிற நமக்கு பேசிக் டி.ஏன்னு பேருக்கு சம்பளம். தக்காளிகிலோ நாற்பதுரூபா சார்! பொண்டாட்டி பிள்ளைகளோட எத்த நம்பி சார் பிழைக்க...?”

“அப்ப காசு வாங்கிட்டுதான் வெட்ட விட்றுக்கீங்க”

“ஆமான்னே வெச்சுக்குங்க. இன்னிக்கு இல்ல நாளைக்கு தொட்டுத் தொட்டுப்போனா தெரியத்தானே போகுது?”

அதான் நேரா விஷயத்துக்கு வந்துட்டோம். மொட்டக் கடுதாசி போட்ட நாயையும் எங்களுக்குத் தெரியும். அது சத்யம் வாழணும். தர்மம் வாழணும்கறதுக்காக எழுதிப் போடலை. அதுக்கு நாங்க காசு தரலைன்னு எழுதிப்போட்ருச்சு.

பேசாம நீங்களும் ஒரு பங்கை வாங்கிகுங்க... இப்ப மட்டுமுல்ல... நாளைக்கும்!

மொத்தமா இந்த ஃபிர்காவுல. ஏழெட்டு லட்ச ரூபா சரக்கிருக்கு. அப்பப்ப அஞ்சாறு கேஸ் பிடிச்சு ஒரு ஆயிரம் பத்தாயிரம் அபராதமும் போட்டுக்குங்க – வேணாங்கலை.

“முடியாது. நான் காந்தியோட பேரன், நேதாஜியோட தாய் மாமன்னா போய்க்குங்க – எங்களுக்கு எழுந்திரிச்சு வந்துக்க தெரியும்.”

பழனிவேலு லஞ்சம் வாங்குவதை பார்க்காதவர் கேட்காதவர் இல்லை. ஆனால் அதை குற்றஉணர்வு கொஞ்சம் இன்றி நியாயப்படுத்துவது அவரை நெருடியது.

"**எ**ன்ன யோசனை?" மனைவி மருதத்தின் கேள்வி. சாப்பிடும் சாப்பாடு நெஞ்சுக்குழியில் நின்று பந்த் நடத்திக் கொண்டிருந்தது. பழனிவேலிடம் அப்படி ஒரு யோசனை.

"உங்களைத்தான்... என்னா யோசனை?" மருதம் நிமிண்டு கிறாள். பழனிவேல் நடந்ததை சொல்கிறார்.

"என்னா பண்ணப் போறீங்க. டி.ஆர்.ஓ. கிட்ட ரிப்போர்ட் பண்ணப் போறிங்களா இல்லை நீங்களும்..."

— மருதத்தை முறைத்துப் பார்க்கிறார் பழனிவேல்.

"நீங்க பிழைக்கத் தெரியாதவர்ங்கறதுதான் தெரிஞ்ச விஷயமாச்சே. நான் என்ன இன்னிக்கு நேத்தா பாக்கறேன்."

மருதம் புலம்பியபடி எழுந்து கொள்கிறாள். நேர்மைக்கு மனைவியிடம்கூட மரியாதை இல்லையோ? அவள் என்ன செய்வாள். ஆசைகாட்டும் உலகத்திடம் மனதை இழக்காமல் வாழ்வது சுலபமா என்ன?

டி.வி.யை திருகினால் ஒரே நகை கடை வியாபாரம் அடுத்து புடவை, ஏதோ பெரிய பணக்கார தேசம்போல இங்கே டெபாசிட் செய், அங்கே செய் முப்பது சதவட்டி ஊக்கத்தொகை, ஆக்கத் தொகை என்று இடைவிடாத ஆசை காட்டல்கள்.

எவ்வளவு நாள்தான் மருதம் மனதை அடக்குவாள்.

அவ்வப்போது இப்படி கீறுவதும் – அந்த வலியை பழனிவேல் தாங்கிக் கொள்வதும் காபி, டீ சாப்பிடுகின்ற மாதிரி ஒரு அன்றாட சமாச்சாரம் ஆகிவிட்டது.

"என்னை ஏதோ கேள்விப்பட்டேனே!" என்று வந்தார் முத்துசாமி..."

“என்னா?”

பழனிவேலை மனிதனாக மதித்துபழகும் ஒரே ஜீவன் வாத்யார் முத்துசாமி.

“புது டி.ஆர்.ஓ. வந்துருக்காராம். உன்னிய மாதிரியே வாம்.”

“அதுக்கென்ன முத்து...?”

“இல்லே. ஏதோ நாலு நாளைக்காவது கொஞ்சம் உங்க இலாகா பக்கம் லஞ்சக் காக்கா குருவி பறக்காது பாரு, அதான் கேட்டேன்.”

— காலையில் பெனடிக்ட் கூட இப்படிதான் சொன்னான்.

எல்லாம் நாலு நாளைக்குதான்... இதோ இப்போது முத்துசாமி. பழனிவேலிடம் கோபம் கொப்பளிக்கத் தொடங்கு கிறது.

“ஏ முத்து... நல்ல விஷயத்துக்கெல்லாம் ஆயுள் நாலு நாள் தான்னு உனக்கு யார் சொன்னா?

“யார் சொல்லணும்... பார்த்தா தெரியலையா?”

“என்னத்த நீ பார்த்தே... நான் வருஷக்கணக்குல யோக்யமா வேலை செய்யறேன். என்னை பார்த்துமா உனக்கு தெரியலை.”

“நீ யோக்யனா இருந்துட்டாப்ல உன் ஆபீஸ்ல லஞ்சமே இல்லியா? நீ வாங்கமாட்டேன்னதை உனக்கு மேலையோ கீழையோ உள்ளவன் வாங்கிட்டு போயிட்றான் உனக்கும் பிழைக்கத் தெரியாதவன்கற பட்டம்!”

— நடு மூக்கில் பார்த்துக் குத்தினமாதிரி ஒரு வேதனை பழனிவேலிடம்!

“எனக்கு எதுக்கு அந்த பாவம். நீ இப்படி ஈனா வானாவாவே இரு.”

முத்துச்சாமி கிளம்பிவிட்டார். ஈஸிசேரில் மல்லாந்து கொண்ட பழனிவேலுக்குள் சோர்வு – மலையே புரண்டு மார்பில் வந்து அமர்ந்துகொண்ட மாதிரி ஒரு பிரமை.

நாளை அந்த அதிகாரிகள்மேல் புகார் எழுதிக் கொடுப்ப தால் உரிய பலன் ஏற்படுமா? ஒருக்கால் டிஆர்ஓ போடும் அபராதத்தை கட்டிவிட்டு புரமோசனை இழந்துவிட்டு அதை சம்பாதிக்க வேறு ஊழல்களுக்கு அவர்கள் திரும்பக்கூடும்.

மாற்றம் மனதில் வராதவரை வேறு எதாலும் பலனில்லை. ஆனால் நல்ல மனங்களில்கூட இப்படி சோர்வின் ஆட்சி, என்ன செய்யலாம்?

நல்லதுக்கு காலமில்லையா? அதன் ஆயுள் நான்கு நாள்தானா? கேள்வியோடு உறங்கிப் போனார் பழனிவேல்.

**வி**டிந்து ஆபீசுக்குபோய் டிஆர்ஓ வை பார்த்து என்கொயரி ரிப்போர்ட்டை உள்ளது உள்ளபடி எழுதிக் கொடுத்துவிட்டு சீட்டில் வந்து அமர்ந்தபோதும் கூட அதே கேள்வி. ‘நல்லதுக்கு காலமுண்டா?’ இல்லை என்கிற சந்தேகம் தானே இப்படி கேள்வியாக கேட்கிறது.

ஒருக்கால் கடுமையான தண்டனைகள் இல்லாததால் தான் தவறுகள் இப்படி தாண்டவம் ஆடுகின்றதோ?

தண்டனைகள் குற்றங்களுக்குப் பயத்தோடு புத்தி கூர்மையையும் சேர்த்து அளித்துவிடுகின்றன. சரி... எது

வந்து தர்மத்தைக் காப்பாற்றும். யார் வந்து காப்பாற்ற போகிறார்கள்?

நல்லதுக்கு காலம் உண்டா? இல்லை அதன் ஆயுள் எப்போதும் நாலு நாள்தானா?

சோர்வு வந்து கவ்வியது. மனைவிமுதல் பியூன் வரை சொல்லும் 'பொழைக்கத் தெரியாத ஆள் சார் நீங்க' என்னும் வார்த்தை காதோரம் ஓடி அடங்கியது.

எதிரே குருமூர்த்தி வந்து நின்றான்.

"என்னா குரு..?"

"சார் நம்ப ஆபிஸ்ல ஒரு டூர் போகலாம்னு பிளான் போட்ருக்கோம், வர்றீங்களா?

"என்னய்யா திடீர்னு டூர் கீர்னுகிட்டு...

"குற்றாலத்துல தண்ணி திகிடு தம்பா உழுவுதாம்ல, அதான் போய் வரலாம்னு. சும்மா வாங்க சார்"

"வேணாம்பா... இந்த மாசம் பட்ஜெட் கொஞ்சம் உதைக்குது."

"சார் ஒண்ணா வேன்ல போய் வரப்போறோம். பட்ஜெட் ஜம்போ ஜெட்னுகிட்டு சும்மா வாங்க சார், வேலைவேலைன்னு தான் வருஷம் பூரா சாவறோம், வாங்க சார்... அங்க குளிச்சாலாவது உங்களுக்கு தெளியுதான்னு பாப்போம்..." கிண்டலை ரசித்து புன்னகைத்தார் பழனிவேல். பின் சம்மதித்தார்.

**வே**ன் கவிழ்ந்துவிட்டது என்கிற அந்த துக்கச் செய்தி மருதத்தை எட்டியபோது அவளுக்கு முதலில் நேரிட்டது மயக்கம்தான்.

தெளிவித்து ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போன நல்ல வேளை பழனிவேல் லேசான காயத்துடன்தான் இருந்தார். உடன்வந்தவர்களெல்லாம் எலும்புநொறுங்கி, நரம்பு அறுந்து இரண்டொருவர் கை கால்களையே இழந்து கிடந்தனர்.

"கை நீட்டி நீட்டி வாங்கும்போதே நினைச்சேன். இந்த கை நிலைக்கணுமேன்னு. இன்னிக்கு இல்லாம போச்சே. எந்த கடையிலைய்யா நரம்பும் எலும்பும் கிடைக்கும். நான் என்ன பண்ணுவேன்." – எங்கிருந்தோ ஒரு ஞானப்புலம்பல். மருதத்தின் குருதியில் ஒரு உஷ்ணக் கலக்கல். டாக்டர் எதிர்ப்படுகிறார்.

"கவலைப்படாதீங்க... உங்க வீட்டுக்காரருக்கு சின்ன காயம்தான். 'நாலுநாள்ல' டிஸ்சார்ஜ் பண்ணிடுவோம்."

நாலுநாள் என்கிற அந்த வார்த்தையை இந்த இடத்தில் இந்த விதத்தில் கேட்கிறபோது பழனிவேலுக்கு அவரை அறியாமலே சிரிப்பு வருகிறது.

அல்ஜீப்ராவைவிட சிக்கலானது தர்மக்கணக்கு. ஆனால் அதை காலம் தப்பா போடுவதே இல்லை.

●

# உ

## ஞானத்தின் விலை நாற்பதாயிரம்

ஒரு காசா இரு காசா?

முள்ளங்கிப் பத்தையாக நாற்பதாயிரம்!

அவ்வளவும் போச்சு...

ஒரு காரேஜ் ஒர்க் ஷாப்பில் குமாஸ்தாவாக கிட்டதட்ட முப்பது வருடம் குப்பை கூட்டியதற்காக வந்த ரிடயர்மென்ட் தொகை அது.

கைவசம் இருந்தவரை கோபாலனுக்கு புதிய ரத்தம் ஓடுவது போல் ஒரு தெம்பிருந்தது. படுத்தவுடன் தூங்கி, விழித்தவுடன் விடிந்து விட்டதே என்ற கவலையின்றி தைரியமாக காரியங்கள் செய்ய முடிந்தது.

நான் வெறும் பயல் இல்லை என்கிற நினைப்புதான் காரணம். அந்த நினைப்புக்கு காரணமான நாற்பதாயிரமும் இப்படியா போகும்?

முப்பது வருஷ உழைப்பை ஒரு முப்பது சதவட்டிக்கு மயங்கியதில் இழந்து விட்டார்! 'மூணு வருஷத்தில் இரட்டிப்பு, ஒரு தங்கக்காசு, ஒரு ஊட்டி ஜாலி ட்ரிப்வேறு' என்று கலர் கலராய் விளம்பரம் செய்து கபால் என்று கவிழ்த்து விட்டது அந்த ஃபைனான்ஸ் நிறுவனமும் கூட...

நிறுவன அதிபரை பிடித்து ஜெயிலில் போட்டிருக்கிறார்களாம். கோபாலன் கூட பத்திரிகையில அந்த முகரையைப் பார்த்தார். மாட்டிக் கொண்ட பயமோ கௌரவ சேதமோ துளியும் இன்றி ஏதோ இதெல்லாம், வாழ்வில் ரொம்ப சகஜம் என்று நினைப்பது போல் அந்த மனிதரிடம் போஸ் வேறு....

அவன் ஜெயிலுக்கு போனால் என்ன – போகாவிட்டால் என்ன? போட்ட பணம் திரும்புமா?

இதுதான் கோபாலன் முன் விசுவரூபம் எடுத்து நிற்கும் கேள்வி. நின்றால், அமர்ந்தால், நிமிர்ந்தால், குனிந்தால் இதுதான் கேள்வி.

"ஆசை... ஆசை... யாரை விட்டது? நூறு புத்தர் பொறந்து தெருத் தெருவா சுத்தி வந்து போதனை செஞ்சாலும் ஆசை மட்டும் மனுஷனை விடாது. பட்டாலும் புத்தி வராது.."

— தோசை வார்க்கும் போது தேவையே இல்லாமல் மருமகள் மாலா புலம்புகிறாள். அவளுக்கென்னவோ சன்யாச குணம் மாதிரி. ஒத்து ஊதுகிறான் அவள் புருஷன்

ஒரு புடவை எடுக்க நூறு துணிக்கடை ஏறி ஆயிரம் புடவையையாவது பார்த்து அதிலும் திருப்தியடையாமல் அரை மனதாக ஒரு புடவை வாங்குபவள்.

அவள் சொல்கிறாள் இப்படி... ஹும் – எல்லாம் நேரம்! தலையில் அடித்துக் கொள்கிறார் கோபாலன். காபி வருகிறது. இரண்டாவது டிகாக்ஷன் என்று ருசியில் தெரிந்து போகிறது ஏன் இப்படி என்றெல்லாம் கேட்க முடியாது. ஏதோ இதாவது கட் ஆகாமல் கிடைக்கிறதே... அதுவும் கூட பணம் திரும்ப கிடைத்தாலும் கிடைக்கும் என்று அவள் லேசாக நம்புவதால்...

அறவே கிடைக்காது என்று தெரிந்து விட்டால் கோபாலன் திண்ணைக்கு போக வேண்டி வரலாம்.

ஆமாம்...

அந்த தெருவில் அதுக்கு நிறைய உதாரணங்கள் இருக்கிறது.

கோபாலன் அதையெல்லாம் நினைத்து பெருமூச் செறிகிறார்.

பணத்தை தொலைத்ததை விடவும் இதுதான் அதிக கவலையளிக்கிறது.

“இப்படியே உக்காந்துகிட்டிருந்தா எப்படி? போலீஸ் ஸ்டேஷன்ல போய் என்னாச்சு ஏதாச்சுன்னு கேட்டு வர வேண்டியதுதானே? ஒரு வக்கீலை பார்ப்போம், விவரம் தெரிஞ்சவங்களை பாப்போம்னு இல்லாம சதா மோட்டு வளைய பார்த்து பெருமூச்சு விட்டுகிட்டு இருந்தா பணம் கிடைச்சுடுமா என்ன?”

மாலா கோபாலனை வீட்டுக்குள் படுக்க விடுவதாக இல்லை. அவரும் சோர்வோடு வீதிக்கு வருகிறார்.

இப்படி நோக்கமில்லாமல் வெளிக் கிளம்பியதே யில்லை. சோர்ந்து போனதுமில்லை இது முதல் முறை...

கால்கள் நடந்து நடந்து பழகிய முருகன் கோயில் மண்டபத்துக்குதான் போய் நிற்கின்றன.

அந்த மண்டபத்தில் சதா நான்கு கிழடுகளை பார்க்க லாம். வருபவர் போபவர் முகத்தை பார்த்துக் கொண்டும் மேலே வந்தமரும் ஈயை விரட்டிக் கொண்டும் அவர்கள் அவர்களுக்குள்

பேசியதையே பேசிக் கொண்டு இருப்பார்கள். வாரத்துக்கு ஒருமுறை குளிப்பார்களோ என்னவோ? அவர்களை பார்க்கும் போதெல்லாம் இந்த லிஸ்டில் நாமும் சேர்ந்து விடக் கூடாது என்கிற பயம் தோன்றும் கோபாலனுக்கு. இன்று அவர்களுக்கு அருகிலேயே போய் அமர வேண்டிய நிலை! "என்ன ஸ்வாமிகள்... பணம் போயிடுத்துன்னு கேள்விப்பட்டோம். இப்படியா ஏமாறுவீர்?"

"பேசாம எங்களப் போல எதையும் சேக்காமலே இருந்துருக்கலாம்."

"சேத்து வெச்சுதான் என்ன பண்ணப் போறோம் – போகும்போது கொண்டா போகப் போறோம். ஆமாம் நம்ம மாஜி சி.எம்மை என்ன பண்ணவாங்க. ஒரு 12 வருஷமாவது உள்ள வைக்கணும்.... என்ன நான் சொல்றது?"

— அவர்கள் கருத்துடன் திசை மாறுகிறார்கள். கோபாலன் மௌனமாய் ஒதுங்கி அமருகிறார். திரும்பவும் அவர்கள் சிறிதுநேரம் கழித்து ஃபைனான்ஸ் புராணம் பாடக்கூடும். கோபாலனை இளிச்சவாயனாக்கக் கூடும். இதற்காகவும், பணம் காரணமாகவும் இத்தனை துவண்டு போவது, சரியில்லை என்பது போல ஒரு ஞானம்! ஆனால் முடியவில்லையே... நாம அடிமைப் படுத்த வேண்டிய ஒன்றுக்கு நாம் அடிமையாவதா?

அடுக்கடுக்காக கேள்விகள் அவருக்குள்.

'யாரை எந்த ஜென்மத்தில் ஏமாற்றினோமோ இன்று இழந்து நிற்கிறோம் இழந்தது திரும்ப வரலாம் வராமலும் போகலாம். ஆனால் அதன் நிமித்தம் இப்போது இழந்து கொண்டிருக்கும் விஷயங்களை பார்க்கும் போது கோபாலனை அது என்னவோ செய்கிறது. பின்னாலே பணம் வரும்

என்பதற்காகவே மருமகள் இது வரை அன்பு காட்டி வந்திருக்கிறாள். மகனும் அப்படித்தான் தெரிகிறான். எப்பொழுது இவன் பணம் தொலையும் என்று காத்திருந்த மாதிரி அண்டை அயலிடம் அபிப்ராயங்கள். திண்ணைத் தூங்கிகள் எல்லாம் அபிப்ராயம் சொல்லும் அளவுக்கு நிலைமையோ போய் கொண்டிருக்கிறது. போலீசின் அனுபவத்தை நினைத்தாலோ மிளகாயை பூசிக் கொண்டது போல் எரிச்சல் மண்டுகிறது.

“ஒரு பத்து பர்சன்டை தரேன்னு சொல்லுங்க... எதையாவது பண்ணி பணத்தை வாங்கித்தர பாக்கறோம். கான்ஸ்டபிள் காதைக் கடித்தது. கடூரமாய் நினைவில் ஓடிக் கொண்டேயிருக்கிறது.

அனைத்துக்கும் மேலாக அந்த இழப்பால் இத்தனை ஒடிந்து ஓரங்கட்டிக் கொண்டு மௌனியாகி விட்டோமே...?

நான் சம்பாதித்தது – நான் இழந்ததும் படுத்தி விட்டதே... படுத்திக் கொண்டிருக்கிறதே... ச்சே... இவ்வளவு பலவீனமானவனா நான்?

சுய பச்சாதாபமும், கழிவிரக்கமும் யாருக்கு வேண்டும்?

**நெ**டுநேர சிந்தனைக்கு பிறகு நிமிறுகிறார் கோபாலன்.

இனி அந்த நாற்பதை பற்றி நினைத்தே பார்க்கக் கூடாது... அது வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி ஆனால் வரவேண்டியது வந்து விட்டதைப் போல ஒரு நினைப்பு.

அதுதான் எதற்கும் கலங்காத திடசித்தம்.

உதறி விட்டுக் கொண்டு மிடுக்காக நடக்கிறார். முன் போன்ற சோர்ந்த நடையில்லை.

பழையபடி காரேஜ் ஒர்க் ஷாப்பிற்கே போய் வேலை பார்க்க வேண்டியதுதான். என்ன அரைச் சம்பளம் தருவான்.

பரவாயில்லை. ஏதோ வண்டி ஓடும்.

வீட்டில் மருமகளின் போக்கையும் வேறு விதமாக சமாளித்துக் கொள்ள வேண்டியதுதான்.

கொடுக்கின்ற பணத்துக்கு சோறு போட்டால் போதும் என்று சொல்லிவிட வேண்டும். காபி, மாலையானால் பஜ்ஜி போண்டா சமாச்சாரங்கள். ஈஸி சேரில் மல்லாந்தபடி கேபிள் டி.வி. பார்ப்பது என்று சகல ருசியான விஷயங்களுக்கும் 144 போட்டுக் கொள்ள வேண்டியது தான்!

மருமகளிடம் மகத்தான ஆச்சரியம்.

“உங்களுக்கு என்ன வந்துச்சு... அந்த பணத்தை எப்படி திருப்பி வாங்கறதுன்னு பாக்காம திரும்ப வேலைக்கு போறேன்னுகிட்டு, அதுக்கு வர்ற வட்டியும் இப்ப நீங்க வாங்கப் போற சம்பளமும் ஒண்ணுதான் தெரியும்ல...”

தெரியும் என்கிற மாதிரி தலையாட்டி விட்டு வேலைக்கு கிளம்புகிறார். முடிவெடுத்தது போல பசிக்கு வயிற்றை நிரப்பிக் கொள்வதோடு சரி...

– இரவில் படுக்கை கூட திண்ணையில்தான்.

– அவளாக வெளியே தள்ளிவிடும் முன் தானாக வந்து விடுவது நல்லதல்லவா?

எதிர்த்து உரிமை பற்றி பேசி, பாசம் பற்றி, மதிப்பு மரியாதை பற்றியெல்லாம் பேசி எதைப் பார்க்கப் போகிறோம்.?

மூச்சு விடாதபடி ஒருவகை சத்யாக்கிரகம் நடத்துபவரை மருமகளால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

வெளியே இருந்து வரும்போது முடிந்த அளவு காய்கறி, பழம் என்று வாங்கி வந்து விடுகிறார். பதிலுக்கு ஒருவாய் காபி என்று கேட்டு குடித்து விடுவதில்லை.

உள்ளே கேபிள் டி.வி. ஓடிக் கொண்டிருந்தாலும், திண்ணையில் விசிறிக் கொண்டு வானத்து நட்சத்திரம் பார்ப்பது கௌரவமாக இருக்கிறது.

யாராவது பணம் பற்றி பேசினாலும் பதிலுக்கு அது வரும்போது வரட்டுமே என்கிற ஒரு வரி பதில்.

போலீஸ் ஸ்டேஷன் பக்கம் கூட போய் நெடு நாளாகி விட்டது.

இப்போதைய போக்கும் செயலும் திடமாக இருப்பதாகப்படுகிறது. நிறைய விஷயங்களை ஜெயித்த பல வீரனாக ஒரு வகை உணர்வு உள்ளுக்குள் ஓடிக்கொண்டேயிருக்கிறது.

நாற்பதாயிரம் ஏதோ ஒரு வகையில் தந்த ஞானம் இது.

அது இருந்தால் கூட இத்தனை திடசித்தம் வாய்த்திருக்குமா என்பது சந்தேகம்தான்.

முன்பெல்லாம் மூச்சுக்கு முன்னூறு முறை பிலாக்கணம் படிக்கும் மருமகள் கூட இப்போது மாமனாரிடம் மரியாதை வயப்பட்ட மாதிரி தெரிகிறாள்.

“உங்கப்பா என்னங்க... தன்னைத்தானே தண்டிச்சுகிட்டு? பாக்கறவங்க என்னையல்ல கொடுமைக்காரியா நினைப்பாங்க. தினம் காபியாவது குடிக்கச் சொல்லுங்க

வயசாயிட்டாலே ரொம்பதான் ரோஷம் போல" உள்ளே முணுமுணுக்கும் மருமகள் எதிரில் இப்போது நல்ல நிமிர்த்த சிரத்தோடு அழியா புன்னகை முகத்தோடு கோபாலன்.

"இதோ பாரும்மா நான் ரோஷக்காரனா இருந்திருந்தா உன் கையால சாப்பாடே வேண்டாம்னு சொல்லியிருப்பேன். அப்படியெல்லாம் இல்லை. பேராசையாலையோ இல்லை புத்தி கெட்டுப்போனதாலையோ பணத்தை தொலைச்சிட்டேன். அதுக்கு ஒரு தண்டனையாதான் நான் என்னை சுருக்கிக்கறதா நீ நினைக்கணும். இப்படி இருக்கறதும் நல்லாதான் இருக்கு. எனக்கு துளிகூட வருத்தமேயில்லை. போய் வேலைய பார்."

— கோபாலன் பேச்சு அவளை என்னவோ செய்கிறது. பதற்றமில்லாத, புன்னகை வதனத்துடன் பொய்க்கலப்பில்லாத அவரின் அந்த சுய விமர்சனம் மனதை கொத்துகிறது.

"மாமா... நீங்க ரொம்ப மாறிட்டீங்க." என்கிறாள்.

"ஆமாம்மா... அந்த பணம் என்னை மாத்திடிச்சி." இது அவர்.

"ஆமாம் மாமா... ஆனா இப்பதான் நீங்க ரொம்ப கம்பீரமா தெரியறீங்க. பணம் இருந்தப்ப கூட இத்தனை நேர்த்தியை பேச்சை உங்ககிட்ட நான் பார்த்ததில்லை."

"ஆமாம்மா... இந்த ஞானத்துக்கு நான் கொடுத்த விலைதான் நாப்பதாயிரம்."

"கரெக்ட் மாமா... பணத்துக்குள்ள நாம இருக்கறதுக்கும் நமக்குள்ள பணம் இருக்கறதுக்கும் நிறைய வித்யாசம் இருக்கு. நானும் அதை இப்ப உங்க மூலமா உணர்றேன். அது

சரி – அந்த பணம் திரும்ப கிடைச்சுடும் போல தெரியுதே. இனி என்ன செய்யப் போறீங்க? வேலைக்கு போகப் போறீங்களா இல்லை...?''

''கட்டாயம் போவேன். சாகற நாள் வரை யாராவது வேலை கொடுத்தா செய்துகிட்டே இருக்கணும். அப்பதான் இப்பல்லாம் மதிப்பு இல்லேன்னா நம்மகிட்ட இருக்கற பணத்துக்குத்தான் மதிப்பு. நமக்கு இல்ல...''

''அதனால அந்த பணத்தை யாருக்காவது நன் கொடையா கொடுத்துடப் போறீங்களா?''

– பாய்ச்சலாக, அதே சமயம் ஆழம் பார்க்கிற மாதிரி வார்த்தைகளை போடுகிறாள். அவளிடம் நிறைய எதிர்பார்ப்பு இருப்பதும் இமைத் துடிப்பில் தெரிகிறது.

''ஆமாம்மா... – கோபாலன் இப்படிச் சொல்லி மேலும் அதிர்ச்சி மூட்டுகிறார்.

''யாருக்கு?'' பதில் வேகம் மாலாவிடம்.

''உன் புருஷனுக்குத்தான்... – கோபாலனின் பதிலில் மாலா முகத்தில் ஆச்சரியமாயும் மகிழ்ச்சியாயும் உணர்வலைகள்.

''நன்கொடை தர நான் ஒண்ணும் பெரிய காசுக்காரன் இல்லை. இருந்தும் தரேன்னா அதுக்குக் காரணம் இருக்கு. பணம் இல்லாம வாழ இப்ப நான் பழகிட்டேன். ஆனா நீங்க அப்படி இல்லை. என் ஞானம் உங்களுக்கு வரும்னும் எதிர்பார்க்க முடியாது. ஆகையால தான் அந்த பணத்தை உங்களுக்கே தந்துடலாம்னு இருக்கேன்.

அதுக்காக உன் அன்புலையும் பாசத்துலையும் இப்ப இருக்கற ரேஷன் அளவை நீக்கி தாராளத்துக்கு மாறிடாதேம்மா.

ஏன்னா நான் இப்ப பணத்த மட்டுமில்ல, போலித் தனங்களையும் வெறுக்கறேன்.''

பேசிவிட்டு திண்ணையை நோக்கி நடப்பவரை விக்கித்து வெறிக்கிறாள் மாலா.

●

# 3

## நல்ல விதை

இரண்டாயிரத்தில் உலகம் அழிவதற்கான முகாந்திரங்கள் தெரிவதாகத்தான் பத்மநாபய்யர் நம்ப ஆரம்பித்திருக்கிறார். இதோ... அவர் உட்கார்ந்திருக்கும் வராண்டாவுக்கு வெளியே தார்ச்சாலையில் இல்லாத ஆற்றை ஓடவிட்டுக் கொண்டிருக்கிறான் சூரியன். பாகிஸ்தானைவிட பயங்கர பகைவனாகி விட்டான்.

ஜனக்கூட்டம் மொத்தமும் உஸ்ஸ்... உஸ்ஸ் என்று ஊதி ஊதியே ஓய்ந்து போய்க் கொண்டிருக்கிறது. மின்சாரம் வேறு தன் பங்குக்கு சூரியனோடு கூட்டணி அமைத்துக் கொண்டு விட்டிருக்கிறது.

''தாங்கலைடா சாமி... சலித்துக் கொள்கிறார்.

"என்ன பூமிடா இது... என்னாச்சு சூரியனுக்கு... விறகுக் கட்டை இல்லாமலே பொணம் எரியறதாமே...?"

— பதில் சலிப்பு பஞ்சாட்சரத்தினுடையது.

— வழக்கமாக வாசல்புறத்து வேம்புக்கு கீழ் மூங்கில் நாற்காலி போட்டுக் கொண்டு, மூக்கை பொடியால் நிரப்பிக் கொண்டு, பாலிடிக்ஸ் பேசிக் கொண்டிருந்த இந்த வயோதிகம் கடத்திகள், இப்பொழுது அதற்கு இடமில்லாததால் வராண்டா என்கிற பெயரில் உள்ள ஒரு எட்டுக்கு எட்டு திறந்த வெளியில் உட்கார்ந்து புலம்ப ஆரம்பித்திருக்கிறார்கள்.

"அந்த மரத்தை வெட்டாதடான்னேன். முன் பாகத்துல ஐநூறு சதுரம் வேஸ்டா போயிண்டிருக்கு. கட்டி வாடகைக்கு விட்டா காசு வரும்னான். இப்ப காசு வரது. ஆனா காத்துதான் வரமாட்டேங்கறது..."

"ஒத்த மரத்த வெட்டினதுக்கு இந்த புலம்பலா? ஊட்டிப் போய்ப் பார் ஊர் மரம் பூராத்தையுமே தாளிச்சிப்பிட்டான்கள். அதுக்கு என்ன சொல்வே...,"

"படுபாவிகள்... படுபாவிகள்... அல்ப காசுக்காக பூமியையே சுடுகாடாக்கறாளே. ஆட்சியில இருக்கறவாளுக்கு கண்ணே தெரியலையா?"

"வெட்டறதே அவதானே... அப்பறம் அவாளுக்கு எப்படி தெரியும்?"

கிழடுகள் இரண்டும் இப்படி புலம்புவது ஒரு நித்யப் படிதான். இது நிம்முவுக்கு பாதி புரிகிறது பாதி புரியவில்லை. எட்டு வயதுக்கு இத்தனை புரிவதே அதிகமாச்சே?

மரத்துக்கும் காத்துக்கும் என்ன சம்பந்தம்?

இன்று கேட்டு விடுவது என தீர்மானித்து கேட்டும் விடுகிறாள். இது போதாதா கிழடுகளுக்கு...

"என்னா கேட்டேடி கொழந்த... மரம் இல்லேன்னா மழை ஏதுன்னேன்? காத்த ஆத்திவிட்டு, கரியமில வாயுவை கலந்துவிட்டு நிழலைத் தந்து எத்தனை காரியம் பண்றது தெரியுமா அது?"

"அப்புறம் ஏன் வெட்றா?"

"காசு ஆசைதான். யாரை விட்டது அது?"

"ஊர்ல உனக்குகூட தோப்பெல்லாம் இருந்ததாமே?" மடக்குகிறாள் குழந்தை. காம்ப்ளக்ஸ் கட்டுகிறேன் என்று ஒருவன் வந்தான். கட்டுக்கட்டாய் பணம். சீட்டு வரிசையாக பிடித்துக் காட்டினான். ஒரு பங்குக்கு நாலு பங்கு தருகிறேன் என்றான். தந்ததில் தோப்பில் உள்ள முந்நூற்று சொச்சம் மரங்களும் பரமபதம் பார்த்தன. இப்பொழுது அங்கே ஒரு நட்சத்திர ஓட்டல். ஒருநாள் அறை வாடகை ஆயிரத்து சில்லறையாம். கொள்ளை, கொள்ளை பகல் கொள்ளை!

குழந்தை கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை. பழைய தப்பு நிமிண்டி கிள்ளுகிறது.

வித்தவனுக்கு இப்படி ஒருலாபம் இருக்கிறது. வாங்குகிறவனுக்கும் இதே மாதிரி ஒரு லாபம் இருக்கிறது. நட்டம் மொத்தமாக தேசத்துக்குதான் என்பதை சூரிய உருண்டை சொல்லிக் கொண்டிருக்கிறதோ?

பணக்காரன் ஏ.சி.க்குள் புகுந்துகொண்டு விடுகிறான். ஏழைகள்...?

உஸ்ஸ் உஸ்ஸ்தான்!

“என்ன பத்து.... பேத்தி மடக்கிபிட்டாளாக்கும்? பால் கொட்டி தண்ணி விட்ட கதைடா இந்த மரம் வெட்ற கதை... நாம ஒருத்தர் வெட்றதாலையா குடிமுழுகிடப் போறதுன்னு ஆளாளுக்கு வெட்டப்போய் இந்தியாவே மொட்டையா ஆயிடுத்துடா.

வெய்யிலால பசி போச்சு. தூக்கம் போச்சு. இன்னும் என்னெல்லாம் போகப் போறதோ...?”

“உலகமே போகப் போறது பஞ்சாட்சரம். அக்னி நம்மளை மட்டுமா வருத்தறான். உலகம் பூரா நடந்துண்டுருக்கு அவன் அட்டகாசம். எங்கப்பாரு காடு பத்திண்டு எரியறது. அண்டார்ட்டிகா பனியெல்லாம் வேற உருக ஆரம்பிச்சாச்சு.

இதுக்கு எல்நிநோ வோபுல் நிநோவோன்னு ஒரு பேர் வேற... டிவியை திருகினா எதாவது ஒண்ணு எங்கையாவது எரிஞ்சுண்டு இருக்கு. எனக்கு சுத்தமா நம்பிக்கை இல்லடா.

“பைபிள்ல சொன்னபடிதான் ஆகப்போறது”

“வாஸ்தவம்தான்... ஒரு பாட்டில் நல்ல தண்ணிக்கு இருபது ரூபா காச தரோமே. எங்கடா போய் முட்டிக்கறது?”

கிழடுகளின் நித்யப்படி புலம்பல் குழந்தை நிம்முவை மிக பாதித்ததோ என்னவோ எழுந்து உள்ளோடுகிறாள்.

**ச**மையல் கட்டில் குளித்துவிட்டு துடைக்காமல் வந்த தோரணையில் உள்ள அம்மா ரஞ்சனி கழுத்தை கட்டிக் கொள்கிறாள். அத்தனை வியர்வை!

“என்ன எழவுடி இது கழுத்த கட்டிண்டு. ஏற்கனவே கசகசன்னு பிராணன் போய்ண்டிருக்கச்சே...”

“எனக்கும்தான் கசகசன்னு இருக்கு... ஆமா நம்ப உலகம் அழியப் போறதாம்மா?”

“யார் சொன்னா... உன் தாத்தாவா?”

“ஆமா.. எங்க பார் நெருப்பு பிடிச்சுண்டு வரதாமே... மரத்தை எல்லாம் வெட்டிபுட்டோமாம்... அதனாலயாம்...”

“வராண்டால உக்காந்துண்டு வானமளக்கறாளாக்கும். வேற வேலை இருந்தாதானே...?”

“நீ, நான் கேட்டதுக்கு பதிலை சொல்லு. உலகம் அழிஞ்சுடுமா?”

“அழிஞ்சா நல்லது தாண்டா கண்ணு. எங்க பாரு கூட்டம். எதுக்கெடுத்தாலும் லைன். க்யூ! அழிஞ்சுட்டா ஆட்டோல நீ துருத்திண்டு பள்ளிக்கூடம் போறத பாத்து பயப்படவேண்டாம் பாரு. எல்.ஐ.சி. லோன் கட்ட வேண்டாம், எலெக்ட்ரிக் ட்ரெய்ன்ல கசங்கி மூச்சு முட்ட வேண்டாம். எவ்வளவோ நல்லது இருக்கோல்லயோ?”

— வேண்டா வெறுப்பாக பேசுகிறாள் ரஞ்சனி. ஆனால் அது குழந்தை மனதில் பீதியை பூசும் என்று கண்டாளோ? நிம்மு வாடிப்போகிறாள்.

தெருவில் மூக்கில் பஞ்சோடு சில பிணங்கள் போகப் பார்த்திருக்கிறாள். ‘ஏன் அந்த மாமா பஞ்சு வெச்சுண்டு படுத்துண்டு போறார்?’ என்று ரஞ்சனியிடம் கேட்டிருக்கிறாள். ‘அவர் உம்மாச்சிகிட்ட போய்ட்டாரும்மா...’ இவளும் சொல்லி வைத்திருக்கிறாள். ‘என்றால் மொத்த ஜனக்கூட்டமும் இரண்டாயிரத்துக்கு பிறகு மூக்கில் பஞ்சோடு உம்மாச்சியிடம் போய்விடப் போகிறதா? அம்மா ஆசைப்படி தன் ஆசைப்படி தான்

வைஜெயந்திமாலா தொட்டு ஐஸ்வர்யாராய் மாதிரி எல்லாம் ஆகமுடியாதா?"

– இதைத் தடுக்க வழியே இல்லையா? குழந்தை மனதில் கேள்விப்பாம்பு அநியாயத்துக்கு நெளிகிறது.

"ஏம்மா... நாம சாகாம இருக்க முடியாதா?"

"ஐய்யய்யோ... உன்னோட பெரிய இம்சையா போச்சே. சாகவே இருக்க என்ன வழின்னு போய் உன் தாத்தா கிட்டையே கேளு. அவருக்குத்தான் தெரியும். நாலு தடவை நேழியில இழுத்துப் போட்டும் எழுந்து உக்காந்துண்டு கதையடிச் சிண்டிருக்கறவர் அவர்தான்..."

— குழந்தை நேராக தாத்தாவிடம் திரும்ப வருகிறாள்.

"தாத்தா உலகம் அழிஞ்சுபோயிடும். நாமெல்லாம் செத்து போயிடுவோங்கிறியே. சாகாம இருக்க என்ன வழி?"

"ஒரே வழி தாண்டா கண்ணு. மொத்த மரம் வெட்றவா கையையும் வெட்டிப்பிடணும். அப்புறமா ஒரு மனுஷனுக்கு பத்து மரம்னு பொறுப்பெடுத்துண்டு அவா அவா ஆடுகோழி வளர்க்கற மாதிரி வளக்கணும். ஆனா அதுகளை வெட்றமாதிரி வெட்டிடப் படாது."

"அப்ப சொல்ற நீ ஏன் மரம் வளக்கலை?"

"நன்னாருக்கு... இடத்துக்கு எங்க போவேன்? அதோட வயசாயிடுத்தோல்லியோ..."

தாத்தா சமாளிக்கிறார். நிம்மு அதை கேட்டு அவரை முறைக்கிறாள்.

"சரி சரி. நீ வேர்க்குருவுக்கு பவுடர் போட்டுண்டியோ போய் உங்கம்மாவை போட்டுவிடச் சொல்லு... போ... போ அப்புறமா பாட்டி மாதிரி கேள்வி கேட்கலாம். போ... போ....

அப்றண்டா பஞ்சாட்சரம் சிலோனோட ஆடப்போற ஆட்டத்துல டெண்டுல்கர்கள் பொளக்கப் போறான் பாரு..."

மட்டை விசிறியை ஆட்டிக்கொண்டு தாத்தா கிரிக்கெட் பேசத் தொடங்க குழந்தை வாசல்பக்கமாக போகிறது.

எதிரில் ஸ்னேகிதி பத்மஜாவின் வீடு.

வெட்டாமல் விடப்பட்டிருக்கும் வேப்பமரமும் வீட்டு முன் முட்டி மோதிக் கவிழ்ந்திருக்கும் போகன் வில்லாவுமாய் உள்ள அற்புதமான நிழல்கூடு.

பத்மஜாவும் விளையாடிக் கொண்டிருக்கிறாள்.

ஓடிப்போய் இணைந்து கொள்கிறாள் குழந்தை.

"பத்மா பத்மா... நாம இனிமே நிறைய விளையாடு வோண்டி. ஏன்னா இன்னும் கொஞ்ச நாள்ல உலகம் அழிஞ்சுடப் போறதாம்..."

"யார் சொன்னா?"

"எங்க தாத்தா?"

"ஏனாம்?"

"மரத்தை எல்லாம் வெட்டிட்டாளாம். அதான் இப்படி வெய்யில் அடிக்கறதாம். எல்லாரும் எரிஞ்சு போயிடுவோமாம்."

சொல்லிக் கொண்டிருக்கும்போதே எவளோ ஒருத்தி வந்து வேப்பங்கிளையை வளைத்து ஒடிக்கிறாள்.

குழந்தை அதைப் பார்த்துவிட்டு கத்துகிறாள்.

“ஏய்... ஏய்... ஒடிக்காதே ஒடிக்காதே...

“தா... போ அப்பால! அம்ம போட்ருக்குது ஊட்லன்னு கொப்பு ஒடிச்சா பெருசா கத்துறியே..”

“ஒடிக்காதே... அப்புறம் உலகம் சீக்கிரமா அழிஞ் சிடும்”

“அப்படியா... அழியட்டும் அழியட்டும்! இருந்து என்னாத்த கிழிச்சிபுட்டோம் டி.வி. பாக்கறத தவிர...?” அவள் சர்வ அலட்சியமாக குழந்தைதானே என்று பேசியபடி கிளையின் பெரிய கொப்பை வளைத்து ஒடிக்கிறாள்.

நிம்முவுக்கு மார்பு எகிறுகிறது.

“ஒடிக்காதடி... அப்றமா உலகம் சீக்கிரமா அழிஞ்சு போயிடும்...” உச்சபட்சமாக கத்துகிறாள். அந்த பெண் ஒரு முறை முறைத்துவிட்டு கொப்புடன் நடக்கத் தொடங்க அடுத்த நொடி பறந்து சென்று தலையில் மோதித் தெறிக்கிறது கருங்கல் ஒன்று.

பட்ட வேகத்தில் ரத்தப் பாய்ச்சல் வேறு. அவள் கத்த ஆரம்பிக்கிறாள்.

“என்ன திமிரு பிள்ள உனக்கு... கல்லக் கொண்டா எரியற... உன்னை...” தலையை பிடித்தபடி அவள் ஓடி வருகிறாள். வெறிக்கும் குழந்தையை பிடிக்கிறாள்.

அப்புறமாய் என்னவெல்லாமோ நடந்து முடிந்து விட்டது.

ரஞ்சனி வந்து முதுகில் நான்கு வைத்து இழுத்துச் சென்று “எவ எக்கேடு கெட்டா உனக்கென்ன... கல்லால அடிக்கற அளவுக்கு போயிடுத்து உன் குறும்பு. வயசுக்கு மீறின வாய் வேற. வெளில போய்ப்பார் உன்காலை உடைக்கறேன்...”

பொருமியபடி திரும்ப அவளது ஏகராஜ்ய பரப்பான சமையல்கட்டுக்குள் அவள் ஏகிவிட குழந்தை மரத்தை பார்த்து அழுது கொண்டே இருக்கிறது.

நிலத்திலும் சரி, மனத்திலும் சரி நல்ல விதைகளை வளரவே விடமாட்டோமா? தன் வலியை உணர்ந்து சொல்லப் பார்த்தவளுக்காக அந்த வேப்பமரம் மட்டும் ஈரக்காற்றை அனுப்பி வைக்கிறது.

●

# 4

## ஒதுக்கீடுகள்

**ஆ**ஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பியிருந்தான் தனஞ்ஜெயன். அவன் வருகைக்காக ஒற்றைக் காலில் நின்று கொண்டிருந்த பங்கஜத்திற்கு அவனைப் பார்த்த பிறகே உயிர் மூச்சு ஒழுங்குபடுகிறது. ஓட்டமாய் ஓடி வந்து கேட்கிறாள்.

"அப்பாவுக்கு எப்படிடா இருக்கு?"

– அந்தக் கேள்விக்கு அவன் பதில் சொல்ல வாயைத் திறக்கும்போது வாசல் பக்கமாய் ஒருவர் வந்து நின்று தடுக்கிறார்.

"யாரு... என்ன வேணும் உங்களுக்கு?" தனஞ்ஜெயன் கவனம் அந்தப் பக்கம் திரும்புகிறது.

"நான் பழங்காநத்தம் அக்ரஹாரத்துல இருந்து வரேன். தென்காசி ராமசுப்பய்யர் கைலாசம் போய்ட்டார். மாமா இருக்காரா?"

"சாவு காரியமா?"

"ஆமா.. மாமா இல்லியா என்ன?"

"அவர் இல்லியே... நீங்க பத்மநாபய்யரை பார்த் தேளா?"

"பத்து மாமாவுக்கு கல்யாண காரியம் இருக்காம். அதோட சாவு காரியத்துக்கு போறதில்லேன்னு முடிவு பண்ணியிருக்காராம்."

"அப்பாவுக்கும் சுகவீனம். ஆஸ்பத்திரியில படுத்த படுக்கையா கிடக்கிறார்."

— தனஞ்ஜெயன் கைபிசையவும் வந்தவர் முகம் வாடுகிறது.

"ஊர்லேயே சாம வேதத்துக்குன்னு நீங்க இரண்டு பேர்தான் இருக்கேள். எனக்கு இப்ப என்ன பண்றதுன்னு தெரியலையே... இங்க விட்டா திண்டுக்கல்தான் போகணும். அதுக்கு அவகாசமும் இடம் தராது."

— வந்தவர் பம்முகிறார். கசங்கிப் போய் அவர் குமையும் போது "போங்கோ... நானே வந்து பண்ணி வைக்கறேன்" என்கிறான் கலாதரன்.

அவர் சங்கடம் நீங்கித் திரும்புகிறார்.

"போகட்டும் அப்பாவுக்கு எப்படிடா இருக்கு... அதைச் சொல் முதல்ல... ஏதோ பணக்கார வியாதி அப்படி இப்படின் னியே... பரபரக்கிறாள் பங்கஜம்.

"இரண்டு கிட்னியும் கெட்டுப் போச்சும்மா. உடனடியா கிட்டினிய மாத்தணுமாம்."

— அதைக் கேட்ட மறுவினாடி பங்கஜம் இடி விழுந்தது போலாகிறாள்.

ஒரு காலத்தில் ஊருக்கு வெளியில்தான் இருந்தது அந்தச் சுடுகாடு. இப்பொழுது அது ஊருக்குள் ஒரு அங்கமாகி விட்டது. அடர்ந்த மரக் கூட்டத்தோடு அந்நியப்பட்டு, அநியாயத்துக்கு ஊரை மிரட்டிக் கொண்டிருந்த அந்த சுடுகாட்டை சுற்றிலுமே இப்போது பிளாட்டுகள் வதவதவென்று வந்துவிட்டன.

ஜல்லிதான் அந்த சுடுகாட்டு பிணம் எரிக்கும் தொழிலாளி...

சதா போதையோடு, வாயில் பீடியோடும், அழுக்கு உடையோடும் பார்க்கச்சற்று விகாரமாய்த் தெரிந் தாலும் வாயைத் திறந்தால் உலக விஷயங்கள் பொத்துக் கொண்டு கொட்டக் காணலாம்.

இப்போதெல்லாம் ஜல்லி மிக சோகமாகத் தெரி கிறான்.

காரணம் அந்த கிரிமிடோரியம் என்னும் எலெக்ட்ரிக் சுடுகாடு!

இதனால் ஜல்லியின் வயிற்றில் பெரிதாகவே அடி.

அதையும் மீறி பிழைப்பு நடக்கிறதென்றால் அது அவன் வரையில் பஞ்சு சாஸ்திரியால்தான்!

"சாமி... நான் செத்தா எனக்கும் இந்த மாதிரி மந்திரம் சொல்லிக் கரை ஏத்தி விடுங்க சாமி... இல்லாட்டி மனுஷனா இங்க அல்லாடறது போதாதுன்னு ஆவியாவும் அல்லாடும்படி ஆயிடப் போகுது." என்பான்!

சிரிப்பார் சாஸ்திரிகள்...

ஜல்லியைப் பார்க்க அவனது மகன் பழனி ஒரு வாடகை சைக்கிளில் வந்து இறங்குகிறான் வெடிக்கிறான் ஜல்லி.

"கூறு கெட்ட பயலே... உன்னிய காட்டுப் பக்கம் வரக்கூடாதுன்னு எத்தினி தபா சொல்லியிருப்பேன்?"

"அட... அப்ளிகேஷன் போடக் காசில்ல நைனா வாங்கிட்டுப் போகலாம்னு வந்தேன்."

"இன்னும் ஒரு பொணம் கூட வர்லடா...

"தண்ணி மட்டும் அடிச்சிருக்கே. அதுக்கு மட்டும் காசிருக்கா?"

"கடன்டா மொள்ளமாரி... வைய்யும்போது ராம சுப்பய்யர் சடலம் காட்டுப் பாதையில் தென்பட்டது. அதைப் பார்க்கவும் ஜல்லியிடம் உற்சாகம்.

"அப்படி தூரப் போய் நில்லு. பஞ்சய்யர் காரியம் அவர் வந்த உடனே அட்வான்ஸ் வாங்கி உனக்கு வெட்றேன்."

— ஜல்லி சொல்லித் திரும்புகிறான். சடலம் கூரைமுன் வந்து தோளைவிட்டு இறங்குகிறது.

ஆனால் பஞ்சு சாஸ்திரிகளைத்தான் காண வில்லை.

"ஐயர் வரலியா?"

"அவர் மகன்தான் இன்னிக்கு அய்யர்" – தனஞ்ஜெயனை கை காட்டுகிறார் ஒருவர்.

"ஆரு... இவர்தான் சின்னய்யரா? சின்னசாமி அப்பா வரலீங்களா?"

"அவர் உடம்புக்கு முடியாம ஆஸ்பத்திரியில் கிடக்க றாரு."

"என்ன உடம்புக்கு?"

"உனக்கு எதுக்கு அதெல்லாம்... நீ வேலைய கவனி... தனஞ்ஜெயன் சொல்லிக் கொண்டே சிதையருகே வரச் சொல்கிறான் ஒருவரை. அப்படியே பார்வை பழனியின் மேலும் படுகிறது.

இவன்...?

இவன்....?

நான் போன ஒரு இன்டர்வியூவிற்கு வந்தவர்களில் இவனும் ஒருவனாயிற்றே...?!"

பழனியும் தனஞ்ஜெயனைப் பார்த்து வாய் பிளக் கிறான். எப்படியோ காரியங்கள் மளமளவென்று நடந்து முடிகின்றன.

"இங்கவா... இந்தா... – தனஞ்ஜெயன் முடிந்து திரும்பும்போது ஜல்லியை அழைத்து அவன் கையில் கூலியை வைக்கிறான். ஐம்பது ரூபாய் கூடுதலாகவே இருக்கிறது.

ஜல்லிக்குள் சில்லிப்பு. கூடவே கவலையின் வியாபிப்பு.

பஞ்சய்யருக்கு என்ன உடம்பு சாமி..." – திரும்பக் கேட் கிறான்.

"கிட்னி பிராப்ளம்னா உனக்குப் புரியுமா?"

"மூத்திரப்பை கோளாறும்பாங்களே... அதா?"

"அதேதான்...

— ஜல்லிக்கு தூக்கிவாரிப் போட்டது!

ஆஸ்பத்திரிக்கே வந்து விட்டான் ஜல்லி!

“சாமி... என்ன சாமி இது கோலம்?” – குரலில் உடைந்து கண்களில் கரைகிறான்.

பஞ்சு சாஸ்திரிகள் அந்த நிலையிலும் சிரிக்கிறார்.

“பொழப்பு எப்படி நடக்கறது ஜல்லி.”

“அத உடுங்க... உங்களுக்கா இப்படி ஒரு நிலை.”

“உங்களுக்கான்னா.... நான் என்ன பெரிய மகானா அந்த மகான்களுக்கே வியாதிகள் வந்திருக்கு தெரியுமோ...?”

“நல்லவன் கெட்டவன்னு எல்லாருக்கும் வியாதி வந்தா அந்த சாமி எதுக்கு சாமி?”

“சாமி என்ன பண்ணும். எல்லாம் என் கர்மா. ஆமா உன் பையனுக்கு ஏதாவது வேலை.”

“இது பணத்தோட யுகம்னு நீங்க தானே சொல்வீங்க. தார்ரோடு போடற வேலைக்கு கூட காண்ட்ராக்டருக்கு மால் வெட்ட வேண்டியிருக்கு.”

— பஞ்சு சாஸ்திரிகள் வியாதிக்காக வருந்தியதை விட இதற்காக அதிகம் வருந்துகிறார்.

“சரி இப்ப என்ன பண்றான்?”

“அரைமனசா அப்பப்ப வந்து கட்டைங்கள எரிக்றான். பார்வையால நிதமும் என்னை எரிக்கிறான்.”

— ஜல்லி பேசுவதைக் கேட்டு சற்று கண்கள் கசிகிறார். “போகட்டும் விடுங்கசாமி... உங்க உடம்பு இப்ப எப்படி இருக்கு?”

“இருக்கு... யாராவது கிட்னி தானம் பண்ணினா நான் கரை சேரலாம். அம்பது அறுபது ரூபா செலவாகும்கறார் டாக்டர். நான் சொல்றது பெரிய அம்பது அறுபது... நான் எங்க போவேன் அதுக்கு...”

“என் மகனுக்கு கூட பத்து ரூபா தந்தா ஒரு வேலை போட்டுத்தரேங்கறார் ஒரு அதிகாரி. வெறுப்பா இருக்கு சாமி. பேசாம ஒரு பேங்க்கை தாளிச்சிட்டா தப்பில்லைன்னு தோணுது..”

கலக்கத்தோடு படுத்திருக்கிறார் சாஸ்திரிகள். பக்க மாய்ப் படுக்கைகள் நோயாளிகள் சலசலப்பான பேச்சு...

‘என்னவாம்?’

‘இரண்டு நாளாய் நகரில் நாலைந்து இடங்களில் முகமூடிக் கொள்ளையாம். ஒருவனுக்கு ஐம்பது வயதுக்கு மேல், மீதமுள்ள இருவருக்கு இளவயதாம்... அதற்குமேல் விபரம் தெரியவில்லையாம்...!’

அரிசியில் கல் பொறுக்கும் போது பங்கஜம் எதிரில் பஞ்சு சாஸ்திரிகள் நடுங்கியபடி போய் நிற்கிறார்.

அவளுக்கு கெண்டைக் காலை நட்டுவாக்கிளி கவ்வின மாதிரி இருக்கிறது.

“என்னான்னா இது... இப்படி வந்து நிக்கறேள்?”

“அதெல்லாம் இருக்கட்டும்... உன் பிள்ளையாண்டான் எங்கே?

“காட்டுக்குக் காரியம் பண்ணன்னா போயிருக்கான்.”

“அப்படின்னு பொய் சொல்லிட்டுப் போய்ட்டானா?”

“நீங்க என்ன சொல்றேள்?”

“எனக்கு எல்லாம் தெரியும் பங்கஜா. அவன் நக்சலைட் ஆகி என்னை காப்பாத்தலாம்னு நினைக்கறான். அதுக்கு நான் ஒத்துக்க மாட்டேன்”

“முதல்ல உக்காருங்கோ.... நிதானமாப் பேசுங்கோ. என்ன நடந்தது?”

“தனஞ்ஜெயனை நான் பாக்கற வரை எனக்கு நிதானம் வராது பங்கஜா.”

“அவன் பிச்சாண்டி ஆத்து சாவுக்கு காரியம் பண்ணக் காட்டுக்குப் போயிருக்கான்.”

“நீ பொய் சொல்றே?”

“இதுல நான் பொய் சொல்ல என்ன இருக்கு.”

“அப்படின்னா இப்பவே வா காட்டுக்கு... காட்டு பார்ப்போம்.”

“இந்த உடம்போடையா... வேணாம்னா...

— பங்கஜத்தின் பதைப்பை அவர் பொருட்படுத்தவே யில்லை. திரும்பி நடக்கிறார்....

“எங்க போறேள்?”

“சுடுகாட்டுக்கு...

“இருங்க நானும் வரேன்.”

அந்த சைக்கிள் ரிக்ஷா எலிக்குஞ்சு கத்துவது போன்ற சப்தத்துடன் அந்த மயானத்துக்குள் நுழைகிறது.

"அப்பா நீங்களா?" – ஒரு பிணத்தின் கால் மாட்டில் இருந்து விலகி வெளி வந்து சாஸ்திரிகளை நெருங்குகிறான் தனஞ்ஜெயன். கூடவே கையில் தடியோடு பழனி.

பஞ்சு சாஸ்திரிகள் தடுமாறிப் போகிறார்.

"இப்ப நம்பறேளா" – பங்கஜா இடையிடுகிறாள்.

"நம்பறேன்... நம்பறேன்... ஆமா எங்க ஜல்லி?"

"அவன் ஆஸ்பத்திரியிலன்னா... இருக்கான்...!"

"அவனுக்கென்ன?"

"அவனுக்கென்னவா... அவன்தானே கிட்னிய உங்களுக்கு தானமா தரப்போறவன்!"

— பஞ்சு சாஸ்திரி ஒரு வினாடி உலுக்கப்படுகிறார்.

"நிஜமாவா?"

"ஆமான்னா.... உங்க மனசு ஒத்துப்போன மாதிரி அதுவும் ஒத்துப் போயிடுத்து. எடுத்துண்டுதான் தீரணும் னுட்டான் ஜல்லி..."

"என்னப்பா திருடப் போயிட்டதா நினைச்சுட்டேளா?"

"வந்து வந்து...

"அட என்ன சாமி நீங்க... உங்க விசாரத்தப் பார்த்து உக்காந்து யோசிச்சு தூங்க இந்த வேலையே மகா பெரிசுன்னு நினைச்சுப் பாத்து வந்துட்டோம். நீங்க தப்பா நினைச்சுட்டீங்களே..."

"அது... அது... என்னால இப்பகூட நம்ப முடியலை பழனி அதான்... அதான்..."

நம்புங்க... லஞ்சம் கொடுத்து படிச்சு, லஞ்சம் கொடுத்து வேலை வாங்கி அதைச் சரிகட்ட லஞ்சம் வாங்கி பொழக்கறதை விட இந்த மனுஷக் குப்பைங்கள எரிக்கற வேலை பெரிசு. அதுக்கு நல்ல பாதை காட்ற மந்திரம் சொல்றது அதைவிடப் பெரிசு. இதை விடவா அப்ளிகேஷன் போட்டு காத்திருக்கிறதும் கவலைப்படற தும் பரிசு?''

— பழனி பொட்டிலடிக்கிறான். சாஸ்திரிகள் சந்தோஷமாய் கும்பிடு ஒன்று போடுகிறார்.

ரிக்ஷா திரும்பத் தொடங்குகிறது.

"அப்பா ஆஸ்பத்திரிக்குப் போங்கோ... தனஞ் ஜெயன் கத்துகிறான்.

"இனி எனக்கு ஆபரேஷன்கறது வெறுமன பேருக்கு தான் பங்கஜா. பசங்க பாலை வார்த்துட்டாங்க... நான் லேசாயிட்டேன்'' – என்கிறார் சாஸ்திரிகள்.

ஆமோதிப்பது போல தன் மேல் சாய்ந்து அவரது சிரத்தை கனிவாய் வருடத் தொடங்குகிறாள் பங்கஜம்!

மேலே முடிந்த விதம் சரியில்லை என்று நினைப்ப வர்களுக்காக இந்த முடிவு...?

ரிக்ஷா மறையவும் இடுப்பில் மறைந்து கிடக்கும் அந்த முகமூடிகளை எடுத்து ஒரு எரியும் சிதைக்கு மேல் விட்டெறி கின்றனர் இருவரும்!

# 5

## புலியன்

**க**வலை ததும்பத் தெரிகிறார் கன்னியப்ப கவுண்டர்! ஆகிருதியான ஆஞ்சனேய தேகம். புகைவிட்டபடி குறுக்கிலும் நெடுக்கிலும் கோட்டைக்காவலன்போல நடந்து கொண்டிருக்கிறார். அருகிலேயே வாத்யார், சின்னப் பண்ணை, போஸ்ட்மாஸ்டர். பொன்னியம்மன் கோவில் பூசாரி என்கிற வரிசை வேறு...

"எனக்கென்னவோ போலீசுக்குப் போறதுதான் உசிதம்னு படுது."

போஸ்ட் மாஸ்டர் தன் பங்குக்கு வாய் திறக்கிறார்.

"அக்காம்வே... பேசாம இனிசுபெக்டரை பார்த்து அந்த கள்ளன் பத்தி விலாவரியா பேசித்திரும்புவோம் அதான் சரி." என்று ஒத்து ஊதுகிறார் வாத்யார்.

கன்னியப்ப கவுண்டர் பார்வை இருவரையும் துளைக்கிறது.

'ஏன் எனக்கு போகத்தெரியாதோ.... தெரியாமத் தான் நான் இந்த நடை நடக்கிறேனா?' என்று அவரது இடுங்கின புருவத்தில் பதில் வந்து நிற்கிறது!

சுற்றி இருப்பவர்களின் தர்க்கத்தை சற்று முறைப்புடன் அணுகும் கவுண்டர் ஒரு முடிவுக்கு வந்த மாதிரி நடையை நிறுத்துகிறார்.

“போலீசுக்கெல்லாம் போவமாட்டேன். வரட்டும் அந்த புலியன். அவனாச்சு, நானாச்சு. அவன் விட்ட சவாலை நான் ஏத்துக்கிட்டதா சொல்லு. என் வீட்டு நடுக்கூடத்துல நான் என் அத்தினி செல்வத்தையும் வெச்சுட்டுக் காத்திருப்பேன். வர்ற பௌர்ணமிதான் கடைசிநாள். வந்து அவன் என்னிய தட்டிக்கு கொண்டு போய்ட்டா அவன் சூரன்! எண்ணிய தட்டுனெ தட்டுக்கே அது அவனுக்கு சொந்தம். இவனைப் பிடிக்கறதுக்காக நூறு வருஷம் பெருமையை நான் இழக்கணுமா? போலீஸ் வராத மண்ணாத்தான் இது இருக்கணும் இருக்கும். அதே சமயம் அவனும் அடிப்பட்டு நாறிப்போவான். பாக்கத்தானே போறீங்க...”

புலியன் ஒண்ணா நம்பர் வருசநாட்டு கள்ளன்.

மலைக்கு மலை தாவி மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறான். மிட்டா மிராசுகளாக பார்த்து மிரட்டியும் கன்னம் வைத்தும் கொழுத்துக்கிடக்கிறான். ஒரு பக்கம் ஏழை பாழைகளுக்கு வாரி இறைக்கவும் தவறுவதில்லை. எத்தனையோ ஏழைஜனங்கள் கல்யாணம் வைத்துவிட்டு நம்பிக்கையோடு மலைப்பக்கம் சென்று அவனுக்குப் பத்திரிகை வைத்து பதிலுக்கு அவன்தரும் பவுன் நகைகளை வாங்கிவந்து தங்கள் பெண்களை கரை சேர்த்திருக்கின்றனர். மொத்தத்தில் இதுநாள் வரையில் தோல்வியே கண்டிராதவன். கன்னியப்ப கவுண்டர் வீட்டுக்கு கன்னம் வைக்கப்போவதாக சொல்லி அனுப்பியிருக்கிறான். முடிந்தால் சொத்தை காபந்து செய்து கொள்ளலாமாம்.

அவனுக்கும் தெரியும்... கவுண்டர் போலீஸ் துணையை கோரமாட்டார் என்று!

ஆகக்கூடி போட்டி ஆரம்பமாகிவிட்டது. தோல்வியே காணாத இரண்டு மலைகள் மோதிக் கொள்ளப் போகின்றனர்.

ஜெயிக்கப் போவது?

“சின்ன பண்ணை கவுண்டர் செய்யறது பத்தி என்னய்யா நினைக்கிறீர்?” வாத்யார் காதை கடிக்கிறார்.

“நினைக்க என்ன இருக்கு... அவரைப் பத்திதான் தெரிஞ்ச தாச்சே...”

“இப்படி சொன்னா எப்படி? புலியன் பத்தி நமக்கு நல்லா தெரியும். அவன் வல்லாள கண்டன். கவுண்டரும் தைரிய சாலிதான். ஆனா போட்டின்னு வந்துட்டா புலியன் ஈவு இரக்கம் காட்டமாட்டான். அப்பால அழிவு நமக்குதான். கவுண்டர் அந்த மட்டுல குருட்டு தைரியமா பரம்பரை பெருமை அது இதுன்னு அள்ளிவிட்டுக்கிட்டு ஆப்பட்டுகிட்டா?”

“அதான் எனக்கும் என்ன பண்றதுன்னு தெரியலே...?”

“தெரியலியா... வாய்யா நாம போலீசுக்குப் போவோம். கவுண்டர்தான் போலீசு வராத ஊருன்னு கதை பேசிகிட்டு வறட்டு பெருமை பாக்கறாருன்னா நாமுமா?”

“கவுண்டருக்குச் தெரிஞ்சா நொச்சிப்புடுவார்...

“தெரிஞ்சா தானே?”

“அப்படின்னா...?”

“தெரியாம போவோம்கறேன். இன்னொரு விஷயம் அதுல என்னன்னா புலியனைப் பிடிச்சு கொடுத்தா லட்ச ரூவா வேற ரிவார்டு இருக்கு. ஆளுக்குப் பாதி பங்கு போட்டுக்கலாம் என்ன சொல்றீர்?”

வாத்யார் பேசின ஜோரில் விடு விடு என்று கிளம்ப ஐம்பதாயிரம் ஆசையில் சின்னப் பண்ணையும் பின் தொடர...

இரவானால் பௌர்ணமி. பட்டப்பகல் தேய்ந்து கொண்டிருக்கிறது. புலியன் எப்படியும் அர்த்தராத்திரிக்கு தான் வருவான் என்பது ஊரின் நம்பிக்கையாக இருக்கிறது. ஆகையால் பகலில் அவரவர்கள் வேலையில் அவரவர்கள் மூழ்கியிருக்க வாத்யார் மட்டும் ஒரு மூன்றாவது கண் கூடுதலாக முளைத்தது போல கவுண்டர் வீட்டுப்புறம் ஒரு பார்வையும் வீட்டுக்கு அருகாமையில் உள்ள பொன்னியம்மன் கோவிலில் ஒரு பார்வையுமாக இருக்கிறார். கோவில் மண்டபத்தின் மேல் ஒரு பிச்சைக்கார கோஷ்டி போல ஆடுபுலி ஆட்டம் ஆடியபடி மாறு வேடத்தில் போலீஸ்! அவர்களுடன் கலந்து விளையாடும் சின்னப் பண்ணை வேறு...

கவுண்டரும் தன் மொத்த செல்வத்தையும் நடுஹாலில் பரப்பிக்கொண்டு நடைநடந்தபடி இருக்கிறார். சுற்றிலும் அப்படியும் இப்படியுமாய் ஒரு நாலு வேலையாட்கள். கரு வேலந்தடி வீச்சரிவாள் என்கிற ஆயுதங்களோடு அவர்களும் பந்தா காட்டிக் கொண்டு தானிருக்கின்றனர்.

இப்பொழுது கவுண்டர் வீட்டு வாசலில் ஒரு மாட்டு வண்டி வந்து நிற்கிறது. வண்டியில் இருந்து இறங்குபவன் ஒரு மூட்டையை வேறு தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு உள்ளே நுழைகிறான்.

கவுண்டரும் ஆர்வமாக பார்த்துக் கொண்டே வேலை யாட்களை கேட்கிறார்.

“எலே யாருடா இது மூட்டையோட...?”

“விதை நெல்லுங்க முதலாளி... நம்ப சத்யமங்கலத்தார் கொடுத்தனுப்பியிருக்காங்க...”

“இப்ப எதுக்குடா விதைநெல்லும் மண்ணாங்கட்டியும்...?”

அவர் கேட்டுக் கொண்டிருக்கும் போதே அவன் வராண்டா கடந்து உள்ளே ஹாலுக்குள் வந்துவிடுகிறான். மூட்டையை இறக்கிவிட்டு உருமாலை கழற்றுகிறான்.

கழுத்துப்புறம், கன்னம் தோள் பட்டையில் எல்லாம் சூட்டுப் தழும்புகள். கவுண்டர் முகம் அவனை பார்த்த நொடியில் ஏதோ கணக்குப்போடத் தொடங்க அவனிடம் புயல்வேகம். சட்டென்று இடுப்பில் இருந்து ஒரு ரிவால்வரை எடுத்து எதிரில் நீட்டுகிறான்.

"என்னா கவுண்டரே... பக்குன்னு இருக்குதா? நான் தான் புலியன். பாத்தீங்களா சொன்ன மாதிரி வந்துட்டேன். அதுலையும் பகல்லையே..." அவன் பேசப்பேச வேலையாட்கள் அசமந்தமாய் சிரிக்கின்றனர்!

"டேய் நிக்கிறீங்களே பிடிங்கடா... தீவிட்டிகளா.." கத்து கிறார். கவுண்டர். அவர்கள் தாடையை சொறிகின்றனர்.

"என்னடா.. வேடிக்கை பாத்துகிட்டு..?"

"வேடிக்கை இல்லை கவுண்டரே... அவங்கல்லாம் இப்ப என் ஆளுங்க. எத்தனை நாளைக்குதான் கை ஏந்திகிட்டே இருப்பாங்க... அதான் அடிக்கறதுல சரிபாதி அவங்களுக் குன்னேன். கட்சி மாறிட்டாங்க..." புலியனின் விளக்கம் கவுண்டரை கலங்க அடிக்கிறது. பணியாட்களை நெருப்பு விழிகளோடு ஏறிடவைக்கிறது. அப்பொழுது வாத்யார் உள் நுழைகிறார். துப்பாக்கியுடன் புலியனைப் பார்த்துவிட்டு வந்தவேகத்தில் பின்ஓடுகிறார் அவரது உதட்டில் "போலீஸ் போலீஸ்" என்கிற கூக்குரல்.

புலியன் உடனேயே நெருப்பாகிறான்.

"டேய் அண்ணாமலை வெளிய பாருடா.." என்று வேலைக் காரன் ஒருவனை தள்ளிவிட அவன் வெளியே போய் பார்த்துவிட்டு படு வேகமாக உள் நுழைகிறான். "கோவில்ல போலீஸ் இருக்கு போல. வாத்தியார் கூட்டிகிட்டு வரான். ஓடி வராங்க..." புலியனை விடவும் இந்த பதில் கவுண்டரைதான் பெரிதாக தாக்குகிறது.

"இருக்காது... என்று பதிலுக்கு கத்திவிட்டு வாசல் புறமாக ஓடுகிறார். இதற்குள்ளாகவே வீட்டை சுற்றி வளைத்து விடுகிறது போலீஸ்.

கவுண்டரிடம் பதட்டம் அடங்கின மாதிரி தெரியவில்லை. அது உள்ளே புலியன் இருப்பதாலா இல்லை வெளியே போலீஸ் வந்து விட்டதாலா என்று தெரியவில்லை.

புலியனும் உள்ளே துப்பாக்கியோட வெறியின் உச்சிக்கும் வெளியே போக முடியாதபடிக்கும் மாட்டிக் கொண்டு கருவுகிறான்.

"எலேய் என்னாடா... உயிரை விட்டாலும் விடுவான் போலீசுக்கே போக மாட்டான்னே போயிட்டானேடா. தப்பா தகவல் தந்து எனக்கே அல்வா கொடுக்க நினைச்சுட் டீங்களா?"

"ஐயோ இல்ல புலி... இது அந்த வாத்யார் வேலையா தான் இருக்கணும்." இடையில் உள்ளே வரும் கவுண்டர் கத்துகிறார்.

"புலியா ஒளிஞ்சுக்க... உன்னை போலீஸ் பிடிக்க நான் விடமாட்டேன். வாத்யார் எனக்கு தெரியாம எட்டப்பன் வேலை பாத்துட்டான். நான் உயிரோட இருக்கற வரைக்கும் இந்த மண்ணுல போலீஸ் தன்னோட சுழிய போடவிடமாட்டேன். முன்ன ஒண்ணு பின்ன ஒண்ணு என்கிட்ட கிடையாது.

விளிஞ்சுக்கய்யா.'' உக்ரமாய் பேசிக்கொண்டே புலியனைப் பிடித்து உள்ளே நடு அறைக்குள் தள்ளிப் பூட்டுகிறார். பின்னா லேயே வாத்யாரும் இன்ஸ்பெக்டரும் உள்ளே நுழைகின்றனர்.

"அறிவில்ல.. இப்படியா திருடன் வரதுக்கு முந்தியே இந்த வாத்யான் சொல்லிட்டான்னு வருவீங்க. இங்க ஒரு பய இல்லை. என் வீட்டுக்குள்ள வர எந்த திருடனுக்குய்யா தில் இருக்கு? இத்தினி வேலைக்காரங்க இருக்காங்களே விட்றுவாங்களா திருடன் வந்தா..?'' கவுண்டரின் அதட்டல் முன் இன்ஸ்பெக்டரே சற்று சுணங்கித்தான் போகிறார். வாத்யாரைப் பார்க்கிறார். வாத்யாரிடம் பதட்டம்.

"கவுண்டரே... வேணாம் வறட்டு கௌரவம் பாக்கா தீங்க. புலியனை நான் துப்பாக்கியோட இப்ப பாத்தேனே...''

"அட அது நம்ம அண்ணாமலைய்யா... இல்ல அண்ணாமலை?''

அண்ணாமலை அசடு வழிய ஆமோதிக்க வாத்யார் முகம் கோணமாணலாக மாறிப்போகிறது. இன்ஸ்பெக்டர் கோபமாக வெளியே செல்லத் தொடங்க வாத்யாரும் தயங்கித் தயங்கி வெளியேறுகிறார்.

அவர்கள் வெளியேறிய மறு நொடியில் அத்தனை வேலைக்காரர்களும் கவுண்டரின் காலில் விழுகின்றனர். கதவைத் திறந்துகொண்டு வெளியில் வரும் புலியன் கூட கவுண்டரை பிரமை பிடித்த மாதிரி பார்க்கிறான். நெருங்கி வந்து காலில் விழுகிறான்.

"கவுண்டரே முதுகுல குத்தி ஜெயிக்க பாத்த என்னை நேருக்கு நேரா பிடிக்க சந்தர்ப்பம் வந்தும் அதை மறுத்துட்டு நீ

நீயாவே நின்னுட்டே. சரியான பெரியமனுஷன் நீ தான்யா! சொல்லுல நிக்கறதுன்னா என்னன்னும் தெரிஞ்சுகிட்டேன்யா தெரிஞ்சுகிட்டேன்" என்கிறான்.

எங்கே நிமிர முடியாமல் போய் விடுமோ என்கிற இக்கட்டில் இருந்த கவுண்டரின் சிரம் ராஜகம்பீரத்தோடு நிமிர ஆரம் பிக்கிறது.

●

# 6

## தேரு வருதே

சொக்கமாயன் வந்து போஸ்டர் ஒட்டிவிட்டுப் போகிறான். வீதியின் சிறிசுகளும் பெரிசுகளும் ஓடிச்சென்று ஆவலாகப் பார்க்கிறார்கள். 'தேர்த்திருவிழா' பற்றிய அறிவிப்பு!

"ஃப்பூ, இதுக்குத்தானா இத்தனை பெரிய போஸ்டர்?" அலுத்துக் கொள்கிறான் சண்முக மணி.

"தேர்த்திருவிழாவா...? பலே! பத்து வருஷமா ஓடாத தேரை ஒட்டப் போறாங்களோ?" அங்கிருந்து கொண்டு முணுமுணுப்பவன் முனுசாமி.

"எலே சொக்க மாயா... கொட்டாய்ல படம் மாத்தலையா? எதாச்சும் மலையாள படபோஸ்டரு போட்டு பட்டை கிளப்புவேனு பாத்தா தேரு, திருவிழான்னு ஒட்டி சொதப்பிட்டியேடா..." ஒரு பெருசு பலமாகவே பொருமு கிறது.

“யோவ் பெருசு... மலையாள படமா பாத்த பாவத்துக்கு தேர் இழுத்து புண்ணியத்த கட்டிக்க. அப்பால படம் பாக்கலாம். அடுத்த வாரம் படம் மாத்தறோம். சூப்பர் கலர் படம். பேர் ‘மன்மத மாமாவும் ரதி மாமியும்...’ எப்படி?”

“போடு... அப்பிடிப்போடு... இப்பவே சீட்டு போட்டுவைலே...

ராதாகிருஷ்ணபுரத்தின் ஒரு தெரு முனையில்தான் இப்படி கிளுகிளுப்பான உரையாடலும், ரிசர்வேஷனும்... மகா பிரசித்தி பெற்ற கோபால கிருஷ்ணர் கோவிலும் அந்த கோவிலின் தேரும் ஏரியா பிரசித்தி.

திருவாரூர் தேரைப் பற்றி பேசிப் பேசியே அதைப் பெரிதாக்கிவிட்டார்கள். ராதாகிருஷ்ணபுரத்தின் கோவில் தேர் திருவாரூர் தேர், அவினாசி தேர் என்று எல்லா ஊர் தேர்களையும் விட பெரிது.

கோவிலுக்கு வடக்கு முக்கில் பெரிய தகர கொட்டகை போட்டு மூடி வைத்திருக்கிறார்கள். நல்ல பத்துமணி விலைப் போதில் பார்த்தால் சூரிய ஜொலிப்பில் வெள்ளி ரதமாட்டம் தெரியும். மாலையில் கொஞ்சம் மஞ்சள் கலந்து பொன் வண்ணம் காட்டும்.

தேருக்கு கீழே தான் வெற்றிலைக் கவுளியில் இருந்து, பருத்திப்பால் வரை சகல வியாபாரங்களும்.. அடிச்சாரத்தில் ஊரின் பிச்சைக்காரர்கள் நடுங்கிப் படுத்துக் கிடப்பார்கள். இதெல்லாம் இரவு பத்துமணி வரை... அப்புறமாய் பலான விஷயக் கோட்டையாகிவிடும் அது. வீதி நாய்களும் கூட சமயங்களில் நடுங்கும். பத்து வருஷத்தில் பாரம் தாளமாட்டாது

சக்கரம் பூமிக்குள் ஒரு அடி வரை இறங்கி இனி எக்காலத்திலும் தேரோடப்போறதே இல்லை என்றாகிவிட்டது.

இப்பொழுது திடீரென்று தேரோடப் போகிறது ஊரோடு வாருங்கள் என்று போஸ்டர் சொல்கிறது.

ஆச்சரியம்தான்!

தேரைப் பொறுத்தவரை இன்னொரு ஆச்சரிய மான சமாச்சாரமும் உண்டு. தேரை ஒட்டி சற்று தள்ளி மாயவன் செட்டியார் வீடு என்று ஒன்று உண்டு. அந்த வீட்டுத் திண்ணையில் அமர்ந்து தகர கொட்டகை நீக்கப்பட்ட நிலையில் ஒரு குறிப்பிட்ட கோணத்தில் தேரைப் பார்த்தால் பல ரகமான அந்த மாதிரி காட்சிகளை எல்லாம் பார்க்கலாம்.

இதற்காகவென்றே ஒரு விடலைக் கூட்டம் சதா செட்டியார் வீட்டுத் திண்ணையை முற்றுகையிடும். செட்டியாரும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து நொம்பலம் தாளாது தகரக் கொட்டகை போட முதல் காரணமாக அமைந்தும் போனார்.

இப்பொழுது நீக்கப் போகிறார்கள். திரும்பக்கூட்டம் வரப்போகிறது. தேரில் எத்தனையோ விஷயங்கள் இருந்தாலும் திண்ணையில் அமர்ந்து பார்க்க முடிந்த இந்த விஷயத்துக்குத் தான் பார்வை அதிகம் இருக்கிறது.

அதிலும் மலையாளப் படங்களைப் பார்த்து ரசித்து மாய்ந்து மாய்ந்து ஓட்டும் ஊர்க்காரங்க அல்லவா?

மாயவன் செட்டியாருக்கு இப்பொழுதே கவலை பற்றி எரியத் தொடங்கிவிட்டது.

செட்டியாருக்கு வயதுக்கு வந்த மகளொருத்தி இருக்கிறாள். அவள் கண்ணில் அதுபட்டால் போச்சு... போச்சு... எல்லாமே போச்சு...

ஆயிரந் தடவைக்கு மேல் யோசித்துவிட்டு மகளை அடுத்த தெருவிலிருக்கும் தன் தம்பி வீட்டுக்கு தூக்கி விடுகிறார் அவர்.

திண்ணைக்கு முன்னாலும் ஒரு தென்னங்கிடுகு தட்டியை அடித்து ஒரு நாய் வந்து ஒண்டவிடாதபடி செய்துவிடலாம் எனக் கருதுகிறார்.

செட்டியார் கவலை இப்படி என்றால் இருசன் கவலை வேறு தினுசாக இருக்கிறது.

ஆமாம்... கொட்டகையைப் பிரிக்க, தேருக்கு வண்ணம் தீட்ட, அச்சை சரிசெய்ய ஆப்பு வைத்து சரி பார்க்க, என்று ஒரு ஆசாரிக்கூட்டமே வரப்போகிறதே...?

இரவில் எந்தவித போலீஸ் உபத்ரவமும் இன்றி கண ஜோராய் நடத்தி வந்த தனது தொழிலுக்கு ஒருபத்து பதினைந்து நாளைக்கு லீவு விட்டாக வேண்டுமோ?

கவலையோடு ராணியைப் பார்க்கிறான், ராணி... பரஸ்த்ரீதான் ஆனாலும் பார்க்க அப்படி தெரியாத மாமித் தோற்றத்துடன் இருசனைப்பார்த்து கேட்கிறாள்.

"அந்த தேரையா இழுத்துக்கட்ட போறாங்க?"

"பொறவு....?"

"நானும் ஊரும் படுத்தெழுந்த தேரையா?"

"மாத்திச் சொல்லுதே நீ... ஒடித்திரிஞ்சு ஓரமா ஒடுங்கிக் கிடந்த தேர்லதான் படுத்தீங்க எழுந்தீங்க..."

“அந்த இடத்துலதான் சாமி ஒக்காந்து வரப் போவுதா?”

“பின்ன..?”

“ஏ... என்ன இருசா, நல்லாவா இருக்கு இது?”

“அட என்ன புள்ள நீ... நாமளா கட்டி இழுங்கன்னோம். அதெல்லாம் காலகாலமா நடக்கற சாஸ்த்ர சம்பிரதாயம் புள்ள...”

“அப்ப அங்க எதுக்கு நாம இனி தொழில் பண்ணணும்?”

ராணி அப்படி கேட்பாள் என்று இருசன் எதிர் பார்க்கவில்லையோ என்னவோ... திகைத்துப் போய் அவளைப் பார்க்கிறான்.

“என்ன இருசா.... பரமுண்ட சாமிக்காண்டி பேசறா ளேன்னு பாக்குறியா?”

“ஆமா... ஒடுங்க எங்க இடம் கிடைச்சா என்ன? அதோட அங்ஙனதான் பாதுகாப்பா இருக்கறதா ஊருக்காரவுக நினைக்கறாக. உனக்குத் தெரியாதா என்ன?”

“இல்ல... ஓடாத தேருதானே இது இனி எந்தக் காலத்துல ஓடிடப் போவுதுன்னு நானு அங்க நண்டு னேன், இப்படி ஓடும்னு தெரிஞ்சிருந்தா படுத்தே இருக்க மாட்டேன்...”

திரும்பவும் வருந்துகிறாள் ராணி. இருசன் தலையில் அடித்துக்கொண்டு நகருகிறான். அவனுக்குப் பத்து நாட்களுக் காவது வேறு இடம் பார்க்கவேண்டிய கவலை!

**தேர்** அசைந்தாடி வருகிறது. ஆயிரம் ஆயிரம் ஜனக் கூட்டம் ஒன்று கூடி கட்டி இழுக்க வப்பலித்தான் மத்தளத்தை 'டமுக்கு டமுக்கு' என்று வெளுத்து வாங்க உற்சாகமாய் ஒரு மூச்சில் பிடித்து இழுக்க 'கடபுட கடபுட' என்று ஒரு தினுசாக உருண்டு வருகிறது தேர்.

ஒரு அடி பருமனுக்கு வடம். சாதாரணமாக தொட்டுப் பிடிக்க முடியாது. ஆனால் ஜனக்கூட்டம் அதை ஒரு தேரில் கட்டி சர்வசாதாரணமாக இழுக்கிறது.

நடுநாயகமாக பீடத்தில் சாமி.

ஒன்றுபட்டால் இழுக்கமுடியாத சமாச்சாரமே இல்லை என்கிறமாதிரி தேர் அசைந்தாடி வருகிறது. கூட்டத்தில் ஒரு புள்ளிபோல இருக்கிறாள் ராணி. கூட்டத்தில் தன்னோடு கூடி இருந்தவர்களையும் பார்க்கிறாள், எல்லோருமாக ஒன்றுபட்டு ரதத்தை கட்டி இழுப்பதை பார்க்க அவளுக்கு அதிசயமாக இருக்கிறது.

இப்படி இழுப்பதற்கு ஒன்றுபட்ட ஜனம் தேரில் தப்பு நடக்கிறது என்று தெரிந்தும் ஏன் ஒன்றுபடவில்லை? திடும் மென்று துளிர்த்த கேள்வியோடு தேரையே பார்த்துக் கொண்டு நிற்கிறாள்.

'திடும்..... திடும்... திடும்.... தி டு ம்... தி டு ம்.... தி டு ம்...' சப்தம் காதைப் பிளக்கிறது. கரகோஷம் ரதத்தை இழுக் கிறது.

"என்ன ராணி... சாமி கும்பிடவா?" ஒரு சல்லாபி உரசிச்செல்கிறான். எரிச்சல் வந்தாலும் அடக்கிக் கொள் கிறாள். சாமி கண்ணுக்கு நன்றாகவே தெரிகிறது. ஜம்மென்று மாலை மரியாதையாக அமர்ந்திருக்கிறது.

அது எங்கே அமர்ந்திருக்கிறது. அமர்த்தியிருக்கிறார்கள். பக்கத்தில் மஞ்சள் துண்டை அசைத்து சைகை காட்டியபடி, தேரை இழுக்க தூண்டல் உருவாக்குபவனாக மணியக்காரர் மகன் நின்றுகொண்டிருக்கிறான்.

கொஞ்சம் கூட உறுத்தல் இல்லாமல் நின்று கொண் டிருக்கிறான் ராணியோடு பலமுறை அந்த இடத்தில் உருண்டிருக்கிறான். அதெல்லாம் எப்படி இப்பொழுது அவனுக்கு தோணாது போயிற்றோ?

ஆனால் ராணிக்கு தோணுகிறது. அது அவளை என்னவோ செய்கிறது.

திடீரென்று ஒரு முறிசல் சப்தம்! சக்கரபாகத்தில் இருந்துதான் கேட்கிறது ஒரு பக்கமாக தேர் அப்படியே சரிந்து அமர கூட்டம் ஹோவென்று கத்த, என்னாயிற்று...? ராணியும் முண்டியடித்து முன் செல்லப் பார்க்கிறாள். முடியவில்லை.

“அச்சு முறிஞ்சு போச்சு. அம்புட்டுதான்... சாமிக்கு என்ன கோபமோ?”

கூட்டத்தின் பிரஸ்தாபிப்பு காதில் விழுகிறது.

“அச்சு முறிஞ்சிடுச்சா?” கேட்கிறாள்.

“ஆமா... நீ எல்லாம் வந்துருக்கேல்ல, முறியாம?” ஒரு புனித ஆத்மா (?) சற்று குத்திப் பார்க்கிறது.

“இது இனி சரியாக பல நாள் ஆகும். எல்லாம் சாமி கோபம்.”

அடுத்த க்ஷணம் அச்சு முறிவு சாமி கோபமாக மாறி ஒரு செய்தியாகி பரவுகிறது. பாவம் சாமி, அதன் மேல் இப்படி ஒரு பழி.

முறிந்து நிற்குமிடத்திற்கு சில அடி தொலைவில்தான் போலீஸ் ஸ்டேஷன். இன்ஸ்பெக்டர் முதல் சகலரும் முறிந்த அச்சைப் பார்க்க முன் வருகிறார்கள்.

"சாமி குத்தம்... சாமி குத்தம்... என்று வகைக்கு ஒரு பேச்சு காதில் விழ முறிந்த இடத்தைப் பார்க்கிறார்கள். இதற்கு முன் தேரில் தப்பு நடக்கிறது என்று தெரிந்த போது தேரைப் பார்க்காமல் இருசனைப் பார்த்தவர்கள் அவர்கள். இப்போதுதான் தேரைப் பார்க்கிறார்கள்.

அவர்கள் எங்கே பார்க்கிறார்கள். அச்சு முறிவு எனும் சாமி கோபம் பார்க்க வைத்துவிட்டது.

அனைத்தையும் கவனித்துக் கொண்டே கூட்டத்தில் இருந்து நழுவ ஆரம்பிக்கிறாள் ராணி. சிலர் அவளைப் பார்த்து முணுமுணுப்பதும், கண் சிவப்பதும் அவளுக்கும் தெரிகிறது. நெடுந்தூரம் கூட்டம் கடந்து வெளியே வந்தவள் முதல் தடவையாக கை கூப்புகிறாள். ஓடிவந்த தேரைப் பார்த்து கைகூப்பாதவள் முறிந்து நிற்கும் தேரைப் பார்த்து கை கூப்புகிறாள்.

"சாமி உனக்கு சக்தி இருக்குங்கறது தெரிஞ்சு போச்சு. சனங்களுக்கு... இனி நான் உன் இடத்துல படுக்க முடியாது. கொஞ்ச நாளைக்காவது பயமிருக்கும் இருசன் சொன்னா கேட்கமாட்டான். இப்படி எதாச்சும் நடந்தா தான் சரிப்படும்னு எனக்கு தெரியும். அதான் அச்சுக்கு எண்ணை போட வந்த ஆசாரி மவனை கைக்குள்ள போட்டுகிட்டு முறியற மாதிரி பாத்துகிட்டேன். அந்த நாயும் என் சொகத்துக்காக உன் கோயிலையே கொத்திபுட்டான். இப்படி இருக்கு உலகம். ஒருத்தியா நான் எவ்வளவுதான் போராடறது.. சொல்லு பாப்பம்..."

கரைந்து அழத் தொடங்குகிறாள்.

●

# 7

## காதல் போயின்...

நிர்மலா காத்துக் கொண்டிருக்கிறாள். வருகிறேன் என்று சொன்ன குமார் வரவில்லை. முன்பெல்லாம் ஐந்து மணிக்கு வந்துவிடு என்று சொல்லிவிட்டு நான்குமணிக்கே வந்து காத்து நிற்பான். அவனிடம் இருப்பதே சில சட்டைகள்தான், அதை மேக்சிமம் துவைத்துச் சலவை செய்து போட்டுவிடுவான். உட்காருமிடத்தில் நிச்சயமாக கர்ச்சிப் விரித்துதான் அமருவான்!

வீட்டில் இருக்கும்போது அப்பா அம்மா எதிரில் நெற்றியில் விபூதியும் குங்குமமுமாக இருப்பவன், அதையெல்லாம் அழித்துவிட்டு நெற்றிமுன் முடிக்கொத்து விழும்படி தலையை உசுப்பிக் கொண்டே இருப்பான்... பேசுவான்.

உடம்பில் ஓடுவது ரத்தம் மட்டுமா? இல்லை, அதற்கு சமமாக குளுகோசுமா என்று கேட்கும்படி இருக்கும் அவனது பேச்சும் துடிப்பும்.

— நிர்மலா கிறங்கிப் போவாள்.

"குமார்! உங்களை பார்த்துகிட்டே இருக்கணும் போல இருக்கு.." என்பாள்.

"உன்னையும்தான்.. – அவன் சொல்லும்போதே அதிக பட்சம் பக்கவாட்டில்தான் பார்ப்பான்.

— ஒவ்வொரு பெண்ணுமே ஒரு புதையல்தான் என்றும் நினைத்துக் கொள்வான். உட்கார்ந்திருக்கும் சாக்கில் அசைந்து நெளிந்து உரசவும் ஆரம்பிப்பான்.

உலகத்தில் தான் பிறந்திருப்பதே அதற்காகத்தான் என்றும் நினைப்பான். நிமிர்ந்தால் நிறைய பேர் ஆணும் – பெண்ணுமாய் நடந்து கொண்டிருப்பார்கள். அவரவர்களுக்கு ஆயிரம் வேலை. உரசி மகிழும் சுகத்தை இழந்து விட்டு, ஆபீஸ், மளிகை பர்சேஸ், எலெக்ட்ரிக் பில், டெலிபோன் பில் என்று அவர்களுக்குத் தான் வாழத் தெரியவில்லையா? மாட்டிக் கொண்டு விட்டார்களா?

சிரிப்பு வரும்.

"எதுக்கு சிரிக்கறீங்க?" – அவளும் கேட்பாள்.

"இல்ல நிர்மலா... வாழ்க்கை எவ்வளவு சந்தோஷமான விஷயம். அது தெரியாம இவங்கல்லாம்..." – சொல்லும்போதே இடுப்பில் ஒரு கிள்ளு கிள்ளுவான்.

அவள் 'ச்சீய்....!' என்றாலும் அதை ரசிப்பது நன்கு தெரியும். விரும்புவது மடையனுக்கும் புரியும்படி இருக்கும்.

"குமார் நாமளும் ஒருநாள் இப்படி ஆவோம்." பின் அவள் சொல்வாள்.

"நோ நோ... ஆவமாட்டோம் நிர்மலா. ஆகவும் கூடாது. ஆக விடமாட்டேன்."

"முடியுமா உங்களால?"

"ஏன் முடியாது? நீ பக்கத்துல இருந்தா உலகமே எனக்கு ஒருவகை பந்தாவாதான் தெரியுது. நாம எப்பவும் இப்படியே இருக்கணும்!" – என்று கட்டிக் கொள்வான். அவள் அனல்மின் நிலையமாவாள். காதல் பெரிய மேதைகளையே ஊறல் புலிகளாக ஆக்கியிருக்கிறது. குமார் மட்டும் விதிவிலக்கா என்ன? அன்பே ஆட்டுக்குட்டியே என்று சகடமாய் வர்ணிப்புதான்! அதன் பின்...

இத்தனைக்கும் சுண்டைக்காய் பி.காம். தான் படிப்பு. எட்டு நூறு. வாடகை தரும் பிளாட் குடித்தனவாசி. டைனிங் டேபிளில் உட்கார்ந்து சாப்பிடுவதே பெரிய விஷயம் என்று நினைக்கும் மனது.

வாலிபம் இதை எல்லாம் பார்க்குமா என்ன? வசமாகச் சிக்கினாள் நிர்மலா! அவளும் கிட்டதட்ட அவனது ஜாதிதான். ஜாதி என்றால் அந்தஸ்து ஜாதி. டைப் அடிக்க இன்ஸ்டிடியூட் போகும் போது அவளை பார்த்தவன் கிறங்க ஆரம்பித்து விட்டான்.

உலகில் டைப் இன்ஸ்டிடியூட்கள் இருப்பதே காதலுக்கு யூரியா போடத்தானே? அவளிடமும்... பதினெட்டு வருஷம் அவள் சாப்பிட்ட மொத்த சாப்பாடும் மார்புக்கு மட்டுமே போன மாதிரி அப்படி ஒரு போஷாக்கு. அதில்தான் விழுந்தான் குமார்.

அவளுக்கும் வயசுக்கே உண்டான அல்ப ஆசைகள் (?) நிறைய இருந்ததுதான். ஒரு தேவதை என்று கிலோ கணக்கில் மமதை – தன்னை வாலிபம் கவனித்து விரட்டாதா என்கிற ஏக்கம் – நடக்கும்போது அன்னம்... பார்க்கும்போது மான்... உட்காரும்போது அஜந்தா சிற்பம் என்று டிசைன் டிசைனாகத் தீர்மானங்கள்.

அதை கச்சிதமாகப் புரிந்து கொண்டு புதுக்கவிதை யாலேயே கடிதம் எழுதி காதலை வசப்படுத்தி காதலியையும் வசப்படுத்திக் கொண்டான் குமார்.

அப்புறம் என்ன? சினிமா, பார்க், பீச் என்று முடிந்த இடத்தில் எல்லாம் சுற்றிவந்து ஒரு கொக்கோகோலா வாங்கி இரண்டுபேரும் எச்சில் செய்து குடித்து, சமயங்களில் உடைபட்டு உதட்டோடு உதடும் உரசி காமதகனமாகி...

இப்படியே எத்தனை நாள்தான் கழிக்க முடியும்?

லோகாயத வழக்கப்படி கல்யாணம் என்ற முடிவுப்பாகம் இருக்கிறதே? அது வந்துதானே தீர வேண்டும். அதிலும் அதைப் பற்றி பெண்தானே முதலில் சிந்தித்துப் பேச வேண்டும்.

— நிர்மலாவும் பேசினாள்.

"இப்படியே சுத்திக்கிட்டிருந்தா எப்படி... எப்ப கல்யாணம்?"

"ஏன் வீட்ல மாப்ள பாக்க ஆரம்புச்சுட்டாங்களா?"

"என்ன சினிமா வசனமா... அதுலதான் காதலி அப்படி நடந்துக்குவா. காதலனும் இப்படிக் கேப்பான்."

"வாழ்க்கையைப் பாத்துதானே நிர்மலா சினிமா எடுக்க றாங்க...?"

"எங்க எடுக்கறாங்க... கெடுக்கறாங்கன்னு சொல் லுங்க..."

"சரி; விஷயத்துக்கு வா. இப்ப என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும் அவ்வளவுதானே?"

"அடப்பாவி மனுஷா... கல்யாணத்துக்கப்புறம் தானே வாழ்க்கையே இருக்கு. சாதாரணமா கேக்கறே?"

— அவள் சீரியஸாகத்தான் பேசினாள். ஆனால் அவனால் முடியவில்லை. எதை வைத்து கல்யாணம் செய்து கொள்வது? ஜாதி முதல் அந்தஸ்து வரை சர்வமும் இடைஞ்சல். ஓடிப் போய்தான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்.

அவன் எதிரில் ஓடிப்போன ஒரு கேசும் ஒழுங்காக இல்லை.

கிட்டத்தட்ட காதல் என்பதே கல்யாண ஒத்திகை போல தான் இருக்கிறது.

ஒத்திகைக்கு மேக்கப், சீன் செட்டிங்கெல்லாம் தேவையே இல்லை. கல்யாணத்துக்குதான் அத்தனை சீரியஸான விஷயமும்....

அவனும் மிக யோசித்துவிட்டு மறந்துவிடு, முடியாது, அடுத்த ஜென்மத்தில் சேருவோம்!' – டயலாக்கெல்லாம் பேசாமல் ஓசைப்படாமல் துபாய் பக்கம் வேலைவாங்கிக் கொண்டு பறந்து விட்டான் புத்திசாலி!

இனி...?

**தொ**டர்ந்து நான்குநாள் காத்திருந்து அவன் வராமல் போய் அவனது சினேகிதன் ஒருத்தனை பார்த்து தயங்கித் தயங்கி குமார் எங்கே என்று கேட்டபோதுதான் குட்டு உடைபட்டது.

'அடப்பாவி மனுஷா... இத்தனை பெரிய துரோகியா நீ?'

மனதில் அலைக்கடல், இடிமின்னல், ஊழிக்காற்று எல்லாம் வீசி அடங்கியது.

நிலைப்படவே நெடுநாள் தேவைப்பட்டது. ஆரம்பத்தில் கற்பு போய்விட்டதாக ஒரு நினைப்பும் பின்தான் வாழ்வதிலேயே

அர்த்தமில்லை எனும்படியாக சிலநினைப்புகளும் தோன்றித் தோன்றி கொத்தின.

தன்னை மறக்க டி.வி.யைத் திருப்பினால் அதன் பிம்பங்களும் அவளைத் தூண்டின.

இந்த உலகில் காதலைத் தவிர வேறு சமாச்சாரமே இல்லை எனும்படியாக காட்சிகள். அதற்காக கதாநாயகன் ஒரு பக்கம் சாகிறான். கதாநாயகி ஒரு பக்கம் சாகிறாள். இல்லாவிட்டால் அவர்களுக்காக அவர்கள் சார்பில் யாராவது சாகிறார்கள்.

ஆணும் பெண்ணும் விரும்பிச் சேருவது என்பது புராண காலம் முதற்கொண்டு எவரெஸ்ட் ஏறி இறங்குவதைவிட சங்கடமான விஷயம் என்கிற மாதிரி காட்சிகள்... காட்சிகள்... காட்சிகள்... வசனத்திலும் கற்பு கற்பு என்கிற பினாத்தல்கள்.

இந்த நிலையில்தான் வீட்டில் அவளுக்கு மாப்பிள்ளை பார்த்தார்கள்.

"நிர்மலா, நீ ஒரு கசக்கி எறியப்பட்ட காகிதம்! கொத்தப்பட்ட கிளி, கிழிந்த துணி..." – என்று அவள் மனதும் வசனம் எழுதி எழுதி வாசித்தது. சாகலாம் என்று தூக்க மாத்திரை கூட வாங்கிக் கொண்டு வந்துவிட்டது. ஆனால் அதை விழுங்கும் தைரியம் வருவதற்குள்.

எப்படியோ எல்லாம் கடந்து திருமணமும் முடிந்து விட்டது. முதல் ராத்திரியும் வந்து அவன் தொடும்போது என்னவோ செய்தது.

குமார் தொட்டபோது இருந்த மாதிரி எல்லாம் இல்லை. ஒரே பயம், 'இவரிடம் உண்மையைச் சொல்லி விடலாமா?' என்று தோன்றி உடம்பெல்லாம் உதறல் எடுக்க என்னவெல்லாமோ

ஆனது. அதை அந்த மாப்பிள்ளைத் துக்கிரி மிகப்பவித்ரமாகப் புரிந்து கொண்டு, "என்ன ஒரு வெட்கம் தயக்கம்" என்று ஸ்லாகித்து இழுத்தணைத்தான்.

அதன்பின்... அதன்பின்... அந்த அணைப்பில் எல்லாமே ஒதுங்கிக் கொண்டது.

**நா**ட்களும் நிறையவே ஒடிவிட்டது.

மகன், மகள் என்றும் பிறந்து அவர்கள் எல்.கே.ஜி., யு.கே.ஜி. என்று போகிறார்கள். இப்பொழுதும் சமயங்களில் குமார் நினைப்பு வரும். கொஞ்சம் குத்தும். குறிப்பாக அக்கம் பக்கத்து பெண்களைப் பக்கத்து வீட்டு மாமிகளை பார்க்கும் போதெல்லாம் கூடுதலாகவே குத்தும்.

இவர்கள் எல்லாம் தன்னைப்போல ஏமாறாத கேஸ் என்பதில் புரை தட்டி மூக்குவழி புகையே வரும். அப்புறம் சரி யாகிவிடும்.

ஆனாலும் உறுத்தல் நீங்கினபாடில்லை.

இந்த நிலையில்தான் அந்த செய்தி அவள் காதுக்கு வந்தது. அதுவும் பக்கத்துவீட்டு மாமியால்தான்.

"நிம்மு, மனசே சரியில்லடி?" என்றுதான் ஆரம் பித்தாள், மாமி.

"என்ன மாமி?"

"நீ கேட்டா ரொம்ப வருத்தப்படுவே" என்கிறாள் மாமி.

"சும்மா சொல்லுங்க...

"ஹூம்! என்னத்த சொல்ல..." – மாமி இப்படி ஏகமாய் பீடிகை போட்டுவிட்டு பின்தான் விஷயத்தினை சொன்னாள்.

“நேத்து என் அத்தை பிள்ளை வந்திருந்தான். மெட்ராஸ் வந்த இடத்துல உன்னைப் பாக்க வந்தேன்னான்.”

“அதுக்கு என்ன மாமி?”

“அதுக்கு என்னவா... ஒரு காலத்துல அவனுக்கு தான் என்னை கொடுக்கறதா இருந்தது. என் தலை எழுத்து எல்லாம் மாறிப்போச்சு. இப்ப அவன் வரவும் என் மாமியார் கிழம் அந்த விஷயத்தை எப்படியோ தெரிஞ்சுண்டு என் ஆத்துக் காரரைத் தூண்டிவிட்டு கலாட்டா பண்ணிட்டா நிம்மு...” – மாமி விசும்புகிறாள்.

“என்னன்னு?”

“என் அத்தபிள்ளை பழைய ஞாபகத்தோடதான் வரானாம். எனக்கும் இன்னும் அவன் மோகம் தீரலையாம். கிழடுதான் சொல்றதுன்னா இவருக்கு எங்க போச்சு புத்தி...? அதுலையும் கல்யாணம் ஆகி குழந்தை குட்டின்னு ஆனதுக்குப் பிறகு...?”

“உங்க ஆத்துக்காரர் என்னதான் சொன்னார்.”

“அவரும் சந்தேகப்பட்டு அவனை இனி வரக்கூடாதுன்னு சொல்லிட்டார்டி. என் அத்தை பிள்ளை எப்படி ஒரு ஜெண்டில்மேன் தெரியுமா?

ஹூம்... எங்க கல்யாணம் மட்டும் நடந்திருந்தா இப்ப எப்படி இருந்திருப்பேன். இப்படியா லோல்படுவேன்? அந்த நாள்ளையே வெளிய போனா என்னமா செலவு செய்வான் தெரியுமா? பீச், சினிமான்னு... ஹூம் அதெல்லாம் ஒரு காலம்டி. நாசமாப் போன கிழடு பழசை கிளறிவிட்டு, புதுசையும் நேசிக்க விடாமன்னா பண்றா...”

– நிர்மலா அதைக்கேட்டு சற்று அதிசயிக்கிறாள். எல்லா பெண்மனங்களும் இப்படித்தானா? விரும்பியது ஒருவனை.... அடைந்தது ஒருவனையா? விதங்களில்தான் வேறுபாடா... இது அவர்கள் குற்றமா? இல்லை, காலத்தின் குற்றமா?

கேள்விகளுக்குள் விழுகிறாள். கட்டிபோல் திரண்டு நிரடிக் கொண்டிருந்த குமார் பற்றின நினைவு தானாக இப் பொழுது கரைய ஆரம்பிக்கிறது. சுகமாக இருக்கிறது. காதல்.. அல்ஜிப்ரா, ஜாமிட்ரிபோல, ட்ரிகெணா மெட்ரிபோல ஒரு இன்பம் போல தெரியும். துன்பமான வாழ்க்கைப் பாடம் என் றெல்லாம் நினைப்பு பரந்து விரிய ஆரம்பிக்கிறது.

இதைப் படிக்காமல் யாரும் வாழ்க்கைப்பாதை தாண்ட முடியாதோ? வியப்பு விரிகிறது...

'எழுதும் யாரும் பாஸ் மார்க் வாங்குவதில்லை. இதில் பாஸ்மார்க் வாங்கியவர்கள் மற்றதில் தோற்றுப் போகிறார்கள். மொத்தத்தில் இதில் தோற்று ஞானம் பெற்று மற்றதில் ஜெயிப்பதுதான் வாழ்க்கையா?'

விடையையே கேள்வியாக்கிக் கொண்டு மாமியின் வருத்தத்தை ரசிக்க ஆரம்பிக்கிறாள், நிர்மலா. மனது உடம்பு இரண்டும் லேசான நிலையில்...

# 8

## வலி

"என்னா டாக்டர் சீதைக்கு இன்னும் வலி எடுக்கலியே, நீங்க சொன்ன நாளெல்லாம் தாண்டிருச்சே...?"

— ராஜதுரையின் அவரசத்தை வேகத்தைப் பார்த் தால் விட்டால் அவரே வயிற்றைக்கிழித்து பிள்ளையை எடுத்து விடுவார்போல் தெரிந்தது.

"ஆக்கப் பொறுத்தீங்க. ஆறப் பொறுக்கலேன்னா எப்படி?"

"ஏதோ ஊசியொண்ணு இருக்குங்களாமே... அத போட்டா உடனே வலிவந்து குழந்தை பொறந்துடும்னுல்லாம் கேள்விப் பட்டிருக்கேன்...."

டாக்டரம்மாவின் முகம் இப்போது ராஜதுரையை கணிச மான கோபத்தோடு முறைக்கிறது.

இனியும் அங்கிருந்தால் மரியாதை குறையும் என்பதை உணர்ந்த ராஜதுரை கோபத்துடன் எழுந்து வெளியே வருகிறார்.

— வெளியில் கணிசமான பதட்டத்தோடு அவரது அம்மா வும் "என்னடா என்ன சொல்றாங்க..? இன்னும் கொஞ்ச நேரத்துல பொறந்துடணும், பொறந்தா உனக்கு, குடும்பத்துக்கு எல்லாத்துக்கும் நல்லது. அப்பால சித்திரை நட்சத்திரம் உன்னை கப்பரையோட தெருவில நிறுத்திப்புடும்," அம்மாக்காரி மகனை உசுப்பிவிடுகிறாள்.

"சும்மா இதையே எத்தினி வட்டம் சொல்வே. உள்ள அந்த டாக்டர் பொம்பளை என்னடான்னா முறைக்கறா. நாம இந்த ஆஸ்பத்திரிக்கு வந்ததே தப்பு. அத தெரிஞ்சுக்க..."

ராஜதுரையின் அந்த உரத்த கோபக்குரல் டாக்டர் காதிலும் விழுகிறது. ஆவேசமாக சீட்டைவிட்டு எழுந்திருக்கிறார் அந்த டாக்டர்.

வெளியே வந்த ராஜதுரை முன் நிற்கும் விதத்தில் கூட உச்சபட்ச உஷ்ணம்

"மிஸ்டர் ராஜதுரை.. இது ஆஸ்பத்திரி. சத்திரம் சாவடியில்ல. முதல்ல கண்ணியமா பேசறது எப்படின்னு தெரிஞ்சுக்குங்க..."

"தா, பொட்டச்சி இப்படி நெஞ்ச நிமிர்த்தி நிக்கறதே தப்பு. இதுல எதிர்கேள்வியா கேக்கறே. வைக்கவேண்டிய இடத்துல உன்னையெல்லாம் வெச்சிருக்கணும்."

– வாதி பிரதிவாதங்கள் பற்றி எரிய சண்முகவடிவு நடுவில் புகுந்து உளைந்து போனாள்.

"டாக்டரம்மா உட்காருங்கம்மா. எனக்காகம்மா... எனக்காக... உங்க கால்ல விழறேன் தாயி. வாங்கம்மா.. வந்து சீதைக்கு பிரசவத்த என்னான்னு பாருங்கம்மா... வாங்கம்மா... வாங்கம்மா..."

— பிடித்து இழுத்துக்கொண்டு போனாள். அம்மாக்காரி மகனை மறுபக்கம் பிடித்து இழுத்துச் சென்றாள்.

"டேய் போடா... போய் அந்த எடுபட்டவளை இழுத்தா... சீதைக்கு சிசு ஜனிக்கல இந்த மலடி பக்கமிருந்தா விளங்கி வீடு கட்டுன மாதிரிதான்.." என்று தள்ளியும் விடுகிறாள்.

சுமாராக வியர்த்து விட்டிருந்தது ராஜதுரைக்கு. துடைத்த படி திரும்ப உள் நுழையவும் காரிடாரில் சண்முகவடிவே வந்து கொண்டிருந்தாள்.

"வலி வந்திருச்சுங்க. இன்னும் கொஞ்ச நேரத்துல பொறந்துடும். அந்த பதில் ராஜதுரையின் கோபம் பதட்டம் எல்லாவற்றையும் புறந்தள்ளியது.

"அப்படியா... ரொம்ப சந்தோஷம். ஆனா நீ பக்கத் துல இருக்காதே. போய் புள்ள பெத்த எவளையாவது துணைக்கு கூட்டிவா...!"

"நம்ம குழந்தைக்கு நான் பக்கத்துல இல்லாமலா...?" சண்முகவடிவு கிறக்கத்தோடு கேட்ட விதத்தில் அப்படி ஒரு தாய்மை உணர்ச்சி.

"நம்ம குழந்தையாம்ல நம்ம குழந்தை. என் மகன் குழந்தைடி. உனக்குதான் தலைகீழா நின்னு தண்ணி குடிச்சாலும் குழந்தை பொறக்காதுங்கறது ஊருக்கே தெரிஞ்ச விஷயமாச்சே."

கிழவி வாளை உருவிக்கொண்டு வருகிறமாதிரி வருகிறாள். சண்முகவடிவுக்கு இவை ஒன்றும் புதியதல்ல தாங்கிக்கொள்ள முடிகிறது. ஆனால், ஆனால் சீதைக்கு..?

பிரசவ வேதனையையும் தாண்டி ஒரு இனம் புரியாத வேதனை அவளை புரட்டி எடுத்துக் கொண்டிருக்கிறது.

"ஏம்மா... ஏன் ஒருமாதிரி இருக்கே. – டாக்டரம்மா விடம் இதமான அணுக்கம்.

"டாக்டரம்மா... கொ.... கொழந்த பிறந்த பின்னே என்னை கொன்றுங்க டாக்டரம்மா.."

"ஏய்.... என்ன பேசறே நீ."

"ஆ... ஆமா. இந்த குழந்தைக்காகதான் அவரு என்னை கட்னாரு. சோ... சோறு போட்டாரு. மத்தபடி பொம்பளைன்னா அவருக்கு குப்பைமாதிரி.."

டாக்டரை நர்ஸ் உசுப்புகிறாள்.

"டாக்டர் இஞ்ஜெக்ஷன்" குரலால் சிலிர்த்து மௌனம் கலைந்து ஊசியை சீதை இடுப்பில் செருகுகிறார் அந்த டாக்டர்.

— சீதை ஆவென வாய் பிளக்கிறாள். அம்மாாாாா...!

பிரபஞ்சத்தின் ஈடு இணையற்ற வலியின் உயிர்மெய் யெழுத்து சப்தத்தை வார்டே குலுங்கும் வண்ணம் வெளிப் படுத்துகிறாள்.

— இதற்கு முன்கூட இப்படி அழுதிருக்கிறாள் – அலறி யிருக்கிறாள்.

— கதிர்வேலுவின் சிதைக்கு தீ மூட்டும்போது!

"கதிர்வேலு நல்ல பயதான். சீதைக்கும் அவன்னா இஷ்டம். அப்புறமென்ன கால்கட்ட போட்றவேண்டியது தானே பெரியசாமி?" – யாரோ கேட்ட கேள்விக்கு கோவில் மாடு மாதிரி தலையசைகிறது பெரியசாமியிடம்.

— பெரியசாமி, நாள் பார்த்து முடித்து விடலாம் என்று ஆயத்தப்பட்டபோது தான் அழுத முகமும் தொழுத கையுமாக வந்து நின்றாள் சண்முக வடிவு – சீதையின் அக்கா.

"என்ன ஆத்தா?"

"அப்பு நா ஒரு மலடி அப்பு. இனி என் வயித்துல ஒரு புழு பூச்சிகூட வராதுன்னு டாக்டருங்களும் சொல்லிட்டாங்க." –

மெல்ல இடிகளை இறக்க ஆரம்பித்தாள். கடைசியாய் இறக்கிய இடிதான் பெரியசாமியையே புரட்டிப் போட்டுவிட்டது.

"என்னை அறுத்துக்கட்ட போறாராம் – அவருக்கு வாரிசு வேணுமாம். ஆகையால இரண்டாம் தாரம் கட்டப் போறாராம்."

பெரியசாமிக்கு கதி கலங்கிப் போனது. சண்முகவடிவே தீர்வும் சொல்ல ஆரம்பித்தாள்.

"உம்மாப்ளை பத்தி உனக்கு நல்லா தெரியும். பிடிச்சா பிடிச்ச பிடி. அப்பு எவளையோ அவர் கட்டி என்னை, புண்ணாக்கறதுக்கு நம்ம சீதையையே அவருக்கு கட்டி வைச்சா சீதைக்கும் ஒரு வழி எனக்கும் ஒரு வழி கிடைச்ச மாதிரி இருக்கும்.

பொறக்கற குழந்தையும் நான் என் குழந்தையா நினைச்சுக்குவேன்."

— இறுதியில் சண்முக வடிவு சித்தப்படி தான் எல்லாம் நடந்தது. சீதை கழுத்தில் தாலி ஏறும் சமயம் கதிர்வேலு கூட வந்திருந்து கண்ணீரோடு அட்சதை போட்டான். அவள் மனதில் மிகுந்த உயரம் போனான்.

ஆனால் ராஜதுரையோ நேர் எதிராக நடந்துகொண்டார். இரவில்லை பகலில்லை என்று அவள் இடுப்பை ஒடித்தார்.

"என்னிய ஆம்பளையான்னு நக்கலடிக்கிறாங்க. நீ கர்ப்பம் தரிக்காட்டி கண்ணுரெண்டையும் நோண்டிப்பிடுவேன்" என்று ஆத்திரப்பட்டார்.

சீதையும் ஏமாற்றவில்லை. கர்ப்பம் தரித்தாள். அது வரை இரண்டாவது ஃபில்டர் காபிதான் – மிச்சமீதிதான் என்று இருந்தவளுக்கு இப்போது தர்பாரான உபசரிப்பு! கொட்டக் கொட்ட குங்குமப்பூ – தளதளவென தயிர், பால், நெய் எல்லாம்.

சீதைக்கு நன்றாக தெரியும்.

எல்லாம் வயிற்றுப் பிள்ளைக்கு... தனக்கில்லை! வயிற்றுப் பிள்ளை கூட பாசம் செலுத்துவதற்காக கிடையாது.

'ராஜதுரை மலட்டுப் பயல் கிடையாது' என்ற நற்சான்று பெறுவதற்காக.

இந்த போலி வேஷத்துக்கு நடுவில் ஒரு நாள் நிஜமாலுமே அன்பு செலுத்த கதிர்வேலு வந்துபோனான். ஒருமனைப் போல வளையல் எல்லாம் வாங்கி வந்திருந்தான். ராஜதுரை சிங்கம் அதை மிக கொச்சைப்படுத்தி விட்டார்.

"ஏண்டி உன் வவுத்துல வளர்றது என் குழந்தையா இல்லை இந்த வெறும் பயலோடதா, எனக்கு இப்ப ரெண்டுல ஒண்ணு தெரிஞ்சாகணும்?" என்று அவர் போட்ட போடில் நல்லவேளை சீதையின் கர்ப்பம் கலையவில்லை.

ஆனால் கிணற்றில் தூர் அள்ளும் போது கதிர்வேலுவை மண் மூடி விட காப்பாற்ற வழி இருந்தும் ராஜதுரை சிங்கம் அப்போது வேடிக்கை பார்த்ததாக அறிந்த போதும்.

அவன் சிதைக்கு தீ மூட்டும்போது மயானப் பின் வெளியில் மதிலை ஒட்டி நின்று பார்த்து வெடித்து அழுத போதும் அந்த கர்ப்பம் கலைந்து தான் போனது!

நல்ல வேளை... அடுத்த கர்ப்பம் கலையாமல் இதோ பிரசவம் வரை வந்திருக்கிறது!

ராஜதுரை சிங்கம் ஆம்பிளைதான் என்று நிரூபிக்கிறாற் போல அந்த குழந்தையின் அழுகை சப்தமும் வெளியே கேட்கிறது.

"ஐய்யனாரப்பா என் வம்சத்துக்கு ஒரு வாரிசு தந்தியே... கை கூப்பி சிலிர்த்துப் போகிறாள் கிழவி.

"உன் ஐய்யனாரப்பன் ஒண்ணும் தரலை. நான்" – என்று மீசையை நீவுகிறார் ராஜதுரை சிங்கம்!

"டேய் ராஜதுரை, உன் மகன் அச்சு அசல் உன் மாதிரியே..."

"பின்னே இல்லியா அப்பன் மாதிரியே சிங்கம் போல வரணுமடா நீ.."

— குழந்தையை அவர்கள் கொஞ்ச... நடுவில் குப்பை மாதிரி கிடக்கிறாள் சீதை.

— அப்போது... டாக்டரின் அத்யாவசியக் குறுக்கீடு கேஸ் ஷீட்.

பில் கையெழுத்துக்காக வந்து நிற்கிறாள்.

"சீதை நாங்களே பர்த் சர்டிபிகேட்டெல்லாம் வாங்கித் தந்துடுவோம். உன் வீட்டுக்காரர் பேர் அட்ரஸ் எல்லாம் வேணும்..."

ராஜதுரையிடம் முன்பு கடுப்படித்த காரணத்தால் ஒரு அந்நியத் தன்மையோடு சீதையைப் பார்த்து பேசுபவள் முன் சீதையின் குரல் ஓங்கி ஒலிக்க தொடங்குகிறது.

"எழுதிக்குங்க டாக்டர் என் பேர் சீதை இந்த குழந்தை யோட அப்பன் பேர் கதிர்வேலு! ஆனா இப்ப அவர் உசுரோட இல்லை. அட்ரஸ் நம்பர் பதினைஞ்சு, காட்டு மூனிஸ்வரர் கோவில் தெரு, முத்துப்பட்டி, மதுரை – 3.

— ராஜதுரை என்னும் ஆண் மகன் முதல் தடவை யாக ஆகாய உயரம் எறியப்பட்டு கீழே விழுந்த மாதிரி நிற்க, டாக்டரம்மாவிடம் ஆனந்தத் திகைப்பு!

●

# 9

## கோயம்புத்தூர்

**கோ**யமுத்தூர் நாராயணனுக்கு மிகப் பிடித்த அந்த ஊருக்குள் அவன் நுழையும் போது சற்று வெறுத்துத் தான் போனான். ஐந்து வருட அமெரிக்க வாழ்க்கைக்குப் பிறகு, ஒரு ஐம்பது நாள் லீவில் திரும்புபவனுக்கு எல்லையிலிருந்தே அதிர்ச்சிகள் காத்திருந்தன. ஈச்சனாரி வந்து கார் ஊருக்குள் நுழையப் பார்க்கும்போதே நிறைய போலீஸ் முகங்களின் இடைமறிப்பு!

காருக்குள் எட்டிப் பார்த்த அவர்கள், டிக்கியைத் திறந்து காட்டச் சொன்னபோது மறுக்க முடியவில்லை.

"என்ன இது புதுசா?" – கேட்கப் பார்த்தவனை பார்வை யாலேயே அடக்கினார் மாமா ராகவன்.

காரை விட்டு இறங்கி டிக்கியைத் திறந்து காட்டினார். நிறைய பெட்டிகள். அதில் அமெரிக்கப் பளபளப்பு! கைப்பிடியில் ஏர்கிராஃப்ட் நம்பர் குறித்த எலாஸ்டிக் டேக்.

"உள்ள என்ன இருக்கு?"

“சாமான், துணிமணி... காருக்குள்ள இருக்கறது என் அக்கா மகன்... அமெரிக்காவில் இருந்து வர்றான்...”

“திறந்து காட்டுங்க கொஞ்சம்..

ராகவன் மறுப்பேதும் சொல்லாமல், நாராயணனிடம் இருந்து சாவியை வாங்கித் திறந்து காட்டினார்;

ஏராளமான புதுத்துணிகள், டூ இன் ஒன், கம்ப்யூட்டர் டிஸ்க்குகள், எலெக்ட்ரானிக் பொம்மைகள்...

எல்லாவற்றையும் அக்குவேறாக ஆணிவேறாக அலசிப் பார்த்துவிட்டுத்தான் போகச் சொன்னார்கள்....

இதற்குள் ஏகதூரத்துக்கு வண்டிகள் தேங்கியதில் ஒரே திணறல். அவைகளிலிருந்து மீண்டு, சுமாராக இருபது கிலோ மீட்டர் வேகத்தைக்கூட திரும்ப எட்ட முடியவில்லை.

“என்ன மாமா இது... எதுக்கு இத்தனை களேபரம்?” கசங்கிப் போய்க் கேட்பவனைப் பார்த்து விரக்தியாகச் சிரிக்கிறார் ராகவன்.

“என்ன மாமா... நான் கேக்கறேன் சிரிக்கிறேளே...

“சிரிக்காம என்ன பண்றது... போன வருஷம் கோயமுத்தூர் பட்டபாடு உனக்கு தெரியாதா?”

“யூ மீன்... இந்த பாம் பிளாஸ்ட் ஆனதே... அதைச் சொல்றேளா?”

“ஆமாம் நாணி... அப்ப தொலைஞ்சு போன கோயமுத்தூரோட சௌலப்யம் இன்னி வரை திரும்பல...”

“இன்னுமா த்ரெட் இருக்கு?”

"அப்படித்தான் தோண்றது. போலீசுக்கு என்ன நேர்த்திக் கடனா – தினம் இப்படி போற வர்றவாளைக் குடையனும்ன்னு?"

"மை காட்...

"நீ ஏன் மூட் அவுட் ஆறே! இதெல்லாம் இப்ப இங்க பார்ட் ஆஃப் லைப்!"

ராகவன் தேற்றியும் நாராயணனால் தேற முடியவில்லை. மோவாய் அருகே கை பதித்து, பெருமூச்சில் உஷ்ணம் சேர்த்து, நிரம்பவும் கவலைப்பட ஆரம்பிக்கிறான்.

அப்படியே வெளியே பார்க்கிறான். அவனுக்கு மிகப் பிடித்த இந்தச் சூழல். பெட்டிக் கடைகள் முகப்பில் தினசரிப் பேப்பர்களின் உள்ளடக்கம் சொல்லும் தலைப்புகள்.

குலை குலையாகத் தொங்கும் வாழை. அதில் தமிழ் நாட்டில் வேறு எங்கும் பார்க்க முடியாத நேந்திர வகைகள்.

இப்படி எல்லாம் அமெரிக்காவில் சுலபமாக அணுக முடிந்த கடைகளோ, செய்தி விளம்பரங்களோ துப்புரவாகக் கிடையாது. புழுதி, குப்பை என்று இல்லாதபடி தண்ணீர் விட்டுக்கழுவின மாதிரிசாலைகள் இருக்கும்.

கூடவே சுத்தத்தோடு சேர்ந்து, ஒரு வகை மிரட்டும் அமைதிதான் எங்கும் வியாபித்திருக்கும். பார்க்கும் முதல் பார்வையில் 'அடேயப்பா எத்தனை அழகு' என்று தோன்றும்.

ஆனால் போகப் போக அழகு பற்றி வியப்பு மடிந்து போய், அந்த அமைதியில் சூன்யம் தோன்றி மனதைக் கட்டும்.

கலகலப்பான மனித நடமாட்டம், காற்றுக்குச் சவால் விடும் சுதந்திரமான போக்கு, லாரியில் அள்ளும்படியான

பாலிதீன் குப்பைகள், தள்ளுவண்டிக் கடைகள், அதால் போஷிப்போடு வளரும் ஈக்கள், கண்ணைக் கரிக்கும் புகைப்புழுதி என எதுவும் அங்கு கிடையாது.

கூடவே உற்சாகமோ, உத்வேகமோகூடக் கிடையாது தான். சதா வேலை... வேலை... வேலை... பின் தூக்கம். மொத்தத்தில் உப்புச் சப்பில்லாத வாழ்க்கை நடுவில் உற்சாகம் தேவைப்பட்டால் ஐ.எஸ்.டி. கால் போட்டு குடும்பத்தோடு பேசுவான். மாடு கன்று போட்ட கதையிலிருந்து, இந்தக் கால அரசியல் வரை பேசக் கேட்டுவிட்டு ஏங்குவான்.

'நம் ஊர்தான் எத்தனை சிறப்பான ஊர். வடித்துப் பிடித்த ஊட்டிக் குளிர், பேரம் இல்லாத வியாபாரம், அன்னபூர்ணாவின் டிபன், திலகர் திடலின் பொதுக் கூட்டம், ஒப்பணக்கார வீதியின் ஜன நடமாட்டம்... சிறுவாணித் தண்ணீர், நரசுஸ் காபி... கிறுணிப் பழப் பத்தைகள், பத்திரிகைத் தொடர்கள்... எத்தனை! எத்தனை! நினைக்க நினைக்க திவ்ய மதுரமாக இருக்கும்.

படகுக்காரும், பளபள சாலையும், பகட்டு வீடும் உள்ள அமெரிக்க வாழ்க்கையில் தெரியாத் தனமாகவோ, தெரிந்தோ எட்டிக்காய் கலந்து அரைபட்டது போன்ற கசப்புதான் மிச்சம்.

எப்படியோ ஐந்து வருடங்களை ஒப்பேற்றிவிட்டான் ஐம்பது நாட்கள் விடுமுறையை ஒரு ஐம்பது வருட கன பரிமாணத்தோடு நினைத்துத்தான் பிறந்த மண்ணில் நுழைந்திருக்கிறான்.

ஆனால் இங்கே அவன் எதை சுதந்திரம் என்று, சௌலப்யம் என்றும் நினைத்தானோ... அது சிறைப்பட்டுப்போன மாதிரி யல்லவா தெரிகின்றது!?

வீடு வந்ததும் பாதிப்பு விலகின மாதிரியே தெரியவில்லை. மாமா சொன்ன பல விஷயங்கள் மணமேடையில் காட்டுக் குதிகுதித்த வண்ணமிருக்கின்றன.

“கண்பட்ட மாதிரி ஆயிடுத்து நாராயண... அதோ அந்த துணிக்கடை எரிஞ்சது பார்... ஒரு பனமர ஒசரத்துக்கு நெருப்பு...!”

“இந்த ப்ளே கிரவுண்டுல குண்டு வெடிச்சதுல கிட்டத்தட்ட பத்து பேர் செத்துப் போயிட்டா...”

“நகைக் கடைல எல்லாம் முன்ன வியாபாரம் பல லட்சங்கள்ல! இப்ப சில லட்சம்கூடத் தேற மாட்டேங்கறது. ஃப்ளோட்டிங் பாப்புலேஷன் சரிபாதி குறைஞ்சுடுத்து.”

“எல்லாம் எதனால மாமா?”

“எதைன்னு சொல்ல... சுருக்கமா சொன்னா மதவெறி!”

“இந்த இன்டர்நெட் யுகத்துலயா?”

“எந்த யுகமா இருந்தா என்ன...? வோட் பேங்க்கை நம்பி பாலிடிக்ஸ் நடக்கற தேசம் நம்ம தேசம்! அதுல ஆரம்பிச்ச சிக்கல் இது..”

“ஜனங்களுக்கு உண்மை, பொய் தெரியாதா?”

“ஜனங்களுக்கு இதுல சம்பந்தமேயில்லை... இதெல் லாம் இரண்டு தரப்புலையும் சிலர் பண்ற வேலை...”

“அந்த சிலருக்காக ஒரு ஊரேவா நாசமாகும்?”

“துளி விஷம் குடம் பாலைக் கெடுக்கும்னு படிச்ச தில்லையா?”

"முடிவு..?"

"பால்பானையை மூடி வைக்கறதுதான்...

"அப்படின்னா...?"

"விஷத்துக்கு எந்த நிலையிலேயும் இடம் கொடுக்கக் கூடாது... அவ்ளோதான்..."

நாராயணனுக்குள் ராகவன் பேச்சு ஓடிக்கொண்டே யிருந்தது.

எல்லோரும் வருகிறார்கள். பார்க்கிறார்கள். பேசு கிறார்கள். நிறைய விசாரிப்பு. நிறையச் சிரிப்பு... ஒரு பக்கம், அது அநிச்சையாக நடந்த வண்ணமிருக்கிறது.

மனதிலோ, தன் ஊருக்கு நேர்ந்த சிதைபாடும் அதன் வியாதிப் பெருமூச்சும் மனதை நிரடிக் கொண்டேயிருக்கிறது.

ஒரு ஊரில் பிறந்து, வளர்ந்து வாழ்ந்து கொண் டிருக்கும்போது தெரியாத அதன் அருமை பெருமைகள், அந்த ஊரைவிட்டு நீங்கி பிறிதொரு இடத்தில் வசிக்கத் தொடங்கும் போது தான் எப்பொழுதும் ஒரு வாசம் போல உணரப்படுகிறது.

அதிலும் அமெரிக்காவின் சான்ஃப்ரான்சிஸ்கோ போன்ற நாகரீக முக்தி பெற்ற நகரங்களுக்குப் போய் வந்தபிறகு சொந்த ஊர் என்பது சொர்க்கமாகவே தெரியுமோ என்னவோ..?

'எப்படி இருந்த ஊர் இப்படி ஆகிவிட்டதே' என்று மனதில் பத்து நிமிடத்திற்கொரு கேள்வி எழும்பி எழும்பிக் குத்து கிறது.

மெல்ல நண்பன் கரீமின் ஞாபகம் கிளர்ந்தெழத் தொடங்கு கிறது.

ஆறாம் வகுப்பிலிருந்து ப்ளஸ் டூ வரை ஒன்றாகவே கூடவே படித்தவன் அமெரிக்காவில் இருந்தவரை அடிக்கடி தொடர்பு கொண்டு பேசிக்கொண்டிருந்தான்.

'கோவை வந்தால் ப்ளாக் தண்டர்லாம் போக லாம்டா... அருமையான தீம் பார்க்... ஆனா உன் அமெரிக்க பார்க்குக்கு முன்னாடி சுமாராதான் இருக்கும்...' என்றெல்லாம் பேசினவன்..

"என்ன ஆனான்?"

ராகவன் அந்தக் கேள்வி முன் சற்று நிதானித்தார்.

"வா சாப்டுண்டே பேசுவோம்... என்று டைனிங் டேபிளுக்கு அழைத்தார்.

டேபிளில் அம்மா, தள்ளாமையில் உள்ள அப்பா, சகோதர சகோதரிகள், மாமி, அத்தை என்று ஒரு உறவுச் சமுத்திரம்.

"அவன் இப்ப ஜெயிலில் இருக்கான்... என்று ஒரு இட்லியை விண்டு விழுங்கியபடி மாமா சொன்னபோது, கண்விழி தெறித்துவிடும்போல் இருந்தது நாராயணனுக்கு.

"மாமா... ஏ.... ஏ...

"சாப்டு... நீ எங்க இவ்ளோ நேரம் அவனைப் பத்தியே பேசலையேன்னு நினைச்சேன்..."

"கரீம் என்ன குத்தம் பண்ணினான் மாமா?"

"டெரரிஸ்ட்டுன்னு சொல்றா...!"

"நெஜமாவா?"

"இல்லாமலா பிடிச்சு உள்ள போடுவா...?"

"நம்ப முடியல...

"என்னாலையும்தான்... சரி இப்ப அதைப் பத்திப் பேசறதுல என்ன பிரயோஜனம்!"

"ஆமா! இப்ப கரீம் எங்க இருக்கான்?"

"அவன் எங்க இருந்தா என்ன...? வந்த அன்னிக்கே நீ ஒவரா எக்ஸைட் ஆறே... முதல்ல சாப்டு..."

ஆனால் அவனால் முடியவில்லை. புழுங்கிற்று. நிறைய வியர்த்தது.

சாதாரணமாக கோயமுத்தூர் அத்தனை வியர்க்காது. அதுவே ஆச்சரியமளித்தது.

"என்ன இது... க்ளைமேட் மாறிடுத்தா?"

"அப்படித்தான்... பழைய கோயமுத்தூரை இனி பார்க்க முடியாது. எங்க பார் கட்டடங்கள் யாரைப்பார் டூ வீலர்... ஒரே புகை! க்ளைமேட் எப்படி உருப்படும்?"

மாமா பிள்ளை முதல்தடவையாக வருத்தம் காட்டிப் பேசினான்.

"ஊட்டியைப் போய்ப்பார்.. விடோ மாதிரி 'ஞே'ன்னு இருக்கு..."

இது அத்தை.

'நல்ல செய்தியே காதில் விழாதா? எத்தனை ஆசை ஆசையாக வந்திருக்கிறேன். 'நாராயணனை எல்லாமாய்ச் சேர்ந்து பிசையத் தொடங்கிவிட்டது.

எவ்வளவு முயன்றும் கரீம் முகம் மனதில் முந்துவதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இறுதியாக அவன் சிறையில் இருப்பதையும், அவனைப் பார்ப்பது அத்தனை சுலபமில்லை என்பதையும் உணர்ந்துகொள்ளவே நெடு நேரமானது.

அவனது அந்த முயற்சிகளைப் பார்த்து எல்லோ ருமே சற்றுக் கவலைப்படத்தான் செய்தனர்.

"நாணி... உன் கவலை வெட்டிக்கவலை... கரீம் தப்பு பண்ணான்... ஜெயிலுக்குப் போயிருக்கான். பண்ணவே யில்லைன்னாலும் அது அவன் தலையெழுத்து. வந்ததுல இருந்து ஊர், கரீம்னு மாறி மாறி கவலைப்பட்டுண்டே இருக்கியே... எங்களைப் பத்தி எதையாவது கேட்டியா? விசாரிச்சயா..?"

அத்தை ஒரு பிடி பிடிக்கவேண்டும் என்றே ஆரம் பித்தாள்.

"சாரித்தே... ஐ ஆம் சாரி! அமெரிக்கால இருக்கும் போது அடிக்கடி ஞாபகத்துக்கு வந்து என்னைத் தூக்கி நிறுத்தினது நீங்கள்லாம் மட்டுமில்லை... இந்த ஊரும் தான்! எல்லார்ட்டையும் ரொம்ப பெருமையா சொல்லுவேன்... எங்க கோயமுத்தூர் மாதிரி வராது'ன்னு... ஆனா இங்கே ஊரே ஜெயிலுக்குள்ள போடப்பட்டிருக்கு... நினைச்சே பார்க்க முடியல..."

"அதான் கலி... ஆமா; உன்னோட சான்ஃபிரான் ஸிஸ்கோவைவிட எந்த வகைல இந்தக் கோயமுத்தூரைப் பெரிசா நினைக்க முடியாது. ஏதோ தமிழ்நாட்டுல புழுங்கித் தள்ள, மெட்ராஸ், மதுரைக்குத் தேவலாம்கலாம். நீ என்ன அமெரிக்கால இருந்துட்டு, இந்த ஊரை ஒசத்தியாப் பேசறே?"

"நீ வந்து பார்... நீயும் இதையேதான் சொல்வே... ஊர் அழகா இருந்துட்டா போறுமா... அதுல ஒரு கலகலப்பு இருக்க வேண்டாம்...?"

"அமெரிக்கால இல்லாத கலகலப்பா...! மைக்கேல் ஜாக்சன் ஆல்பம் பார்த்தேன். அது அதுகளும் நம்ம ஊர் மாரியம்மன் கோவில் டப்பாங்குத் தாட்டம்னா குதிக் கறதுகள்..?"

"உனக்குச் சொன்னா புரியாது. ஆட்டம் பாட்டம் சினிமா எல்லாம் இருக்கு. கூடவே தாளமுடியாது ஒரு மிதமிஞ்சின தன்மை, திகட்டல் எல்லாம் இருக்கு. அதோட அதெல்லாம் சனி ஞாயிறுலதான்! வீக் டேஸ்ல நீ இன்னொரு மாடு... வண்டி இழுத்துண்டே இருக்கணும். ஜாப் செக்யூரிட்டி எல்லாம் கிடையாது. பர்சனல் டச் கிடையாது. ஒவ்வொரு மனுஷன் கிட்டேயும் பேசும் போதும் எஸ்.டி.டி.ல நாம மளமளன்னு விஷயத்தைப் பேசற மாதிரிதான் பேசவேண்டியிருக்கு சுருக்கமாச் சொன்னா... உனக்குச் சொல்லிப் புரிய வைக்கமுடியாது. நீ அங்க வந்து ஒருமாசம் இருந்தா தெரிஞ்சிண்டுடுவே..."

நாராயணன் விஸ்தாரமாகிறான். திரும்பவும் வருத்த கதிக்கே வந்து சேர்கிறான்.

"ஆமா! இப்ப கோயமுத்தூர் ரெகவர் ஆக ஆரம் பிச்சிடுத்தா?"

"முன்னைக்கு எவ்வளவோ பரவாயில்லை. இருந்தாலும் திரெட் இருக்கு எங்கேயும் எதுவும் நடக்கலாம். நாட் ஒன்லி ஹியர். டோட்டல் இண்டியாவே இப்ப அப்படித்தான் இருக்கு.."

சாப்பிட்டுக்கொண்டே கவலைப்படாமல் பேசு கின்றார் அப்பா. எப்படி முடிகிறதோ...? ஆனால் அதை மாமா புரிந்துகொண்டார். பதிலும் சொன்னார்.

"இப்படி எல்லாம் நடக்கறது நல்லதுதான் நாராயணா! எப்படின்னா, மொத்தமா ஒரு அடி விழும் போதுதான் ஜாதி,

மதம் எல்லாத்தையும் விட்டுட்டு மனுஷன்கற பிடிக்கு எல்லாரும் வரா! முதல்ல உயிரோட இருக்கணும்... நாம இருந்தாதானே நம்ம சாதியோ நம்ம மதமோ இருக்கும்... ஆகையால உயிரோட இருக்கணும்னா மனுஷனா இருந்து மனுஷனா நடந்துக்கணும்னு ஒரு மெஸேஜ் கோயமுத்தூர் மூலமா பாசாகியிருக்கறதாதான் நான் நினைக்கறேன். அடேயப்பா, சாதிக்கு சாதிச்சங்கம், ஊர்வலம், சிலை திறப்புன்னு எத்தனை அமர்க்களம்.. எத்தனை அமர்க்களம்! புல்லுக்கு நெல்லுக்குல்லாம் அரசியல் தலைவர் பேர்... பஸ்சுக்கு காருக்கெல்லாம் சாதித் தலைவர் பேர்... எல்லாம் இப்ப ஒரு கட்டுக்கு வந்துருக்கு... தொண்டால முடியாததை குண்டு பண்ணியிருக்கு!" – மாமா பாராட்டுகிறாரா, படம் பிடிக்கிறாரா, வருத்தப்படுகிறாரா என்றே கண்டு பிடிக்க முடிய வில்லை.

இந்த பிரக்ஞை, சோஷியல் திங்கிங் எல்லாம் அமெரிக்கா போகுமுன்புவரை இத்தனை விஸ்தாரமாக இருந்ததே இல்லை. அங்கே போனதால்தான் தாய், மண், தங்கமண் என்பதே புரியவந்தது.

சினிமாவில் வரும் அமெரிக்கா சரியான ஏமாற்று அமெரிக்கா....! ஏமாந்தவனுக்கல்லவா தெரியும்? அவன் மாமா சொன்னது போல்தான்... மொத்தத்தையும் இழந்து விடுவோம் எனும்போதுதான் எல்லாமே ஒன்றுபட்டு ஒரு பதற்றம் உருவாகிறது.

அப்படி இல்லாதபோது மனதிற்கு வருவதெல்லாம் வெறும் உப்பு புளிக்கவலைகள்தான். புடவை நெக்லஸ், ப்ஃளாட் வீடு, ஆசைகள்தான். சுய முன்னேற்ற சுயநலச் சிந்தனைகள்தான்!

**மி**கவும் சிரமப்பட்டு கோவைச்சிறைக்கு கரீமைப் பார்க்கப்போன போது, அந்தச் சூழல் வித்தியாசமாக இருந்தது.

கஷ்டப்பட்டு காரணம் சொல்லி, மனு எழுதித் தந்து, நிரம்பக் காத்திருந்து பிறகுதான் கரீமைப் பார்க்க முடிந்தது.

ஒரு வாரத்துக்குப் பக்கமாய் தோய்த்திராத பேண்ட் சட்டை. தலையில் குல்லாய் என்று அவன் தென்பட்ட விதத்தில் தீக்குச்சி பின்முதுகில் உரசப்பட்ட ஒரு அதிர்ச்சி நாராயணனுக்கு!

சாதாரணமாகப் பார்க்கும்போதுகூட உற்சாகமாக ஓடிவருவான். கைகளை இழுத்துப் பிடித்துக் கொண்டு மேலேற்றி, கீழிறக்கி, வளைத்து, விசைத்து உரிமை, வாஞ்சை, ஸ்நேகம் எல்லாம் ஒன்றுபட்ட ஒரு கலவை காட்டிப் பேசுவான்... இன்று ஐந்து வருஷம் கழித்துப் பார்க்க வந்திருக்கும் நாராயணனை, யாரோ ஒரு அன்னியனைப் பார்ப்பதுபோல் பார்க்கிறான். சப்தம் செத்த குரல்... உணர்ச்சி காய்ந்த பார்வை.

"வா நாராயணா... எப்ப வந்தே?"

"இன்னிக்குத்தான்... என்னடா கரீம் இதெல்லாம்...?"

"ப்ச்ச்ச்... உங்கம்மா சொல்வாங்களே... அஷ்டமத்துல சனி வந்தா அகப்பட்டாகணும்னு... அப்படியோ என்னவோ?"

"பரவால்ல நாராயணா... மறக்காம பார்க்க வந்துருக்கே.. அதுலையும் வந்த அன்னிக்கே! ஆனா ஒரு உண்மை தெரியுமோ?"

"உன்னை நான் சுத்தமா மறந்துட்டேன் நாராயணன்கறவர் உங்களப் பார்க்க வந்துருக்கார்'னு சொன்னப்போ சுத்தமா ஞாபகம் வரலை... யாரு யாருன்னு குழம்பிட்டேன்."

"நிஜமாவா?"

"ஆமாம் நாராயணா பாத்தியா நாம கோயமுத்தூரை. இங்கையே வளர்ந்து பொறந்த நான் இப்ப இந்த ஊர் அகதி..." – சொல்லும்போதே கரீமின் கண்களில் நீர் சொட்டும், கோட்டு வாயில் எச்சில் குச்சியும் உருவாகி அழுத்தம் கூட்டுகின்றன.

"ஆமா! நீ எப்படி உள்ள வந்தே... எனிதிங் ராங்?"

"குண்டு வெச்சேனான்னு நேரா கேளேன்...

"எனக்கேதுடா அந்த தைரியம்? ஆனா ஒண்ணுடா... யார் செஞ்சிருந்தாலும் சரி.... நாசமாப் போவாங்க..."

அவன் பேசும் விதத்தில், அவனுக்கு அணு அளவு சம்பந்தம் இல்லாத ஒரு சத்தியம் பட்டவர்த்தனாகப் புரிய வந்தது. பார்வை அவன் தொப்பியை ஊன்றிய போது புரிந்து கொண்டு பதில் சொன்னான் கரீம்.

"புதுசா இருக்குல்ல...? இது எங்களை நாங்க தனியா அடையாளம் காட்டிக்க... இங்க அவசியமாவும் இருக்கு. உள்ள மனுஷனா இருக்க முடியாத ஒரு பெரிய கூட்டம் இருக்கே.. அவங்ககிட்ட இருந்து எங்களைக் காப்பாத்திக்க... ஆமா... எதுவும் வாங்கிட்டு வரலையா?"

அவன் அப்படிக் கேட்கும்போதுதான் 'அடடா... என்று உச்சியில் உறைப்பு தட்டியது.

"வெள்றிக்காயும் உப்பு மிளகாயும்கூட கோடி ரூபா சமாச்சாரம் நாராயணா இங்க..." – திரும்பவும் சொல்லும் போதே விசும்பல் கரீமிடம்.

நடுவில் ஒரு போலீஸ்காரர் குச்சியை இடுப்பில் லேசாகக் குத்தி 'முடித்துக் கொள்' என்று சொல்லிவிட்டு நாராயணனையும் ஒரு பார்வை பார்த்து விட்டுப் போனார். அவர் போகவும் அவரை கரீம் பார்த்த பார்வையில் நெருப்பின் ஜ்வாலை.

"சரி கிளம்பு; சந்தோஷம்... நான் வரேன்..." கரீம் சொல்லித் திரும்ப முனைய, இன்னொரு அவனைப் போன்ற சகா "யார் கரீம்... நோட்டம் பாக்க வந்திருக்கானா? எதையாவது உளறி வைக்காதே. நமக்கெல்லாம் நாமதான்!" என்றான்.

நாராயணனை அது சற்று நறுக்கிற்று.

கரீம் வெளிறலோடு ஈரம் கசியப் பார்க்கிறான். திரும்ப நெருங்கி வருகிறான்.

"தப்பா எடுத்துக்காதே... எங்களுக்குத் தெரிஞ்சு எனக்கு எவ்வளவோ இந்து நண்பர்கள் இருந்தாலும், பார்க்க வந்திருக்கிறது நீதான். மத்தவங்களுக்கெல்லாம் பயம், கோபம், என்னென்னவோ? தப்பு சொல்லலை... அவங்களுக்கு அவங்க வலி, எங்களுக்கு இங்க வேற விதமா...! அதனாலதான் அவன் அப்படி பேசறான். இந்த நிலையை யார், எங்க, எப்படி மாத்தப் போறாங்களோ தெரியல... எனக்கே பயமா இருக்கு. ஒண்ணு உறுதி. நான் இப்படியே நெருப்பா இருந்தா சத்யமா டெரரிஸ்டுடா...!" சொல்ல வந்து முடிக்க முடியாது விறு விறுவென்று அங்கிருந்து விலகி மறைந்து போகிறான்.

நாராயணனுக்குத் திரும்பி நடக்கவே தோன்றாத போது திரும்பவும் வந்தான் கரீம். சற்று கட்டுப்பாடு மீறி சிலிர்ப்பெடுத்த ஓட்டத்தில்...

"நாராயணா...

"என்ன கரீம்?"

"எங்கம்மா எப்படி இருக்காங்கன்னு பார்த்துட்டு வந்து சொல்றயா...? பத்து பதினைந்து நாளாச்சு... தகவலே இல்ல.."

"கட்டாயமா...

"சந்தோஷம்டா... அடுத்து வருவேதானே?"

"உம்ம்.."

"தேங்க்ஸ்... தேங்க்ஸ்.... தேங்க்ஸ்... – நிறைய தேங்க்ஸ்களோடு இழுத்துச் செல்லப்பட்டான்.

உயரவும் இல்லாமல், தாழவும் இல்லாதபடிக்கு ஒரு இரண்டும் கெட்ட வீதி அது. நிறைய தெருநாய்கள் எச்சில் சோறால் நன்றி மிக்க ஜீவன்களாக உருமாறி, மனிதன் மிக விரயம் செய்யக் கூடியவன் என்கிற செய்தித் துணுக்குகளாய் அவை ஓடியாடிக் கொண்டிருக்கின்றன.

கரீமின் வீடு நடுவில். முன்னால் ஒரு சைக்கிள் கடை. பக்கவாட்டில் பட்டியக்கல் போடப்பட்ட ஒரு குட்டிச் சந்து.

நுழைந்தால் கூரை மேல் பழைய டயர்களாகக் கிடக்க, கீழே காரை உதிர்ந்தசுவர்களோடு வீடு. நாராயணன் காரை வெளியில் நிறுத்திவிட்டு, சந்தில் புகுந்து உள்ளே வீட்டு வாசலில் நின்று எட்டிப் பார்த்தபோது, கரீமின் தாய் படுத்த படுக்கையாக இருப்பது தெரிந்தது.

நாராயணன் வந்திருப்பதை யாரோ போய் சொல்ல, கயிற்றுக் கட்டிலில் அந்தப் பெண்மணி சிலிர்த்து எழுகிறாள்.

"யாரு நாராயணனா...? கவுண்டம்பாளையம் நாராயணனா...?"

"ஆமாம்... உங்க மகன் கரீமோட ஃப்ரண்ட் நாராயணனேதான்..."

"எப்பப்பா வந்தே..? எப்படி இருக்கே?"

"நல்லா இருக்கேன்மா... இன்னிக்குத்தான் வந்தேன்...

"வந்த அன்னிக்கே உன் கரீமைப் பார்க்க வந்துட்டியா...? அவன் இப்ப இங்க இல்லய்யா..." அவள் முடிக்கும் முன்பே பொங்கி வரும் அழுகையோடு மொத்த உடலும் தூக்கியடிக்க விசும்புகிறாள்.

"தெரியும்மா... எல்லாம் கேள்விப்பட்டேன்.."

"கடைசி காலத்துல எனக்குக் கஞ்சி ஊத்த வேண்டி யவன், ஜெயில்ல கஞ்சி குடிச்சிக்கிட்டு இருக்கான். தலை எழுத்த பாத்தியா... ஒண்ணா படிச்சீங்க..? வளர்ந்தீங்க.... உனக்கு ஒரு நல்ல பாதையை காட்டுன அல்லா, என் மகனை மட்டும் தண்டிச்சிட்டான் நாராயணா...!" – திரும்ப அழுகிறாள்.

"உண்மைல என்னம்மா நடந்துச்சு...?"

"அவன் பேர்ல ஒரு தப்புமில்ல நாராயணா... குண்டு வெடிச்ச இடத்துல இருந்தான்னு பிடிச்சிட்டாங்க. எல்லாம் பொய் கேஸ். உனக்குத்தான் தெரியுமே, கரீமுக்கு இதெல் லாம் சுத்தமா பிடிக்காதுன்னு...? அவன் என் மகன். தப்பு தண்டாவுக்கெல்லாம் போக மாட்டான். ஆனா, நான் இப்ப இங்க அனாதையா இருந்து கஷ்டப்படறதப் பார்த்து அவனும் மாற ஆரம்பிச்சிட்டான். எப்படியோ கஷ்டப்பட்டு மனு போட்டு அவனைப் பார்க்கப் போனேன். 'சும்மா நான் இனிமே மனுஷனா இருக்கறதுல அர்த்தமேயில்லம்மா... இதுவரைக்கும் துப்பாக்கிக் குண்டை எல்லாம் சினிமாலதான் பார்த்துருக்கேன். இனிமே

நிஜத்துல பார்க்கப் போறேன். வேறி வழியே தெரியல' ன்னான். பார்த்தியா என் நிலைய..."

அந்தக் கிழவியின் அழுகை நாராயணனை என்ன வெல்லாமோ செய்கிறது.

"ஆமா! இப்ப உங்களை யார் பார்த்துக்கறா...?"

"அக்கம் பக்கம்தான்...

"என்கூட எங்க வீட்டுக்கு வரீங்களா?"

"என்னப்பா சொல்றே..?"

அந்தக் கிழவி அதிர்ச்சியோடு எழுந்து அமர்ந்தாள்.

"ஆமாம்மா... எங்க வீட்டுக்கு வாங்க. கரீம் வெளிய வரட்டும்.. அதுவரை நாங்க பார்த்துக்கறோம்..."

நாராயணன் பேச்சு, அந்தத் தாய்க்கு ஒரு பெரிய அதிசய மாகத்தான் தெரிகிறது.

ஒரு மளிகைக் கடைக்காரர்கூட, கடைக்குப் போனால் கசந்து வழிந்து கொண்டு சாமான் தரும் நிலையில், இவன் எப்படி இத்தனை அன்பாக கசப்பேயில்லாமல் ஒரு மனிதனாகச் சிந்தித்து மனிதனாகவே பேசுகிறான்?

வியப்பு அவள் கண்களில் பல மாதிரிகளில் பிரதி பலிக்கிறது.

"என்ன அப்படிப் பாக்கறீங்க? நான் நிஜமாத்தான் சொல்றேன். வாங்க... கொஞ்சநாள் எங்க வீட்ல இருக்க லாம். எவ்வளவு நாள் நாங்க படிக்கும்போது நீங்க டீ போட்டுத் தந்திருப்பீங்க... கொஞ்ச நாள் நாங்கதான் உங்களுக்குச் செய்யறோமே? கிளம்பறீங்களா?"

அவன் கேள்விமுன் அவள் கை கூப்பித் தொழுகிறாள்.

“நீ சொன்னதே போதும் நாராயணா... சொன்னதே போதும்! உள்ள இருக்கற என் பிள்ளைக்குத்தான் என்னால கவலைன்னா, உனக்கும் என்னால பிரச்சினை வர வேண்டாம். உன்னால முடிஞ்சா கரீமை வெளிய எடுக்க ஏதாவது உதவி பண்ணு...”

“அதுக்குத்தான்மா உங்கள நான் என் வீட்டுக்குக் கூப்பிடறேன்... முதல்ல உங்க கவலை அவனுக்கு நீங்கணும்... அப்புறமா சொன்னீங்களே... ‘நான் மனுஷனா இருக்கறதுல அர்த்தமேயில்லைன்னு அவன் சொன்னான்’னு.... அந்த நெருப்பை அணைக்கணும். கரீம் நிச்சயம் தப்புப் பண்ணியிருக்க மாட்டான். பண்ணியிருந்தாலும் இனி பண்ணக்கூடாதுன்னு அவன் நினைக்கணும்... அதுக்கு என்ன பண்ணணுமோ அதைத்தான் நான் பண்றேன்!”

நாராயணனின் திடமானவாஞ்சை அவளைக் கட்டிப் போடுகிறது.

பின்னர் சுற்றியிருப்பவர்கள் ஆச்சரியத்துடன் பார்க்க காரில் அவளை ஏற்றிக் கொள்கிறான்.

அந்த வீட்டைப் பூட்டி சாவியையும் எடுத்துக் கொள்கிறான். கார் வேகமெடுக்கிறது.

பழைய கோயமுத்தூருக்குள் பழைய நாராயணனாக நுழைவது போலிருக்கிறது. ஆனால் புடம் போட்ட புதிய சிந்தனைகளோடு...!

# 10

## வாத்தியார்

முந்தின நாள் இரவில் உறங்கப் போகும்போது இருந்த அமைதி விடியலில் இல்லாமல் போய்விட்டது. 'உமா மகேஸ்வரா... உலகைக் காக்கும் பரம்பொருளே... கலைமகள், அலைமகள், மலைமகள் இம்மூவரையும் காண... மாரியம்மா எங்கள் மாரியம்மா...'

கலவையாய் ரேடியோ குழாய்களின் சத்தம் அந்த விடியும் வேளையில் காதைப் பிடித்துத் திருகி எழுப்புகிறது ஒவ் வொருவரையும்...

வாத்தியார் அருணாசலம் தூக்கம் கலைந்து எழுந்தார். உடம்பை முறுக்கி சோம்பல் முறித்தார். எழுந்து வெளியே கிளம்பினார். எட்டி சில தப்படிகள் போட்டால் வைகை ஆற்றைப் பிடித்துவிடலாம்.

கைகளைப் பின் முதுகில் கோத்துக் கட்டிக்கொண்டு வாயில் ஒரு பீடி கமற விதுக்கு விதுக்கு என்று ஒரு கூட்டம் வைகைப் பக்கம் போய் குந்தி இருந்துவிட்டு வரும். அருணாசலமும் விதிவிலக்கல்ல.

ஒவ்வொரு நாளும் வைகை நோக்கி நடக்கும் போதும் வீட்டில் ஒரு கக்கூஸ் கட்டிவிட சங்கல்பம் எடுத்துக் கொள் கிறார். நேரமும் காலமும்தான் கூடிவரமாட்டேனென்கிறது.

சிவன் கை வைக்க, பொங்கிப் பெருகியதாகப் புராணம் சொல்லும் வைகை, இன்று சாயம் போட்டது போல் கறுத்துக்

கள்ளிமுள்ளிச் செடி சூழ கிடக்கிறது. முடிந்தவரை ஆற்றின் கரைபாகம் திருடப்பட்டு குடிசைகள், ஏன்... சில இடங்களில் நூர்சுக் கட்டடங்களே உருவாகி விட்டிருக்கின்றன.

அதையும் கடந்து கருவேல மரக்கூட்டம். அமரும் போது மறைத்து மானம் காக்கவென்றே பிச்சைக்காரியின் ஆடைபோல் கிளை விட்டிருக்கிறது.

அருணாசலம் அதனுள் நுழையும்போது மூக்கைக் கமரவிட்டது ஒரு வாடை திரும்பியபோது சாராய ஊறலைத் தோண்டி எடுத்துக் கொண்டிருந்தான். ஏரியா தாதா வரதனின் கையாளான உப்பிலி. அருணாசலத்தைப் பார்த்து, "என்னா வாத்யாரே ஜலவாதிக்கா..." என்று கேட்டபடியே ஊறல் டின்னைத் தூக்கி தோளில் வைத்துக்கொண்டான்.

"என்னடா இது காலங்காத்தால...?"

"குளிர்காலம் வந்தாச்சுல்ல... ஒரு கிளாஸ் போட்டாத் தானே சிலருக்கு கணகணன்னு இருக்கும்..."

சாமி சப்பரத்துக்குத் தோள் தருகிற மாதிரி தன் தோளில் அதைத் தாங்கிய படியே அங்கிருந்து நழுவுகிறான் உப்பிலி அருணாசலம் மனதை என்னவோ செய்கிறது அந்தக் காட்சி போய் ஓர் இடம் பார்த்து அமரலாம் என்றால், அங்கங்கே கிடக்கும் நிரோத்துகள் கண்ணில்பட்டு ராத்திரி அங்கு என்ன நடந்திருக்கக்கூடும் என்கிற நினைப்பை உருவாக்குகின்றன.

**சி**லம்பக் கூடத்தில் ஒரு கூட்டமே கழியைச் சுழற்றிக் கொண்டிருக்கிறது. அருணாசலம் நுழையவும் தேக்கம் கொடுத்து ஒரு சின்னக் கையசைவில் வந்தனம் புரிந்துவிட்டு 'விர்ர்ர்... பிர்ர்ர்..' என்று திரும்ப தாவிக் குதித்துச் சுழற்ற ஆரம்பித்து விடுகின்றனர்.

அதைப் பார்த்துவிட்டு, திரும்ப வந்த வழி கிளம்புகிறார் அருணாசலம். ஒருவன் அவரை நெருங்கி வருகிறான்.

"மாமா...

"ஏலே..?"

"வந்தீங்க... கிளம்பிட்டீங்களே...

"மனசு சரியில்லே மருது...

"என்ன சிக்கல் மாமா?"

"ஆமா... எதுக்குடா ஒரே ஏரியால மூணு பேர் கோயில்ல ரேடியோ கொழா கட்றாங்க?"

"அது... அது"

"என்னா அது... பாடம் படிக்கிற பிள்ளைங்க, வயசான வியாதியஸ்தங்கன்னு எம்புட்டுப் பேர் இருக்காங்க. இப்படி ரவுசு பண்ணா நல்லாவா இருக்கு...?"

"சொன்னா கேக்க மாட்டாங்க மாமா. அதோட பிள்ளையார் கோயில் கமிட்டித் தலைவர் வேற... மாரியாத்தா கோயில் கமிட்டித் தலைவர் வேற... இவங்க வார்டு எலெக்ஷன்ஸ் எதிரெதிரா மோதிக்கிட்டவங்க."

"அவங்க மோதிக்கிட்டாங்க... இப்ப மோதிக்கிறாங்க... தெருக்காரங்க என்னா பண்றாங்க?"

"ஊர் வம்பு நமக்கெதுக்குன்னு பாக்கறாங்க,"

"சத்தம் போட்டு ரவுசு பண்றதுக்குப் பேராடா பக்தி... ஏன்டா இப்படி இருக்கீங்க...?"

அருணாசலம் தன் மன உளைச்சலை பீறிட்டுக் காட்டி விட்டு நிற்கப் பிரியமின்றி கிளம்புகிறார்.

"வணக்கம் வாத்யாரே..." – சிகரெட்டை காலில் தேய்த்துக் கொண்டு கசியும் புகை உதட்டைப் பூசி மூடியபடி எதிரில் வரதன்.

ஏரியா தாதா...! இன்று கறுப்பு வேட்டி சட்டையோடு!

"என்ன வரதா.... என்ன இது கோலம்?"

"மலைக்கு மாலை போட்ருக்கேன் வாத்யாரே" – அடுத்த நொடி, குத்தீட்டி போல அவனைப் பார்க்கின்றன அவர் கண்கள்.

அவனும் புரிந்துகொள்கிறான்.

"மாலை போட்டா ஒரு கண்ட்ரோல் வரும்னு தான்.."

"சிகரெட்டையே உடமுடியல. உனக்குதான் கண்ட்ரோல் வரப்போகுதாக்கும். பாவம் ஐயப்பன். சரி, விஷயத்துக்கு வா.."

"வார்டு எலெக்ஷன் வருது. நிக்கலாம்னு...

"கவுன்சிலருக்கா?"

அவன் தலையாட்டுகிறான்.

"நில்லு. என்கிட்ட எதுக்கு வந்தே?"

"நம்ம சிலம்பாட்டக் கொட்டாய்க்கு வர்ற பசங்க கிட்ட, அப்பால, ஏரியாலன்னு நீங்க எனக்குச் சொல்லி வோட்டுப் போடச் சொல்லணும்."

"உனக்கா...?" – அந்தக் 'கா'வில் ஒரு டன் அழுத்தம் வைக்கிறார் அருணாசலம்.

"நான் உங்க பிரதம சீடன்... தப்புத்தண்டா பண்ணி யிருக்கலாம். மாறி, நல்லது பண்ண நினைச்சேன். எகத்தாளம் பேசுனா எப்படி...?"

"அப்படியா... மொதல்ல மாலையக் கழட்டு. ஐயப்ப சாமி விரதம் ஒண்ணும் நீயும் நானும் இருக்க முடிஞ்ச விரதமில்ல. அது தபசு. நம்ம வசதிக்கு அதை வளைக்கக் கூடாது. தாதா, சாமியா மனசார மாறணும். சந்தர்ப்பத்துக்கு மாறக்கூடாது. அப்படியே சமாதானமாப் பேசி, கத்தற இந்த மூணு கொழாயையும் நிறுத்து. சத்தத்துல இல்ல பக்தி. உன் ஆள் உப்பிலி காலைலயே ஆத்தங் கரையில கரகம் தூக்கிட்டான். அதைத் தூக்கி எறி. இது இடைத்தேர்தல். இதுக்குள்ற மூக்கை நுழைக்காம, இன்னும் இருக்கற மூணு வருஷத்துக்கு ஒழுங்கா இருந்து காட்டு. அடுத்த வார்டு எலெக்ஷனுக்கு உனக்கு வோட்டுப் போடறதப்பத்தியும் மத்தவங்களைப் போடச் சொல்றதப்பத்தியும் யோசிக்கிறேன்...."

பொட்டிலடித்தாற்போல் பேசிவிட்டு நடந்த அருணா சலம், சிறிது தூரம் சென்றுவிட்டு நின்று திரும்புகிறார்.

"அப்படியே ரேஷன் கடைல அடிக்கற லூட்டியையும் விடுங்கடா. ரோடு போட்டும் பல ஜென்மமாச்சு. அதுக்கு ஒரு வழியப்பாரு. நம்ம சிலம்பக் கொட்டா பசங்க, இந்த நல்ல காரியத்துக்கு ஒண்ணா கூடுவாங்க... கூடச் சொல்றேன். என்னா...?"

கேட்டுவிட்டு கிளம்புகிறார்.

முறைத்தபடி மீசையை நீவுகிறான் வரதன். பக்கமாய் மருது.

"ஏய்... உன் வாத்யாருக்கு ஊளைக்குசும்பு ஜாஸ்தி யாயிடுச்சுடா. இவன் தயவு இல்லாம ஜெயிக்கறது எப்படின்னு

எனக்குத் தெரியும். ஜெயிச்சும் காட்டுவேன். போய்ச் சொல்லு... என்ன?''

திரும்பவும் மீசையை நீவிவிட்டுக் கொள்கிறான் வரதன்.

தேர்தலுக்கு முதல் நாளன்று காலை. தேசத்தில் மரங்களைவிடவும் அதிகமாக வைக்கப்பட்டுவிட்ட தேசிய தலைவர்களின் சிலை ஒன்றின் கழுத்தில் செருப்பு மாலை தொங்கிக் கொண்டிருந்தது.

அதன் எதிரொலி ரேஷன், ரோடு, மின்சாரம், தண்ணீர் என்று எதன் பொருட்டுக்கும் வராத ஒரு கோபத்தை வர வழைத்து ஓடும் பஸ்ஸில் சிலவற்றையும் பதம் பார்த்து பீதியை உருவாக்கிவிட்டது.

அன்றைய தினம் போலீஸ் லாரிகள் வேறு குறுக்கும் நெடுக்குமாக ஓடி மிரட்டின. இரண்டு பேர் ஏரியாவில் சேர்ந்து நடக்க முடியவில்லை.

மறுநாள் தேர்தல்!

முதல்நாள் எதிரொலியாகப் பெண்கள் யாருமே வோட்டுப் போட வரவில்லை. பயம்.

எல்லாம் வரதனின் வேலை என்ற விஷயம், பின் அப்படியும் இப்படியுமாகக் கசிந்து பரவிவிட்டது. இருந்தும் செருப்புமாலை போடப்பட்ட தலைவரின் கூட்டத்தைச் சேர்ந்தவனாக வரதன் இருந்ததால் எதிர்த் தரப்பின் மேல் உள்ள கோபமும் தாபமும் அவனுக்கு ஓரளவு சாதகமாகி இழுத்துப்பிடித்து சில வாக்குகளில் வரதனே ஜெயித்தும் விட்டான்!

கித்தாய்ப்பாக ஊர்வலம் வந்தான் வரதன். கழுத்தில் மாலைக்கூட்டம் சுற்றிலும் லுங்கியை ஏற்றி கட்டியிருக்கும் ஜால்ராக்கள்.

அங்கங்கே அவனுக்குப் பொட்டிட்டு ஆரத்தி கழிக்கிறார்கள். பேசி வைத்தபடி ஆரத்தி தட்டில் நூறு ரூபாய் நோட்டு விழுகிறது.

தாரை தப்பட்டை தூள் கிளப்புகிறது.

கையும் காலும் ஆட்டமான ஆட்டம் போடுகிறது. அருணாசலம் வீட்டு வாசல் முன் ஊர்வலத்தைத் தேக்கி நிறுத்தி, கம்பீரமாக நின்று வந்த சைக்கிள் ரிக்ஷாவிலிருந்து இறங்குகிறான் வரதன்.

உள்ளே நுழைகிறான்.

"வாத்யாரே.... வாத்யாரே... – குரலோடு உள் நுழைய, அருணாசலத்தின் மனைவி, மக்கள் அவனைப் பார்த்து பட படக்கின்றனர்.

"எங்க, வாத்யார் இல்லியா?" – கேட்கிறான்.

"உள்ள இருக்கேன் வரதா. இப்படி வா.. – அறை ஒன்றிலிருந்து குரல் கொடுக்கிறார் அருணாசலம்.

உடம்பைப் பாதியாக வளைத்து உள் நுழைய வேண்டும். கும்மிருட்டு பரவி இருக்கும். எலிப்புழுக்கை வாசம் கமழும் அறை.

எட்டி உள் நுழைகிறான். கூட்டம் வாசலில் தேங்குகிறது. உடன் வந்தவர்கள் வீட்டு ஹாலில்...

உள்ளே அவன் அவர் முன் கித்தாய்ப்பாக...

“உங்க தயவில்லாமலே ஜெயிச்சுட்டேன்... பார்த் தீங்களா?”

“தெரியும். செருப்புமாலை போட்டப்பவே தெரியும். ஜனங்க ளோட பயம்தானே உன்னை மாதிரியாளுங்களுக்கு முதல்.”

“வெட்டிப்பேச்சு எதுக்கு வாத்யாரே... இனியாச்சும் என் மாதிரியாளுங்ககிட்ட பாத்து நடந்துக்கங்க..”

“போடா பொறுக்கி... – சீற்றத்துடன் எகிறி அவன் முகத்தில் காறி உமிழ்கிறார் அவர்.

அவன் அடுத்தநொடி நெருப்பாகிறான்.

‘வாத்யாரே’ என்று கத்தப் பார்த்து அடக்கிக் கொண்டு முகத்தைத் துடைத்துக் கொள்கிறான்.

“ஏன்டா துடைச்சுக்கறே... அப்படியே வெளியபோய் முகத்தைக் காட்டவேண்டியதுதானே? ஆனா நீ காட்ட மாட்டேன்னு தெரியும். ‘ஊர்வலமா வரும்போது வாத்யாரு காறித்துப்பிட்டாரு’ ன்னு தெரிஞ்சா உனக்குத் தான் அவ மானம்னு உனக்கு நல்லா தெரியும். அதுமட்டுமில்ல... அப்படி செஞ்சதுக்காக அப்பால நீ என்னைத் தாக்கினா, பழிக்குப்பழி வாங்கிட்டேன்னும் ஊர் சொல்லிப்பிடும்.

ஆனா, இப்ப சிரிச்சுகிட்டே வெளிய போய் ஆசீர் வாதம் பண்ணேன்னு சொல்லி சமாளிச்சாதானே நாளைக்கு என் கைகாலை வாங்கும்போது யாரும் சந்தேகப்பட மாட்டாங்க? தெரிஞ்சுதான் துப்பினேன்..

போ.... நாளைக்கே என்னை உன் ஆளுங்களை வெச்சு காலி பண்ணு. மொரட்டுத் தாதாக்களுக்கும், மொண்ணையாகிப்

போய்ட்ட கோழை ஜனங்களுக்கும் நடுவுல வாழறதைவிட, கொலையாகிச் சாகறது லட்சம் மடங்கு மேல்டா. உலுத்தா... லட்சம் மடங்குமேல்...'' – அவனோ அந்தத் கிழவரின் சீற்றம் முன் சிலிர்த்துப்போய் அப்படியே மண்டியிடத் தொடங்கியிருந்தான்.

●

# 11

## கையெழுத்து போடு போஸ்

**வா**க்கு எண்ணிக்கை ஆரம்பமாகி விட்டது! நடக்குமோ நடக்காதோ என்று பிரம்ம ரகசியம் போல் இருந்த குப்பைத் தொட்டி எலெக்ஷன் வந்து நடந்து முடிந்து இதோ வாக்கு எண்ணிக்கையும் ஆரம்பமாகி விட்டது.

'ரஜினி வாழ்க... கமல் வாழ்க... உயிரே நக்மா' என்கிற கரி எழுத்துப் பொன்மொழிகளை கக்கூஸிலும்... $(a+b)^2=ab^2$ என்று ஃபார்முலாக்கள் எழுதப்பட்ட டேபிள் பெஞ்சுகளடியும் கொண்ட முனிசிபல் பள்ளிக்கூட ஓட்டைக் கூரை கீழ்தான் எண்ணிக்கையே நடக்கிறது.

சுற்றிலும் சடை சடையாய் ஜனக்கூட்டம், அனேக வெள்ளை கட்சிக் கரை வேட்டி, மடித்து விட்ட வெள்ளைச் சட்டை, ஆவி போல் பிரியாத துண்டு என்று அக்மார்க் அரசியல்வாதித்தனம் காட்டி நிற்கிறார்கள். அவர்கள் முகங்களில் மதர்த்த மீசை, காய்ந்த கன்னம், குருவிக்கூடு போல் கிராப் என்கிற சராசரி மனிதர் களிடம் தென்படாத சாயல்கள்!

“எப்படியும் கோவிந்துதான். பாத்துக்கிட்டே இரு....

“என்னா ஒரு நாலாயிர ஓட்டு வித்யாசம் வருமா?”

“மிச்சம்....? போடா டவுசரு. மொத்த ஓட்டு பத்தாயிரத்துச் சில்ற. அதுல எட்டாயிரம் நம்ம பயலுக்குத் தான்...”

பள்ளிக் கூடத்துக்கு வெளியில வீரப்பர்கள் கண்ணில் இன்னமும் பட்டிராத சில மதர்த்த மரங்கள். நிழல்களில் தான் இப்படி பரிவர்த்தனை. திடும்மென்று ஒரு சலசலப்பு காரணம் புயல் கோவிந்தன் எனும் வேட்பாளர் விஜயம்தான். அவர் கூடவே இருபதிலிருந்து எழுபது வயது வரைக்கும் இடைப்பட்ட எல்லா வயது நிலைகளிலுமான ஒரு கூட்டம்.

“அண்ணன் கோவிந்தன்” – அதில் ஒரு அன்ட்ராயர் வெளித் தெரியும்படியாய் லுங்கி கட்டியிருக்கும் சாராய உதட்டிடம் திடீர்க் கூவல்.

“வாழ்க...” என்கிற பதில் எதிரொலி.

“எங்கள் குல தெய்வம் அண்ணன் கோவிந்தன்...

“வாழ்க!”

“மகாத்மா கோவிந்தன்.”

“வாழ்க... வாழ்க...

“ஏய் யாருப்பா இது. கோஷம் போட்டுக்கிட்டு? ஓட்டு எண்ற இடத்துல இதெல்லாம் கூடாது...”

“ஏய்ய்... பொத்திக்கிட்டு எண்ணு. எல்லாம் எங்களுக்குத் தெரியும்.”

"சார் என்ன சார் இது ரப்சர். நாங்க எண்ணவா வேண்டாமா?"

"ஏய் ஒட்டு எண்ற இடம் பின்ன என்ன தியான மண்டபம் மாதிரியா இருக்கும்? கண்டுக்காம எண்ணுய்யா."

விதவிதமான கருத்து மோதல்கள் வாதி பிரதிவாதங் களுக்கு நடுவே தேர்தல் கமிஷனின் விதி அது இது என்கிற ஆயிரம் கட்டுமானங்களை மீறிக் கொண்டு வெளியே வரத்தொடங்கிவிட்டது புயல் கோவிந்தனின் முன்னணி விவரம்.

"நா சொல்லலை. அண்ணாத்தைய அசைச்சுக்க முடியாதுன்னு அ... ஆ!... அ.... ஆ! ஆடிர்ர்ர்!!..." ஒரு ஒடிந்து விழும்படியான உருவம் ஆட ஆரம்பித்து விட அந்த ஆட்டம் பார்த்துச் சிலருக்கு மட்டும் துக்கம் தொண்டையை இறுக்க ஆரம்பித்தது. அதில் படையாளி போஸ் பிரதானமாக இருந்தான். புயல் கோவிந்தனை எதிர்த்துப் போட்டியிட்ட சுயேட்சை வேட்பாளன்! புயல் கோவிந்தனால் விலைக்கு வாங்க முடியாத வேட்பாளனும் கூட...

"ஒழுங்கா அண்ணாத்தே தரதாச் சொல்லியிருந்த அம்பது ரூபாயை வாங்கிக்கிட்டிருந்தா இப்ப இப்படி கப்பல் கவுந்தா மாதிரி உக்கார வேண்டி வந்துருக்குமா?"

"மனசுக்குள்ள பெரிய பிஸ்தான்னு நெனைச்சா இப்படித் தாண்டா இப்பத் தெரிதா அரசியல்னா என்னான்னு?"

போஸின் காதை மோதத் தொடங்கிவிட்டன கருத் துக்கள்.

"போஸ் வா போகலாம். இனி இங்க இருக்க வேண்டாம்" அழைக்கிறான் நண்பன் சிந்தாமணி.

போஸும் எழுந்து கொண்டு நடையிட ஆரம்பிக்க "ஒய்ய்யய்.... போசு. இதுவரை உனக்கு எத்தினி ஓட்டு தெரியுமா? நாலு! வெறும் நாலுடா என் சமூக சேவகனே வெறும் நாலு! போடா இனி நீ அரசியலே பேசக்கூடாது... ஓடிடு."

புயல் கோவிந்தனின் வலது கை என்னும் ஒரு கரைவேட்டிதான் இப்படி மிரட்டுவது.

போஸ் அந்த வேட்டியை நின்று ஆழமாக ஒரு பார்வை பார்த்துவிட்டுதான் கிளம்புகிறான். ஊரில் சமூக சேவை செய்து, சத்தியத்துடன் நடந்த போஸ் வெறுமையாய் நடந்தான்.

பள்ளச் சாலையில் ஒரு லாரி வேகம் காட்டியதில் ப்ச்ச்ச் என்று வாரி இறைக்கப்பட்ட சேற்றுக் கரையோடு நடை தொடர்கிறது.

கூடவே பிணத்தை சுமந்து செல்வது போல அவன் சகாக்கள்.

கண்ணில் படுகிறது பித்தளை மூக்கு இல்லாத தெருக் குழாய். பெரும்பாலும் காற்றையும், எப்பொழுதாவது நீரையும் தரும் அதன் முன்னாலும் பிளாஸ்டிக் குடங்களின் ரிசர்வேஷன் க்யூ வரிசை!

அதைப் பார்த்து மாய்ந்து மலைப்பதற்குள் காலுக்குள் புகுந்து ஓடுகிறது. ஒரு வாலில்லாத தெரு நாய். அது துரத்தப் பார்த்த பன்றியோ சாக்கடைக்குள்ளேயே பி.டி. உஷாவைக் பின்பற்றிக் கொண்டிருப்பது தெரிகிறது.

வீடுகளுக்கென்று தனியாக காம்பவுண்டு சுவர்கள் கிடையாது. தட்டிதான் தடுப்புச் சுவர். அதன் மேலெல் லாம்கூட சினிமா போஸ்டர். ஏழ்மையிலும் கலை வளர்நிலை. ஆஹா!

குறிப்பாக மலையாள தேசமே நிர்வாண தேசம் என்கிற அபிப்ராயம் தரும்படியான இன்பவெறி, ஆசை உறவு, ஜில்ஜில் ராத்திரிகள் என்று படபோஸ்டர்கள்.

பார்த்துப் பார்த்து வயிறெரிந்து பேசிப் பேசி வாய் வலித்த விஷயங்கள் இன்றும் நடையிடும் போசின் பார்வையில் படாமல் போகவில்லை.

முன்பெல்லாம் இவைகளுக்காக உணர்ச்சி வசப் பட்டு, பின் விளைவு பற்றி கவலைப்படாமல் கத்திக் கூப்பாடு போட்டு, முனிசிபாலிடி கலெக்டர் ஆபீசு என்று ஏறி இறங்கியவன் இன்று அதற்காகவெல்லாம் வருந்துகின்ற மாதிரி தெரிகிறான்.

'தனிமரம் தோப்பாகாது... பதவி வந்தால் பிறரை செய்யச் சொல்லும் சேவைகளை நாமே செய்யலாம் என்று படையாளி போஸை தேர்தல் களத்தில் இறக்கி விட்ட நண்பர்கள் கூட்டமோ அவனைவிட அதிக வருத்தத்தில்..

"என்ன போசு யாரு லீடிங்?" எதிர்ப்படும் ஒரு மனிதரிடம் கேனத்தனமாக கேள்வி.

"உம்... எப்பவும்போல சத்தியம்.. – விரக்தியான பதில் போசின் நண்பனிடம்.

"சத்தியமா... அது என்னிக்கு ஜெயிச்சிச்சு?"

"இப்படி கேக்கத் தெரியும் – ஆனா ஒழுங்கா ஓட்டுப் போட மட்டும் தெரியாது."

"அப்ப நம்ம புயல் ஜெயிச்சிட்டானா?"

பதில் தந்தவனை முறைத்தபடியே தொடர்கிறது நண்பர் களின் நடை.

கணுக்காலில் வலி கொஞ்சும் நடை அவ்வளவும் வீடு வீடாக ஏறி ஓட்டுக்கேட்ட உழைப்பின் வலி. விளம்பரம் செய்கிறேன் என்று சுவர்களை நாசம் செய்யாமல், போஸ்டர் போட்டு கூத்தடிக்காமல், மைக்கை வைத்து காதை செவிடாக்காமல், சிம்பிளாய் நோட்டீஸ் கூடவே நேர்முக சந்திப்பு அதில் நைச்சியமாக பேச்சு என்று சொற்ப செலவுதான்.

புயல் கோவிந்தன் சாதாரண கவுன்சிலர் எலெக்ஷன் தான் என்றாலும் அதற்கே ஐந்து லட்சத்தை கரைத்திருக்கிறான்!

"போசு... இந்த ஜனங்க பத்தித் தெரியாமப் போயிடுச்சுடா. நல்லதுக்கு காலமில்லைடா..." நடுத்தெரு என்றும் பாராமல் வெடிக்கிறான் போசின் நண்பன் ஒருவன்.

"எவ்வளவு டீசன்டா நடந்துகிட்டோம். நடக்கக் கூடிய வாக்குறுதியக் கொடுத்து நியாயமா ஓட்டுக் கேட்டோமே – இப்படி மோசம் பண்ணிட்டாங்களே..." குமுறல் தொடர்கிறது.

"நான் சொல்லலை. நல்லா செலவு செய்யுங்கப்பா. கஞ்சத்தனம் பண்ணாதீங்கன்னு, ஆட்டோ லாரின்னு விட்டுறுந்தா இப்படி ஆகியிருக்குமா?"

"யாருகிட்டேய்யா இருக்கு காசு? நீ வேற...

"அப்ப உனக்கு எதுக்கு அரசியல்?"

"நல்ல கேள்வி – நியாயமான கேள்வி போசு வாடா போய் செருப்பால அடிச்சுப்போம்..."

– அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வதை, மாய்ந்து போவதை அப்படியே போய் ஒருவன் பெரியவர் தனசேகரப் பிள்ளையிடம் கூற அவர் முகத்தில் அழுத்தமான சிந்தனை.

தனசேகரப் பிள்ளை அந்த வார்டின் பெரும்புள்ளி. அந்த நாளில் கொஞ்சநாள் சிறைவாசி கூட, நல்ல காசுக்காரர்.

சமூகம் குறித்து பலத்த வியாபாரம் உள்ளவர். காந்தியோடு விருந்து சாப்பிட்டவர். இன்று அரசியல் வேண்டாம் என்று ஒதுங்கி நிற்கிறார்.

இப்பொழுது அவரிடம் ஒரு தீர்மானம்.

"போய் அந்த போஸை வரச்சொல்லு..." என்கிறார்.

"வணக்கம், வரச்சொன்னீங்களாமுல்ல... மித மான பணிவோடு தனசேகரப்பிள்ளை எதிரில் போஸ்.

"என்னப்பா பப்ளிக் ஏமாத்திட்டாங்களா?" எடுத்த கேள்வியே அவன் தோல்வி பற்றித்தான் போசிடம் மௌனம் தொடருகிறது.

"என்ன பதிலைக் காணோம்."

"என்னத்தங்க சொல்ல?"

"இப்பவாவது ஜனங்களைப் புரிஞ்சிட்டிருப்பே... இந்த தேசத்துல தப்போ சரியோ எப்பவும் கட்சி அரசியல் தான். சுயேட்சை ஜெயிக்கிறதுங்கறது குதிரைக் கொம்பு – புரிஞ்சுக்கோ."

"அதைச் சொல்லத்தான் கூப்டீங்களா?"

"அடுத்த எலெக்ஷன்லையாவது எதாவது கட்சி சார்பா நில்லு. என்கிட்டவா – நான் உனக்குச் செலவு பண்றேன்."

"உங்க அபிப்ராயத்துக்கு ரொம்ப நன்றி. நான் வரேன்."

"என் கேள்விக்குப் பதில் சொல்லாமப் போறியே."

"என்ன பதில் சொல்லணும்னு எதிர்பார்க்கறீங்க."

"செலவு பண்றேன். கட்சி சார்பா நிக்கறேன். காம்ப்ரமைஸ் பண்ணிக்கிறேன்னு எவ்வளவு இருக்கு?"

"நான் தோப்பேன் – கட்டாயம் தோப்பேன் – நூறு சதவீதம் தோப்பேன், ஆனா நீங்க சொல்றதச் செய்ய மாட்டேன்.

"தோக்கறதுக்காக யாராவது எலெக்ஷன்ல நிப் பாங்களா?"

"இதோ பாருங்க பெரியவரே! இங்க தோக்கற துன்னா உண்மைல நான் தோக்கறதா பொருள் கிடையாது."

"இது என்ன புதுக்கதை?" – தெரியாததுபோல் கேள்வி பெரியவரிடம்.

"கதை இல்ல அதுதான் நிஜம். நான் நானூறு ஓட்டு வாங்கி இருக்கேன். எதிரி நாலாயிரத்துக்கும் மேல வாங்கியிருக்கார். எல்லாத்துக்கும் வேணும்னா அவர் ஜெயிச்சுட்டதா சொல்லலாம். இதுக்கு அவர் கொடுத்துருக்கற விலை பல லட்சம். அதை எடுக்க நிச்சயம் ஊழல் செய்தாதான் முடியும். செய்வார். மாட்டிக்காமச் செய்வார். ஜனங்களுக்கும் தெரியும் கிட்டதட்ட இது ஒரு ஜனநாயக தேர்தல் வியாபாரம். சேவைங்கற தராசை வெச்சு ஜனங்களும் வேட்பாளரும் பண்ற வியாபாரம். ஒரு நாள் இது அலுக்கும். அப்ப என் நானூறு நாலாயிரமாகும். அந்த நாலாயிரம் நானூறாகும். அதுவரை நான் காத்திருக் கணும். காத்திருந்தாதான் வெற்றி அப்படிக் கிடைக்கிற வெற்றியும் உறுதியானதா உத்தமமானதா இருக்கும். அப்ப என்னாலயும் நினைச்சதை நிச்சயம் செய்ய முடியும். ஆனா இப்படிக் காசால வந்தது காசாலேயே போயிடும். காத்துல கயிறு

திரிப்பேன்னு கொடுத்த வாக்குறுதியெல்லாம் எப்படி நிறை வேறப் போகுதுன்னு பாக்க வேண்டாம்?"

படையாளி போசின் பதிலால் தனசேகரப்பிள்ளை விக்கித்து போகிறார்.

"கோவம்தான். ஆனா அதை அடக்கிக்குவேன்."

"விலை போய்ட்டவங்க மேல கோபத்தைக் காட்டு. அதான் சரி."

"காட்டத்தான் போறேன். ஆனா பொறுமையா...

"இதெல்லாம் சினிமா வசனம். யதார்த்தம் வேற தம்பி."

"என்ன பெரிய யதார்த்தம். அறிவில்லாம ஓட்டு போட்டீங்களே அனுபவிங்கன்னு சொல்றதா யதார்த்தம். இந்த நிலையிலேயும் நம்பிக்கையோட நான் மாறாம இருக் கணும். ஒரு பூட்டுதான் பெரியவரே மொத்த வீட்டுக்கும் பாதுகாப்பு தருது. நான் அந்தப் பூட்டு மாதிரி. காத்திருப்பேன். இன்னிக்கு மாதிரியே அப்படியே... ஒரு நா நிச்சயம் பயன் படுவேன்.."

"அப்ப இதுல ஒரு கையெழுத்துபோடு... பெரியவர் திடீரென்று ஒரு பத்திரத்தைத் தூக்கிப் போடுகிறார்.

"எதுக்கு?"

"என்னோட சொத்தையெல்லாம் பராமரிக்கப் போற அறக்கட்டளைக்கு இனி நீதான் எல்லாம். கை சுத்தம் – மனசுத்தம் உள்ள ஒருத்தனுக்காக காத்திருந்தேன்.

இந்த எலெக்ஷன்ல முறையா நின்னு உண்மை பேசி விலை போகாம இருந்து தோத்தும் சோர்ந்து போகாம சத்யமா நடந்துக்க

ஆசைப்படற உன்னை விடவா ஒரு ஆளை நான் பாத்துடப் போறேன்?”

படையாளி போஸிடம் தயக்கம் – தடுமாற்றம்.

“வாங்கிக்கய்யா... சேவைய எந்த ரூபத்துல செஞ்சா என்ன? நிஜமா ஜெயிக்கறதுதானே முக்யம்?”

கையெழுத்து போடுகிறான் படையாளி போஸ்.

செலவழித்து பெற்ற அந்த வெற்றி முன்னால் செல வழியாமல் வெற்றி பெற்ற படையாளி போஸ் தோற்கவில்லை தானே?

●

# 12

## கொல்லையில் ஒரு பாம்பு

**நி**னைக்கும்போதே நாச்சம்மைக்குப் பகீர் என்கிறது அடேயப்பா எத்தனை பெரிய பாம்பு! உடல் முழுக்க கோதுமை கோதுமையாய் தழும்பு. பருத்த ரஸ்தாளி கணக்காய் உருண்டு திரண்ட ஐந்து அடி கடந்த உடம்பு!

கொல்லையில் வேலி மேல் அது நெளிசலாய் கிடந்த விதத்தில் வயிற்றின் குடல் நெளிசலில் கூட நாச்சம்மைக்கு சிக்கு விழுந்து விட்டது.

குண்டு மணியாய் கண்ணும் – இரட்டை நாக்கில் ‘ச்ருட்’ என்கிற சப்தமும் – ஐய்யோ!

— கண்மூடி காதுபொத்தி ஒரு பெண்ணின் அக்மார்க் பயம் இப்படித்தான் இருக்கும் என்கிற விதத்தில் பயந்தவள் இப்பொழுதெல்லாம் கொல்லைப் பக்கமே போவதில்லை.

— கொல்லைப்புறமும் மதர்த்துப் போய்தான் கிடக்கிறது.

— கன்னா பின்னாவென்று செடிகள். இடுப்பு கடந்த பார்த்தீனிய சனியன் வேறு. ஊடே ஊடே அவரை, கரை, என்று செடிகள் தெரிந்தாலும் அநியாயத்துக்கு குப்பை மேனியும் பார்த்தீனியமும்தான் கொட்டம் போட்டு வளர்ந்திருக்கின்றன.

— சுத்தப்படுத்த வேண்டும் என்று நினைத்துக் கொள்வதோடு சரி.

எங்கே ஒழிகிறது?

— அதிலும் ஒவ்வொரு மாதமும் அந்த மூன்று நாட்களில் வீட்டு விலக்காகி ஒதுங்கி உட்காரும் கட்டாயங்களில் எல்லாம் சுத்தப்படுத்தி விட்டுத்தான் மறுவேலை என்று தோன்றும்.

— பெயருக்குக் கொஞ்சம் பிடுங்கி எறியப்படும். ஆனாலும்,

— மண்வாகிற்கு நான்கு நாளில் ராட்சஸமாய் வளர்ந்து விடுகிறது. எல்லாம் தாமிரபரணி ஆற்றங்கரைவாகு!

— கொல்லையில் இருக்கிறது அந்த குடிசை. நாகுப் பிள்ளை வம்சத்துப் பெண்டுகள் ஒதுங்க வேண்டும் என்பதற் காகவே பின்னப்பட்டது.

— இந்த இன்சாட் யுகத்திலும் பிள்ளை ஆச்சார சீலர். கார்த்திகையில் சபரிமலை, பங்குனியில் பழனி, புரட்டாசியில் திருப்பதி என்று வகை தொகையோடு விரதம் இருந்து மலைக்கு போய்வரும் ஜாதி.

— இதனால் பெண்டு பிள்ளைகள் தீட்டு விஷயத்தில் குப்பை போல் மூலை முடங்கிக் கிடந்தே தீர வேண்டியிருக்கிறது.

— நாச்சம்மைக்கு இப்பொழுது அதுதான் இடிக்கிறது.

— அடுத்து முடங்கப் போகிறவள் அவள்தான்.

— ஆயிற்று நாள் வந்து விட்டது. வீட்டுக்குள்ளே ஒரு ராட்சஸி இருக்கிறாள். நாச்சம்மைக்கு சித்தி! யார் எப்பொழுது சிறுநீர் கழிப்பார்கள், சொறிந்து கொள்வார்கள் என்பது முதற்கொண்டு தெரிந்து வைத்திருப்பவள்.

— 'இவளிடமும் தப்பமுடியாது... கொல்லைப்புறத்து பாம்பிடமிருந்தும் தப்பமுடியாது போலிருக்கிறதே?"

— மிடறு விழுங்கிக்கொண்டு வியர்க்க விறுவிறுக்க விளக்குமாற்று கையோடு நிற்பவளை சித்திக்காரி இடிக்கிறாள்.

"என்னாடி மச மசன்னு நின்னா எப்படி? பிள்ள மக்க நின்னா கள்ளிகளைச் சேர்த்துடும்பாங்க" என்று கிராமத்து சினிமாக் கிழவி போலவே குகை வாய் திறக்கிறாள்.

"சித்தி... சித்தி...

"என்னவே வெச்சுருக்கே சித்திக்கு...

"கொல்லைப்புறமா பாம்பு."

"அதுக்கென்ன?"

"ஐய்யோ – பெரிய பாம்பு சித்தி"

"கொல்லைன்னா பாம்பும் வரும், தேளும் வரும். அதுக்கென்ன?"

“இல்ல சித்தி எனக்கு நாளு அதான்!”

— சித்தியின் பொட்டு வைத்து புண்ணான வெற்றி யிடுக்கில் இப்பொழுது ஆயிரம் வோல்ட் மின்சாரம்.

ஓடிப்போய் எட்டிப் பார்க்கிறாள். அந்த சர்ப்பம் மனிதனைப் பார்த்த பயம் துளியும் இன்றி அமர்ந்த இடத்திலேயே ஆதிசேஷன் கணக்காய் தரிசனம் வேறு தருகிறது.

“அப்பாடி” சித்தியின் வாய் மேலும் விரிகிறது. பருத்தத் தொடையில் படபடப்பு வந்து தொற்றிக் கொள்கிறது.

“பாத்தீங்களா?”

“டீ... நம்ம கதிரேசனை கூப்பிடுவே. கதிரேசா! அடேய் கதிரேசா....”

நின்ற இடத்திலிருந்து அபயக் குரல் எழுப்புகிறாள்.

ஓடிவருகிறான் கதிரேசனும், உடன் பிறந்த தம்பி ஷண்முகமும்.

“அங்க பார்ரா பாம்பு ஐயோ எத்தனை பெரிசுவே?”

கை காட்டுகிறாள். கதிரேசனும் நடுக்கம் கொள் கிறான், உள் திரும்பி ஓடி கழியை எடுத்து வருகிறான்.

அவன் அப்படி வருவான் என்று தெரிந்தோ என்னவோ அந்த நாகம் சரேலென்று விலகிச் செல்ல ஆரம்பித்தது.

மின்னல் வேகத்தில் தரை விழுந்து வேம்பு மாசியில் உதிர்த்த சருகிலைக்குள் நுழைந்து சர சரத்து காணாமல் போயே போய்விட்டது!

"சித்தி எனக்கு பயமா இருக்கு சித்தி எனக்கு நாள் வேற. நான் இந்த குடிசைல எப்படி ஒதுங்காம்?" படபடக்கிறாள் நாச்சம்மை.

"பொறுவே பொறு அந்த பாம்பை யார் விட்டா?" என்கிற ரெளத்ரத்துடன் கதிரேசனை பார்க்கிறாள் சித்தி.

"கவலைப்படாதக்கா நானாச்சு...." என்றபடி அங்கேயே தடியோடு அமர்ந்து விட்டான் கதிரேசனும்.

**தா**மிரபரணி தண்ணீரோடு உள் நுழைந்தவள் எதிரே கம்பீரம் காட்டி சிரிக்கிறான் கதிரேசன்.

"பாம்ப அடிச்சுட்டேன் புள்ள..." என்கிறான்.

"எப்போ?" ஒரு நொடிப் பொழுதில் இறுக்கம் தளர்ந்த ஸ்திதியில் கேட்கிறாள் நாச்சம்மை.

"இப்பதான். திரும்ப இரை மேய வந்துச்சு. இதோ இந்த தடியால ஒரே போடு."

"காட்டு பாப்போம்...

"காட்றதா நல்ல பாம்ப அடிச்சா உடனே எரிச்சிப் பிடணும்பாங்க. அடிச்ச உடனேயே எரிச்சாச்சு......."

"ஆமாண்டி இனி நீ ஒதுங்க பயப்பட வேண்டாம்." என்று சொல்லிக் கொண்டே சமையல் கட்டில் இருந்து வெளிப்படுகிறாள் சித்தி.

விஷமமாக கதிரேசனை பார்த்து சிரிக்கிறாள். நாச்சம்மை நம்பாமல் கொல்லைப்புறம் சென்று எட்டிப் பார்க்கிறாள்.

கலீர்ப் பசுமையில், அடர்ந்த பொசிவில் சிலு சிலு காற்றும் சின்ன பட்டாம் பூச்சி கூட்டத்தோடும் காட்சி தருகிறது கொல்லை.

கிட்டத்தட்ட உளுத்த நிலையில் ஒரு குடிசை. உள்ளே ஒரு கயிற்றுக் கட்டில் கூரைச் சரிவில் பழைய பத்திரிகைகள்.

**வெளியே** ஒரு மூலையில் ஏதோ பொசிங்கிப் புகை எழுந்தபடி... "அதான்வே பாம்ப எரிச்ச இடம்..." காட்டு கிறான் கதிரேசன் (குப்பையை எரித்திருக்கிறான்)

நடுவில் அனைவரையும் இடிக்கிறது வாசற்புறத்து அம்பாசடரின் சப்தம்.

— இறங்குபவர் நாகுப்பிள்ளை!

— ஒரு வேலையாய் திருநெல்வேலி போனவர் வந்து விட்டாரே! ஆச்சரியத்தோடு முன் ஓடுகிறாள் சித்தி. ஊஞ்சலில் புத்தகம் வாசிக்கும் அவள் மகள் நிர்மலா முதல் மகன் மணி வரை நிமிர்ந்து பார்க்க நாகுப்பிள்ளை கம்பீரமாய் உள் நுழை கிறார்.

அறுபதை கடந்த முதிர்ந்த தேகம். அருகே சித்தி நின்றால் அசட்டுப் பைத்தியம் கூட இரண்டாம் தாரம் தானே? என்று கேட்கும்.

சித்தியும் ஓடியாடி நாகுப் பிள்ளைக்கு கால்கழுவ தண்ணீர் தந்து ஊஞ்சல் அமர்த்தி காப்பி எல்லாம் கொண்டு வந்து உபசரணை காட்டினாலும் —

"ஆமா எங்க நாச்சம்மை...? என்று பிள்ளை சகலத்தையும் பிளந்து மூத்த பெண்ணைத் தேடத் தவறவில்லை

நாச்சம்மையும் எதிர்வந்து நிற்கிறாள். மூத்த சம்சாரம் போய் இருபது வருஷமாகிவிட்டது. அதனால் என்ன? இதோ நாச்சம்மையாய் எதிரில் நிற்கிறாளே!

அவளைப்பார்த்த நொடியில் பரவசம் பழைய நினைப்பு எல்லாம் பொங்கி எழுகிறது பிள்ளையிடம். அது சித்தியை சித்தரவதை செய்வதாகவேபடுகிறது. ஆனாலும் பிள்ளை ஒன்றும் சினிமா அப்பா கிடையாது. சித்தியும் சுந்தரிபாயோ சி.கே. சரஸ்வதியோ இல்லை ஒரு ஆட்டம் ஆடி இடி இடிக்க மனதுக்குள் தான் பொங்கிப் புழுங்கலாம்.

"நாச்சம்ம.... நரசு வந்துருக்கான்." என்கிறார் பிள்ளை நாச்சம்மை ஸ்விட்சைப் போட்ட மெர்க்குரியாகிறாள் அடுத்த நொடி.

"எப்பப்பா?"

"நேத்துதாம்மா...

"இங்க வருதா அத்தான்?"

"வராம...? அப்படியே பரிசமும்! எலே பாரிஜாதம் அடுத்த வாரம் எங்க அக்கா மகன் நரசிம்மன் வரான் பிள்ளை அமெரிக்கா பக்கம் போனவன். நாச்சம்மையை கட்டணுமின்னே மூணுமாச லீவு போட்டு வந்துருக்கான். வந்தா நாத்தி மகனா நினைக்காம மாப்ளையா நினைச்சு மதிப்பா நடந்துக்கணும் என்ன?"

— பாரிஜாதம் எனும் சித்தி பார்வை தன் மகள் நிர்மலா மேல் செல்கிறது. இவளுக்கு அவன் கிடைத்தால் எப்படி இருக்கும் என்று ஒரு பெருமூச்செரியும் கேள்வி வேறு எல்லாம் மனத்துக்குள்தான். நெடுநாள் பூரிப்பும் கூட...

பிள்ளை எழுந்து கொல்லைப் பக்கம் செல்கிறார். போன வேகத்தில் ஓடி வருகிறார்.

"என்ன மாமா.." கதிரேசன் பதட்டம் அடைகிறான்.

"பின்னால என்னலே அவ்ளோ பெரிய பாம்பு...?"

"பாம்பா அடிச்சிட்டேனே...

"அடிச்சிட்டியா?

"ஆமா மாமா – நாச்சம்ம கூட ஒரு பாம்ப பாத்துட்டு கொல்லைப் பக்கமே போகாம கிடந்து நடுங்கி நின்னா. கழுத திரும்ப வந்திச்சு... ஒரே போடு...."

"அப்ப இப்ப வந்தது என்ன அதோட ஜோடியா?"

— கதிரேசன் கொஞ்சமும் தாமதியாமல் தடியோடு ஓடிச் சென்று எட்டிப் பார்க்கிறான். ஒன்றையும் காணோம். ஒரு ஓரமாக கயிற்றுத்துண்டு ஒன்று.

"மாமா இதைப் பார்த்துதான் பயந்துட்டீங்கன்னு நினைக்கேன்..."

"ஓஹோ..." பிள்ளையிடம் சமாதானம்.

**பி**ள்ளை பூஜையறையில் இருந்தார். உடுத்தியிருக்கும் காவியில் விஷுவுக்கு அவர் சபரி மலை போகப் போவது பாரிஜாதத்துக்கும் தெரியும் நடுநடுவே பூ கேட்பார். எண்ணெய் கேட்பார். கொண்டு சென்று தரவேண்டும். நிர்மலா படிக்க வேண்டும் என்று தோழி வீட்டுக்குப் போய்விட்டாள். பையனும் வீதியில் கிரிக்கெட்டில் –

சமையல் கட்டில் சித்தி பாரிஜாதம் மட்டும்!

நாச்சம்மைக்கு நாள் வந்ததில் குடிசையில்! கதிரேசன் கொல்லையில் பார்க்கும்போது குடிசைக்குள் கட்டிலில் அமர்ந்து கதைப் புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறாள் நாச்சம்மை. மெல்ல ஆதங்கத்துடன் உள் நுழைந்து சமையல் கட்டில் பாரிஜாதம் அருகே போய் நின்றான்.

"என்னக்கா கதை கந்தலாயிடும் போல இருக்கே...?" என்றான்.

"என்னவே சொல்றே?"

"அந்த பாம்ப காணோம்கா... நாச்சம்ம குடிசைக் குள்ள போய் முழுசா ஒரு நாள் ஆச்சு. இந்நேரம் போட்டு தள்ளியிருக்க வேண்டாம்."

"இன்னும் இரண்டு நாள் இருக்குல்ல – கவலைப் படாதே. கழுதைக்கு அமெரிக்க மாப்ள கேக்குதோ?"

"ஆமா... நாச்சம்மை போய்ட்டா நிர்மலாவுக்கு அவனை முடிக்க முடியுமா உன்னால?"

"வெளங்காப் பயலே. சொந்தம் விட்டுறக் கூடா துன்னு தாண்டா இந்த கல்யாணமே? நாத்தி மகன் நிர்மலாவுக்கு தான். நடக்காட்டி நாண்டுக்குவேன்னு சொல்லியாச்சும் முடிச்சுரமாட்டேன்..?

– நடுவில் பிள்ளையின் குரல் அழைக்கிறது.

"பாரிஜாதம், எண்ணெய் கொண்டுவா தாயி..."

பாரிஜாதம் உடனே எண்ணெய் கிண்ணத்தை எடுத்து கதிரேசனிடம் தந்து பிள்ளையிடம் தரச் சொல்கிறாள்.

"நீ போய் தாக்கா... மாமா உன்கிட்டதானே கேட்டார்."

"போடான்னா.... நானே பூஜை ரூம் பக்கம் போவாம தாட்டிக்கிட்டு திரிஞ்சிக்கிட்டிருக்கேன்."

"ஏன்க்கா...?"

"அந்தக் கூத்த ஏன் கேக்கறே – நாள் விட்டுப் போச்சுன்னு நினைச்சா விடுவேனா என்னைங்குது... பொட்ட பொறப்பே பெரிய ரோதனை மசுருடா..."

— கதிரேசன் வாய் பிளக்கிறான்.

"அப்ப நீ கொல்லைல குடிசைல நாச்சம்மை யோட..."

சொல்லி வாய் மூடுமுன் அவன் வாய் பொத்தி கிண்ணம் தந்து அனுப்புகிறாள். தந்து விட்டு வந்து புலம்ப ஆரம்பிக்கிறான்.

"அக்கா... தீட்டும்பாரே மாமா...

"தெரிஞ்சாதானேடா – எனக்கும் இது ஒண்ணும் மொத மாசமில்ல ஆறுமாசமாவே இந்த கதை தான்!"

"அக்கா – நீ விவரம்க்கா... என்று இடக்குச் சிரிப்பு சிரிக்கிறான் கதிரேசன்.

"வாய் மூடு. தப்பித்தவறி உளறி வைக்காதே. உன் மாமா நிக்கவெச்சு நெருப்பு வெச்சுடுவாரு..."

"ஆமா தீட்டுப் பொம்பளைங்களத்தானே பாம்பு தீண்டும்பாங்க."

"அப்ப மேல் நாட்டுல எல்லாரும் பாம்பு தீண்டியா சாவுறாங்க? ஏதோ கிழடு கட்டைங்க பொட்டச்சிகளுக்கு

அப்படியாச்சும் ஒரு மூணு நாள் பாத்திரம் பண்டம் கழுவாம ஓஞ்சு கெடக்கட்டுமேன்னு பண்ண வினைடா இது. நல்ல பாம்புகளை நாம தீண்டுனா தான் அது நம்மை தீண்டும். நாச்சம்மை ஒரு நேரம் இல்ல ஒரு நேரம் அத மிதிக்காமலா போயிருவா," சொல்லிக் கொண்டே சமையல் காரியங்களில் மூழ்குகிறாள்.

ஒரு நாள்...

இரு நாள்....

மூன்று நாள் கழித்து தலை முழுக்கு போட்டுவிட்டு நாச்சம்மையும் உள் வந்து விட்டாள்.

"எங்கே போயிற்று இந்த பாம்பு?" கதிரேசனும் பாரிஜாதமும் பதறிச் சிதறாத குறை.

"கழுத – நான் கட்டை தூக்கிட்டு வந்தது பார்த்து ஓடிருச்சு போல..." கதிரேசன் சடைத்துக் கொள்கிறான். ஆமோதிப்பு பாரிஜாதத்திடம்.

"யக்கோவ்... இடையிடுகிறது பக்கத்து வீட்டு வைகுண்டம் பேத்தியின் குரல்.

"என்னாடி?"

"நாச்சம்ம அக்கா கதை புத்தகம் வாங்கிட்டு போச்சாம். எங்கம்மா கேட்டாங்க."

"எங்க வெச்சிருக்காளோ கழுத தெரியலியே...

"குடிசைல வெச்சுத்தான் படிச்சுகிட்டிருந்துச் சுக்கா..."

“அப்ப போய் எடுத்து கொடுத்துட்டு வாடா தம்பி” என்கிறாள் பாரிஜாதம். கிளம்ப ஆயத்தமானவனை நாகுப்பிள்ளை தடுக்கிறார்.

“எலேய் அதை அவ பாத்துக்குவா – நீ கொஞ்சம் பேங்க் வரை போய்ட்டு வா பாப்போம்..” என்று பாஸ் புத்தகத்தை நீட்டுகிறார். முழிக்கிறான் கதிரேசன்.

“ஏன் நீ போய் எடுத்துக் கொடுத்தா என்ன?” பிள்ளையிடம் பலத்த அதட்டல்.

— பின் ஒடுகின்றன பாரிஜாதத்தின் கால்கள்.

— கொல்லைக் குடிசைக்கு தட்டிக் கதவு தான். தள்ளி உள் சென்று கூரைச் சரிவில் செருகப்பட்டிருந்த புத்தகத்தை உருவும் போது விஸ்ஸ்ஸ்... என்று ஒரு சீற்றம் கேட்டது.

புத்தகத்துக்காக கை வைத்த இடத்திலேயே அந்த கோதுமை நாகம். பாரிஜாதம் சொன்னது போல அவளே அதை தீண்டியதால் பொங்குகிறதோ?

“ஐய்யோ... அலறியபடி கையை எடுக்குமுன் தன் பேர போலா முகத்தால் ஒரு ராட்சஸ முண்டுதல் நிகழ்த்தியது அது. பயத்தில் பேச்சு மூச்சு நின்று தொண்டையில் கோலி அடைபட்ட ஸ்தம்பிப்பு பாரிஜாதத்துக்கு, அடுத்த நொடி...

‘இதற்குத் தான் காத்திருந்தேன் காரியம் முடிந்தது வருகிறேன்’ என்கிற மாதிரி அந்தப் பாம்பு கூரையிலேயே நீந்தி வேலியை எட்டிப் பிடித்து சருகுத்தரை விழுந்து ஒரு அநியாயத்தை சாய்த்த மகிழ்வோடு ஓடி மறைய ஆரம்பித்தது.

# 13

## பலி

**பா**லத்தின் மேலிருந்து காவிரியை பார்த்தபோது அப்படி ஒன்றும் பிரமிப்பாக இல்லை.

அடிபட்ட நிலையில் ஓடும் ஒது கிழட்டுப் பாம்பைப் போலத் தான் ஓடிக்கொண்டிருக்கிறாள். ஆடிமாசத்து காவிரி இப்படியா இருப்பாள்?

'இரு கரை மீறி தோட்டம், தோப்பு என்கிற எல்லைக் குள் எல்லாம் நுழைந்தும், நுனிக் கரையிலேயே கெண்டங் காலை மணலில் பதிக்க விடாதபடி இழுத்துக் கவிழ்க்கப் பார்த்தும், விஸ்தார சரீரத்தோடு அவள் ஓடுவதை பார்க்கையில் பிரமிப்பு தட்டி இதயத்தில் ஒரு வலுவான சிலிர்ப்பே ஏற்படுமே?!

'நல்ல செந்நிறம் அங்கும் இங்குமாக நுரைக்குழம்பு ஊடே ஊடே மிதந்து திரியும் தாழை இலைக் கொத்துகள் என்று பார்க்க பார்க்க பரவசமூட்டுபவளை இன்று பார்த்தால் சளைந்துதான் போவீர்கள்.

ஏதோ இருக்கிறேன் பேர்வழி என்று இடுப்புத் தண்ணீ ரோடு ஊர்ந்து கொண்டிருக்கிறாள். அவளை ஒட்டிய தோட்டங் களும், வயற்காடுகளும் கூட தீய்ந்து செம்மைதட்டி பிச்சைக்கார னின் சிரைக்கப்படாத தாடை பரபரப்பாகத்தான் தெரிகின்றன.

காவேரியை பொறுத்த மட்டில் அவள் சீறிப் பாய்ந் தாலும் கஷ்டம்தான். இப்படி இளைத்துக் கிடந்தாலும் கஷ்டமாகத்தான் இருக்கிறது.

காற்று வாங்க ஆற்றுப்பாலம் மேல் சென்று நிற்கும் தியாகுவுக்குள் தான் இத்தனை எண்ணங்களும்... அவனுக்கு சரியாக மடித்துக்கட்டிய லுங்கி சகிதம் விரல் இடுக்கில் சார்மினார் புகைய, நெருங்கி வருகிறான் இளங்கோவன்.

“என்னடா ஆத்தப் பார்த்து வெறிச்சுகிட்டிருக்கே?”

“ப்ச்ச்ச்...

“நம்ம ஊரு காவேரிதானான்னு சந்தேகமா இருக்குல்ல...?”

“ஆமாண்டா... ஏதோ பேருக்கு தண்ணி ஓடிகிட்டு... இந்த காவேரிக்கு நம்மமேல என்னடா கோவம்?”

தியாகுவின் கேள்வி இளங்கோவனை கெக்கலிப்பாக சிரிக்கவிடுகிறது.

“எதுக்குடா சிரிக்கறே – உனக்கு வருத்தமா இல்லியா?”

“வருத்தமா... எனக்கா... இந்த காவேரி என்ன எனக்கு மாமன் மகளா – அக்கா மகளா... இவ ஓடறா – ஓடலைன்னு வருத்தப்பட.

“அதுக்கும் மேலடா... சாமி..”

திரும்பச் சிரிக்கிறான் இளங்கோவன். நடுநடுவே காது மூக்கெல்லாம் புகை கசிய சார்மினாரை குட்டைப் படுத்துகிறான்.

“சரி சரி உன் சாமியை கும்பிட்டு கிட்டே நில்லு. நான் போய் லுக் விட்டுட்டு வரேன்...”

இளங்கோவன் நடை படித்துறை பக்கமாக திரும்பு கிறது. பெண்டு பிள்ளைகள் குளிக்கும் படித்துறை, பக்கத்தில் ஆண்கள் படித்துறை. அங்கே இறங்கி குளிக்கையில் துண்டை நழுவ விட்டு – அதை திரும்பப் பிடிக்கும் சாக்கில் பெண்கள் படித்துறைவரை வரலாம். நிறைந்த பிரம்மமேடு பள்ளங்களையும் பார்த்துக் கிறங்கலாம். சமயத்தில் சிலதுகள் சருகுப்புடவையை பேருக்குச் சுற்றிக் கொண்டு மஞ்சள் பூசிக் கொண்டிருப்பார்கள். துண்டு அவர்கள் இடுப்பில் போய் முட்டிப்பிடித்து நிற்கும் 'தொளக் புளக் என்று நீர் சப்தமிட்டபடி நெருங்கிச் செல்ல இடுப்பு தண்ணீரில் எழுந்துநின்று துண்டைப் பிடித்து தருவார்கள்.

அப்படி நிற்கும் அந்த நொடிப் பொழுதுகளில் ஓடும் நீரோட்டமே வென்னிராகிவிடும் அளவுக்கு உடம்பு ஒரு காந்து காந்தும். இதிலெல்லாம் இளங்கோவன் கரை கண்டவன்.

ஊருக்குள் யாருக்கு எங்கே மச்சமிருக்கிறது என்று துல்லியமாக சொல்லுவான். இவனைக் கண்டாலே சில மாமிகளுக்கு அலர்ஜி. அவன் போகும் வரை தண்ணீரி லேயே கால்வைக்க மாட்டார்கள்.

இன்றும்...

பாலத்து மேல் நிற்கும் தியாகுவுக்கு இளங்கோவின் போக்கு காவிரி இளைத்து விட்டதை காட்டிலும் கூடுதலான வருத்தம் தருகிறது. அதை காட்டுவதுபோல அடுத்தவனாக "நீ லுக் விட வரலையா?" – என்று கேட்டபடி பாலத்தின் மேலேயே லுங்கியை அவிழ்த்துக் கொண்டு ஓடுகிறான் தருமு.

அங்கிருந்தே முன்பெல்லாம் ஒரு டைவ் அடிப்பான், இப் பொழுது முடியாது. முகரை பெயர்ந்துவிடும். எனவே ஹேய்ய்ய்...

என்கிற உற்சாக ஒட்டம் மட்டும் காட்டி நீருக்குள் பிரவேசிக்கிறான்.

சில இளசுகள் பயந்து எழுந்து நின்றதில் அவர்கள் கனி மரங்கள் என்பது தெரிகிறது.

“வாவ் சூப்பர் புள்ள...

“நாசமா போனவனே... என்ற அவர்கள் திரும்ப நீரில் கழுத்துவரை மூழ்கி கண்ணில் நெருப்பு கொளுத்துகின்றனர்.

“இனி இந்த நாய்ங்க குளிக்கும் போது ஆத்துப் பக்கமே வரக்கூடாது..”

தப்புதாயி... நாம குளிக்கும்போது இவனுங்க வரக் கூடாதுன்னு சொல்லு. இவனுங்க அளும்பு தாங்காம தானே அந்த காவேரி ஆத்தாளே வத்தி துரும்பா கெடக்கறா, இன்னும் புத்தி வரலைன்னா எப்படி?”

“அடியேய்... உன் ஆத்தா ஒண்ணும் வத்தித் துரும்பா யிடலை. கர்நாடகாக்காரன் கைதி மாதிரி அவளைப் பிடிச்சு வெச்சுகிட்டு நமக்கு பேருக்கு தண்ணிகாட்டறான் தெரிஞ்சுக்கோ. ஆத்தாளாம்ல ஆத்தா...”

“அவளை எல்லாம் யாரும் பிடிச்சுவைக்க முடியாதுடா... என்னா நினைச்சே நீ? என்னது உன்னதுன்னு பொதுச் சொத்துக்கு நடுவுல கர்நாடகம், தமிழ்நாடுன்னு கோடு போட்ட பாவத்துக்கு தான் இப்படி அனுபவிக்கிறோம். அவளுக்கு தெரியும் எப்பவந்து எப்படி படியளக்கணும்னு..”

“அப்ப வரவேண்டியதுதானே?”

“வருவாடா... வருவா.... தண்ணிக்கு சாகைலையே இவ்வளவு கொழுப்பெடுத்து திரியறியே நீ. இன்னும் தாராளமா அவ வந்துட்டா என்னா ஆட்டம் போடுவே?”

“ஏய் இந்தக் கதையை எல்லாம் யார்கிட்டையாவது போய் சொல்லு.” சொல்லிவிட்டு இளங்கோவன் நீரை வாயன்னத்தில் உறிஞ்சி பீறிட்டு துப்புகிறான். அப்படியே மல்லாக்க படுத்து மேலே மினுக்காக திரியும் சில கழுகுகளை பார்க்கிறான். பார்வை திரும்பி பாலத்துப் பக்கம் போகும் போது கன்னத்தில் கைவைத்தபடி தியாகு நின்று வெறிப்பது தெரிகிறது.

நெடுநாட்கள் கழித்து ஊருக்கு வந்திருக்கிறான்.

வந்த இடத்தில் இப்படியா அநாவசிய கவலைப்படுவான்.?

இளங்கோவனுக்கு சிரிக்கத்தான் முடிகிறது.

சர்ரக்... சர்ர்...

சர்ரக்... சர்ர்...

கோனார் காட்டுப்புறமாக வளையும் காவிரியின் கரைப் பகுதியில் தான் அந்த சப்தம் கேட்டது.

மண்வெட்டிகள் மணலை அள்ளும் சப்தம் ஒரு கூட்டமே மணலை அள்ளி ஒரு அரை பாடி லாரியின் நடு முதுகில் குவித்துக் கொண்டிருக்கிறது.

தாண்டிச் செல்கையில் சப்தம் கேட்டு திரும்பிப் பார்த்த தியாகுவுக்கு அந்த மண் அள்ளல் ஒரு விசித்திரமாகப் பட்டது.

நெருங்கிச் சென்று பார்த்த போது லாரியை ஒட்டி நிற்கும் இளங்கோவன் அப்பா சின்னசாமி வெற்றிலையை மென்று

துப்பியபடி தியாகுவை பார்த்து சினேக சிரிப்பை உதிர்த்து விட்டு மணல் அள்ளுபவர்களை பார்த்து ஊக்கப்படுத்தினார்.

"உம் சீக்கிரம்... சீக்கிரம்...

"என்னண்ணே இது... எதுக்கு மணல் அள்றீங்க?" – தியாகு நிஜமாலுமே அப்பாவியாக கேட்கிறான்.

"உம்... கோபுரம் கட்டி விளையாட... என்னா தியாகு கேக்கறே நீ. ஆமா பட்டணத்துக்கு போயிட்ட போல இருக்குதே எப்படி இருக்கு பட்டணம்? வெய்யில் பொளந்து கட்டுதாம்ல..,"

சின்னச்சாமி கிண்டலோடு பேச்சை மாற்றுகிறார். தியாகு பதில் சொல்லாமல் ஆற்றுப் பரப்பை பார்க்கிறான். முடிந்த எல்லைக்கு மணலை தோண்டி எடுத்ததில் வண்டல் இல்லாத களிமண் நிலப்பரப்பே தெரிகிறது.

"என்ன பாக்கறே... நீ சும்மா ஆழம் பாக்கறேன்னு தெரியும் தியாகு... எல்லாம் கலெக்டர் ஆபீஸ் வரைக்கும் கவனிச்சுட்டு தான் மண்ணு அள்றேன். இந்த காவேரில இனி தண்ணி ஓடப்போறதில்ல, மண்ணாவது வீடுகட்ட பயன்படட்டுமே என்னா சொல்றே?"

திருட்டுக்கு ஒரு திவ்யமான விளக்கம் தருகிறார் சின்னச்சாமி.

"நானாச்சும் ஒரு நாளைக்கு நாலுலோடுதான் அள்றேன். இரண்டாயிரம் நின்னா பெரிசு, நம்ம எம்.எல்.ஏ. தம்பி இருநூறுலோடு அள்றாப்பல என்னா காசுங்கறே..." – பேச்சோடு அடுத்த வெற்றிலைத் தொண்டை தாண்டுகிறது.

"எதுவும் பேசாமல் நடந்து வரும்வழியில் ராமநாயக்கர் தன்மாட்டு கொட்டகையை ஆற்றுக் கரைவெளியிலேயே அமைத்து

ஒரு கொட்டகையை போட்டுக் கொண்டு குந்திக்கிடப்பதையும் பார்க்க முடிகிறது.

கொட்டகை போட்ட இடத்தில் முன்பெல்லாம் மாமரமும், புங்கையும் அரக்கத்தலை மாதிரி பொசிந்து கிடந்திருந்தது.

இப்பொழுது மரமும் இல்லை. இடமும் இல்லை.

நினைக்கவே வலிக்கிறது.

**வீ**ட்டுக்குள் நுழைபவனை ஆதூரலத்துடன் வரவேற்கிறாள் அவன் அம்மா சிந்தாமணி.

"எங்கய்யா போய்ட்டே. பூசைக்கு நேரமாச்சு பாரு..." என்று சொல்லி விட்டு வீட்டுக் கிணறு நோக்கி நடக்கிறாள்.

கிணற்று திட்டுக்கு வெள்ளையடித்து மஞ்சள் குங்குமப் பொட்டெல்லாம் வைக்கப்பட்டிருக்கிறது.

ஆடி பிறந்து விட்டாலே இப்படி ஆற்றையும் கிணத்தையும் கும்பிடுவது தான் வழக்கமாச்சே...

கிணற்றுக்கு பூசை செய்து விட்டு விளக்கேற்றி கையில் எடுத்துக் கொண்டு காவேரி ஆற்றுக்கு சென்று கரையில் நின்று பிரார்த்தித்து விட்டு விளக்குகளை ஆற்றில் மிதக்கவிட ஜெகஜ்ஜோதியாக அது ஒளிர்ந்தபடி மிதந்து ஓடஆரம்பிக்கும். காவேரி ஆறே பொன்குழம்பாய் தெரியும்.

அதிலும் பாலத்தின் மீதிருந்து பார்க்க பார்க்க பரவசமாய் இருக்கும்.

இப்படி செய்தால் காவேரியின் கருணையால் கல்யாணம் ஆகாதவர்களுக்கெல்லாம் கல்யாணம் ஆகிவிடுமாம். வெள்ளாமை தழையத் தழைய பொசிந்து வீடுவந்து சேருமாம்...

கேட்க மிக நன்றாக இருக்கிறது. ஆனால் தியாகுவின் மனது ஒட்ட மறுக்கிறது.

'ஆடிப்பெருக்கெடுத்து ஆடிவரும் காவேரி – பாட்டை வீதிக் குழாயில் நூறாவது தடவையாக போட்டு வெறுப்பேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

'எங்க இருக்கா காவேரி...? அவளைதான் கற்பழிச் சுட்டாங்களே... திருடி வித்துட்டாங்களே... பிடிச்சு வெச்சு கிட்டு பேரம் பேசறாங்களே...' தியாகு மனக்குமுறலோடு பாடலைக் கேட்டுவிட்டு அங்கு இருக்கப் பிடிக்காமல் எழுந்திருக்க...

"ஏன் தம்பி ஒரு மாதிரி இருக்கே?" அப்பா கச்சிதமா குறிப்பறிந்து கேட்கிறார்.

"ஒண்ணுமில்லப்பா...?"

"அப்ப நிறைய இருக்குன்னு அர்த்தம் சொல்லு"

"என்னத்த சொல்ல...

"நினைக்கறத சொல்லு, வெளிய ஆத்துப்பக்கம் போய்ட்டு வந்ததுல இருந்தே நீ நீயா இல்லை."

"ஆமாம் அப்பா... ஊர் ரொம்ப மாறிப் போச்சு. காவேரிய பாக்கலாம்னு ஆசையா போனேன். ஒரு கைதிய பாத்த உணர்ச்சிதான் மிச்சம். ஜனங்க ரொம்ப மோசம். பாவம் போக்க குளிக்கற இடத்துல, பாவம் பண்றாங்க. தங்கம் வைரத்த திருடு வாங்கன்னு கேள்விபட்டிருக்கேன். ஒரு ஆத்தையேவா திருடுவாங்க."

அப்பா அவன் கவலையறிந்து தோளைப் பற்றுகிறார். "அட இதுக்குதானா இத்தனை கவலை. கலிகாலம்னா

அப்படிதான் இருக்கும். நீ ஏன் அந்த கச்சராத்தை பாக்கறே. இதுக்கு நடுவுல நாமளாவது மதிச்சு கும்புடுப் போடுறோம்ல, அதை நினைச்சு சந்தோஷப்படு..."

"முடியலைப்பா... தன்னையே பாத்துக்காதவ நம்மளை எங்கப்பா பாத்துக்கப்போறா. இளங்கோ சொல்ற மாதிரி அவ இல்லை. எல்லாம் நம்ம கற்பனை. இன்னிக்கு பொழுதுக்கு காவேரிய நம்பறவனுக்கு காலம் இல்ல. அவளை திருடு றவனுக்குத்தான் காலம். என் மனசுல அவபேர்ல இருந்த நம்பிக்கை பிரமிப்பு எல்லாம் போயிடுச்சு.....

ஒரு தண்ணிக் கூட்டத்தை நாமதான் சாமி தேவதைன்னு சொல்லி முட்டாள்தனமா செயல்பட்டுகிட்டு இருக்கோமோ...?"

தியாகுவின் கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாமல் அப்பா நகர்ந்து கொள்கிறார். தியாகு அப்படியே திண்ணையில் ஒடுங்கிச் சாய்கிறான். மனது உடம்பு இரண்டிலும் களைப்பு. எனவே தூக்கம் கட்டி ஏற ஆரம்பிக்கிறது.

நேரமும் வேகமாக தேய்ந்து கரைகிறது.

நெடுநேரம் தூங்கிவிட்ட நிலையில் அவன் காதுகளில் திடும்மென்று பரபரப்பான பேச்சு சப்தமும் சிலர் ஓடுவதும் கேட்க, பதறியடித்துக் கொண்டு எழுந்திருக்கிறான். எதிரில் ஈரச்சேலையும் நனைந்த உடம்புமாக அம்மா, அக்கா, தங்கை என்று காவிரிக்கு போய் திரும்பிய கூட்டம், முகத்தில் ஒருவகை பீதி.

"நல்லவேளை... தியாகு ஆத்து பக்கம் வரலை" என்ற பீடிகையிடுகிறாள் அக்காகாரி.

"என்ன பாரதி.... என் விசயம்?" தியாகு உசும்பிக் கொண்டே கேட்கிறான்.

"என்னத்தடா சொல்ல.. திடும்முன்னு ஆத்துல தண்ணி கணக்கு வழக்கில்லாம வர ஆரம்பிச்சிடுச்சு. நொப்பும் நுரையுமா அது வந்த வேகத்தை பாத்து பதறிட்டோம். அதுல இந்த சின்னச்சாமி மகன் இளங்கோ சிக்கிகிட்டான். ஐயோ மவனேன்னு காப்பாத்த போன சின்னச்சாமியும் போய்ட்டான். கல்லணைக்கு போனா தான் இரண்டு பேர் உடம்பையும் பிடிக்க முடியும்.

ஒரு கூட்டமே போயிருக்கு. ஆத்தையே நாற அடிச்ச பசங்களை ஆத்தாளே வந்து அள்ளிகிட்டு போய்ட்டாள்னு ஊர்முழுக்க ஒரே பேச்சு..."

— அம்மா சிந்தாமணியின் விளக்கம் தியாகுவை சிலிர்க்க விடுகிறது.

"அம்மாாாா... அலறுகிறான். க்ஷண தாமதம் இன்றி ஓட ஆரம்பிக்கிறான்.

பாலத்தின் மேல் நின்று கீழே பார்வையை விட்ட போது காவேரி கடூர பாய்ச்சலில் இருந்தாள்.

'என்ன தியாகு... என்னைப்போய் மட்டமா நினைச் சுட்டியே எப்படி?' என்று கேட்கிற மாதிரி இருக்கிறது.

அவனையுமறியாமல் கைகள் கூம்புகின்றன!

●

# 14

## நடந்தால், வாழி!

"நடந்தா... திருப்பதிக்கா?" – ஸ்ரீகாந்த் கேட்கும் போதே எட்டுக்கல் விட்டெறிந்த மாதிரி இருந்தது.

“ஆமாண்டா... இருபது வருஷமா போயிண்டிருக்கேன். இது இருபத்தியோராவது வருஷம்! நீயும் கூட வரே...!” மாமா ராமன் வளைத்த வளைப்பில் மேலும் வெலவெலத்துப் போகிறான் ஸ்ரீகாந்த்.

“உனக்குத்தானே ஜாண்டிஸ், டைபாய்டு, நிமோனியான்னு எல்லா எழவும் வந்தது. அதுல இருந்து உன்னை காப்பாத்தினது யாராம்? அந்த வெங்கடாசலபதி தானே?”

“இல்லை... எனக்கு ட்ரீட்மெண்ட் தந்த டாக்டர் பேர் செரியன்.”

“என்ன கிண்டலா? உன் செரியன் ஒரு வயாமீடியா. அத தெரிஞ்சுக்கோ எல்லார்க்கும் சொல்லி அனுப்பிடுங்க அவ்வளவுதான்னு அந்த செரியன் சொன்னதை நான் மறக்கலடா! உன் அம்மா ஒரு பக்கமும் அப்பா ஒரு பக்கமும் மயக்கம் போட்டு விழுந்துட்டா. எமனுக்கு ரொம்ப வசதியாப் போச்சு. ஆனா நான் விடலை. நேரா வெங்கடாசலபதிகிட்டப் போய் நின்னேன் காப்பாத்திக் கொடு நடத்தி அழைச்சுண்டு வந்து காணிக்கை செலுத்தறேன்னேன். கொடுத்துட்டான். சொன்னபடி செய்ய வேண்டாமா?”

“மாமா... இதுக்கு என்னை நீங்க சாகவே விட்டிருக்கலாம்”

“மேற்கொண்டு பேசினே, தெரியும் சேதி...

“வெங்கட்ரமணா, கோவிந்தா, கோவிந்தா...!”

‘திருப்பதி ஏழுமலையானே கோவிந்தா... கோவிந்தா’ நடை பயணம் தொடங்கி விட்டது. ‘வெங்கடேச பக்த சமாஜம்’ என்கிற பெயரில் ஏகமாய்க் கூட்டம்.

பஜன், பூஜை என்று அமர்க்களங்கள் முடிந்து சாரி சாரியாய்க் கூட்டம் கிளம்ப, ஜனக் கூட்டமும் பொத் பொத் தென்று காலில் விழுந்து யாத்ராதாரிகளை வழியனுப்பி வைக்க, ஸ்ரீகாந்துக்கு எல்லாமே வேடிக்கையாக இருந்தது.

“உம் நடடா...” – மாமா பிடித்து இழுக்கிறார்.

செருப்பு போட்டே நடந்த கால்களுக்கு வெறும் தரையில் நடப்பது ஒரு பெரிய அசௌகரியமாக இருக்கிறது. சின்ன கல்கூடப் பெரிய பரிணாமமெடுத்துக் குத்துகிறது.

“மாமா இப்படி கேனத்தனமா வேண்டிண்டு என்னை நீங்க உசுரை வாங்க வேண்டாம்!”

“பேசாம வா உன் நாத்திக புத்திக்கு சிலதெல்லாம் புரியாது.”

“என்ன புரியாது... எதுக்கு இப்படி நம்மளை நாமே வருத்திக்கணும்?”

“தோ பார்... இந்த உடம்பாலதான் நாம நிறைய தப்பு பண்றோம். அதுக்கு இந்த உடம்பைக் கொண்டே செய்யற பரிகாரம்டா இந்த பாதயாத்திரை..”

“ஏன் பாவம் பண்ணணும்? அப்புறம் பரிகாரம்னு இப்படிக் கஷ்டப்படணும்? பாவம் புண்யமெல்லாம் வெறும் நினைப்பு. பாவமாம் புண்யமாம் – வெங்காயம்..”

வெறும் நினைப்புதானே? ராமனுக்குள் கூட அந்தக் கேள்வி தொற்றிக் கொள்கிறது. லேசாக ஆயாசப்படுகிறார்.

இருபது வருட நடை ஒரு வினாடி கண்முன்தோன்றி அடங்குகிறது. வாழ்க்கையில் ஆயிரம் தேவைகள். சில

ஈடேறி விடுகின்றன. சில நினைக்க முடியாத உயரத்தில் இருக்கின்றன.

குறிப்பாக ராமனுக்கு ஆஸ்த்துமா உண்டு. அதில் அவர் அவதிப்படும்போது பார்த்தால் அவருக்குப் பேய் பிடித்து விட்டதோ என்று நினைக்கத் தோன்றும். கர்ர்... கர்ர்... என்று சப்தமுடன் மார்பு இழுபட, மனிதர் திணறி போவார். பிரபஞ்சம் முழுவதும் பஞ்சமில்லாதபடி நிரம்பிக் கிடக்கும் காற்று அவரிடம் மட்டும் உள் நுழைய ஒரு பெரிய போராட்டமே நடத்தும். எந்த வைத்தியத்தாலும் முழுமையான குணப்பாடு இல்லை. எல்லாம் கர்மவினை என்று இறுதியில் முடிவானது.

கர்மவினைக்கு ஒரே தீர்வு கடவுளின் கருணைதான். அதற்காகத்தான் நடக்கிறார். நடந்தும் அந்த கர்மம் விட்ட பாடில்லை. அவ்வப்போது வந்து பாடாய்ப் படுத்தத்தான் செய்கிறது.

இருபது வருடம் நடந்தும் ஏழுமலையான் இரக்கம் காட்டவில்லையே...? ஒரு வேளை இந்த ஸ்ரீகாந்த் சொல்கிற மாதிரி எல்லாம் வெறும் நினைப்புத்தானோ? கடவுள் பக்தி எல்லாமே மனிதமனக் கற்பனையோ?

ஸ்ரீகாந்தை இழுத்துக் கொண்டு நடப்பவர் இப்பொழுது ஸ்ரீகாந்தைப் போலவே நினைக்கத் தொடங்கி விடுகிறார்.

யாத்திரைக் குழுவின் தலைவர் சுப்புவிடம் பேசிக் கொண்டிருந்தபோது, “நான் என்னத்த சொல்வேன். இந்த நாத்திகப் பயலுக்காக வேண்டிண்டது என் குற்றமா? இல்லை, இவன் சொல்றதுதான் சரியா, நாமல்லாம் முட்டாள்களான்னு கூட ஒரு கோணத்துல தோண்றது” என்று அங்கலாய்த்தார்.

“என்னய்யா பேச்சு இது. உன் நம்பிக்கையும் ஆட்டம் காண ஆரம்பிச்சுட்டுதே. இப்படிக் குழப்பத்தோட நடந்தா உருப்பட்ட மாதிரிதான்....”

“எனக்கும் ஒண்ணும் புரியலை. இவன் நெத்திப் பொட்டுல அடிக்கற மாதிரி ஒரு பதில் என்னால சொல்ல முடியலையே சுப்பு”

“என்ன பதிலைச் சொல்லணும்?”

“நம்ம நடைக்கு ஒரு அர்த்தம் இருக்கு. இந்தக் கஷ்டத்துக்கு ஒரு பலன் இருக்குன்னு... பக்திங்கறது பழுதில்லாத ஒண்ணு...”

“ஏன் இருபது வருஷத்துல எதுவும் புரியலையா... தெரியலியா?”

“அப்படித்தான் நினைக்கறேன். ஆஸ்த்மா அப்படியே தானே இருக்கு?”

“அப்ப நடக்கறது ஆஸ்த்மாக்காக மட்டுமா?”

“அப்படி இல்லை... குறைந்தபட்சம் அந்த ஒரு முறை போயிருந்தாக்கூட இவனுக்கு நான் ஒரு பதிலைச் சொல்லலாம் இல்லியா? அந்த வெங்கடாஜலபதி ஏன் இப்படி கல்லாவே இருக்கான்? இந்தத் தடவை என்னோட மெய் வருத்தத்துக்கு ஒரு நல்ல பதிலை அந்த பாலாஜி சொல்லித் தான் தீரணும். அப்படி நடக்காதபட்சத்துல இதுதான் என் கடைசி யாத்திரை.”

மலையில் கட்டி ஏறும் கூட்டம். எள் போட்டால் எடுக்க இடமில்லை.

“பார்ரா.... நன்னா பார் எவ்வளவு கூட்டம்...” – உற்சாகமாக சிலாகிக்கிறார் சுப்பு. ராமனிடம் பாலாஜி வந்து பேச வேண்டிய எதிர்பார்ப்பு. ஆகவே கட்டி இழுக்கும் மௌனம்.

ஸ்ரீகாந்த் மட்டும் அந்த வலியிலும் கிண்டலாக பதில் தருகிறான்.

“எவ்வளவு கூட்டம் இல்ல மாமா... எவ்வளவு பிரச்னைன்னு சொல்லுங்கோ. அவ்வளவும் பிரச்னை. இல்லன்னா ஆசை. எனக்கு அது வேணும் இது வேணும்கற கோரிக்கை. கடவுள்ங்கற சுபீரியர்கிட்ட செய்யற பிசினஸ். நான் உனக்கு அது தரேன். நீ எனக்கு இதுதா... இதுக்கு பேர் பக்தியா...?”

“முட்டாள், பாலாஜி ஒரு தாய்டா. பிள்ளைகள் தாய்கிட்ட கேக்காம வேற யார்கிட்ட கேப்பா?”

“கேட்டா தர்றவ தாய் கிடையாது. கேக்காமலே தர்றவதான் தாய்.”

சுப்புவுக்கு ஸ்ரீகாந்தின் குதர்க்கம் பெருமூச்சை வர வழைத்தது. ராமனைப் பார்க்கிறார். ராமனும் பார்கிறார்.

“இவன் இப்ப கேட்டிருக்கறது சாதாரண கேள்வி. இந்த மாதிரி நூறு கேள்வி கேட்டுப் புட்டான். பொட்டுல அடிச்ச மாதிரி ஒரு பதிலைச் சொல்ல முடியலை.”

திரும்பவும் புலம்புகிறார் ராமன்.

கடைசி வரை ஸ்ரீகாந்த் இப்படித்தான் பேசிக்கொண்டு வந்தான். ராமன் மிக சோர்ந்து போய் விட்டார். நிதர்சனமாக ஒரு விஷயம் புலப்படவில்லை. தரிசனத்துக்குக் கூட ஆறு மணி நேரம் காத்திருக்க வேண்டி இருந்தது. காசுள்ளவர்கள் முந்திக் கொண்டு போனார்கள்.

'பாத்தேளா, இங்க கூட பணத்துக்குத்தான் மதிப்பு!'

சுட்டிக்காட்டிய ஸ்ரீகாந்தை ராமன் பரிதாபமாகப் பார்க்கிறார்.

"மாமா இனியும் பக்தி பூஜைன்னு வழியாம, மெட்ராஸ்ல உங்களைக் கூப்பிட்டுட்டிருக்காளே, அந்த மல்டி நேஷனல் ஸாஃப்ட்வேர்காரன், வேலையை ஒத்துண்டு போய்ச் சேருங்க. இங்க பெங்களூர்ல இருந்து குப்பை கொட்டினது போதும்."

"ஆமாண்டா ஸ்ரீ.. போய்ச் சேர வேண்டியதுதான். பின்னால ஃபாரின் கூட போகலாம்னான். பெங்களூர்ல இருந்துண்டு குப்பை கொட்டினதும் இப்படி நடந்ததும் போதும்."

மலையில் சொன்னது போலவே ராமன் ரயில் ஏறிவிட்டார். கையை ஆட்டி வழி அனுப்பி வைத்தது ஸ்ரீகாந்த் மட்டுமல்ல; ராமனின் மனைவியும் மக்களும் கூட..

ராமன் மனைவி ஜானகி, நிம்மதியாய் பெருமூச்சு விடுகிறாள்.

"பெருமாளே என் கோரிக்கையை நல்லவிதமா நிறைவேத்தினே! டாக்டர் அட்வைஸ்படி இந்த ஊர் கிளைமேட் இவருக்குத் துளியும் பொருந்தாத ஒண்ணு. வெப்பப் பிரதேசத்துல சில வருஷம் இருந்தாலே ஆஸ்த்துமா படிப் படியா குணமாயிடும்னு டாக்டர் சொன்னதுக்கு தகுந்த மாதிரி இவரும் ஒரு வேகம் வந்து கிளம்பிட்டார். இவர் அங்க போய் செட்டிலாகி, நாங்களும் போனதும் இனி என்ன கவலை... இவர் விட்ட நடையை இனி அங்கிருந்து நான் பிடிச்சுக்கறேன்."

ஜானகியின் வேண்டுதல், ஸ்ரீகாந்தை ஒரு கலக்கு கலக்குகிறது.

"என்னது.... மாமா மெட்ராஸ் பக்கம் போகணும்னு வேண்டிண்டேளா?"

"ஆமாம் ஸ்ரீகாந்த். அந்தப் பெருமாள்தான் உன் நாக்குல உக்காந்து பேசி அவரை அப்படித் திருப்பி விட்டது. அந்த பாலாஜியை நீ என்னன்னு நினைச்சே? இதை வேணும்னுதான் நான் முதல்ல சொல்லலை. சொல்லியிருந்தா அவர் 'பாலாஜி, நீ பேசிட்டே'ன்னு திரும்ப இங்க டேரா போட்டு இந்த கிளைமேட் ஒத்துக்காம ஆஸ்த்மால அவஸ்தைப்பட ஆரம்பிச்சிடுவார். ஒரு நல்ல வருமானமும் எங்களுக்கு இல்லாம போயிருக்கும்."

ஜானகி சொல்லச் சொல்ல ஸ்தம்பித்துப் போகிறான் ஸ்ரீகாந்த்.

●

# 15

## மனுஷனாகணும்!

அற்புதமாக இருக்கிறது ஆகாசம். எப்பொழுதாவது மேகச் சிதறல்களும் அதன் பொன்னிறச் சேர்க்கையும் தாற்காலிகமாக ஓர் ஓவியக் கண்காட்சி நடத்துவதைப் பார்க்கும்போது பிரமிப்பு திகைப்பு என்பதோடு இயற்கைதான் எத்தனை பெரிய சக்தி என்கிற எண்ணமும் கலவையாகக் கிளர்ந்தெழுந்து விடுகிறது.

பலருக்கு இதை ரசிக்கத் தெரியவில்லை. அதோ மயிலாப்பூர் மாடவீதி மொட்டை மாடியில் நின்றபடி

வெங்கடரமணன் பார்க்கும் போது, அது நிதர்சனமாகத் தெரி கிறது.

கையில் சந்தியாவந்தனம் பண்ண எடுத்து வந்திருந்த நீர்ப் பாத்திரம். அந்தப் பாத்திர நீரின் திவலைகளில் கூட ஆகாச ஓவியத்தின் பிம்பங்கள் பட்டுத் தெறிக்கின்றன.

ஊடாடிக் கலைக்கிறது கீழே அப்பா சைக்கிளை எடுக்கும் சப்தம்.

அப்பாவுக்கு கோவிந்த வெங்கடேச சர்மா என்று சற்று நீளமான பெயர். இந்த வேகயுகத்திற்கு அத்தனை நீளப் பெயரை உச்சரிக்க நேரமில்லாததால் கோந்து சாஸ்திரி என்றாக்கி விட்டது அவரை. வெங்கடரமணன் கூட இந்தச் சிதைவுக்குள்ளானவன்தான். வெங்க்கி என்றாகி விட்டான். அம்மா மட்டும் எப்பொழுதும் முழுப் பெயர் சொல்லித்தான் அழைப்பாள். பெயரைச் சுருக்கினால் வாழ்வும் சுருங்கிப் போகும் என்பது அவளது அசட்டு நம்பிக்கைகளில் ஒன்று. சரியான அடுப்படிப் பூனை ஆகையால் புகை நிமித்தம் உருவாகும் வியாதிகள் சர்வமும்உண்டு. அதில் ஒன்று இருமல். சமயங்களில் கின்னஸில் இடம் பிடிக்குமளவு இருமுவாள். பதறிப் போய் நெஞ்சை வருடி விடுவான் வெங்க்கி.

"அம்மா, டாக்டர்கிட்ட போலாமா" என்று கேட்பான். கோட்டுவாயில் எச்சில் ஒழுக புடைவை முந்தானைத் துடைப்போடு சிரிப்பாள் அவள்.

"எதுக்கு வெட்டியா... சித்தரத்தை கஷாயம் போட்டு குடிச்சா சிட்டா பறந்துடாதா இந்த இருமல்?"

"எங்க பறக்கறது... நாளுக்கு நாள் ஜாஸ்தியாகறது எனக்குப் பயம்மா இருக்கும்மா..."

“போடா பைத்தாரா... டாக்டரைப் பார்த்து அம்பது நூறு அழுறதுக்கு யார்கிட்ட இருக்கு திராணி. எல்லாம் நீ டாக்டரா வந்து சரிப்படுத்து... மாட்டியா என்ன?”

அப்பாவிற்கு உபாத்யாயம்தான் தொழில். மயிலாப்பூர் குளத்தங்கரையில் போய் உட்கார்ந்து கொண்டு பூணூல், திருமாங்கல்யம் சரடு, தர்பைக் கட்டு, சமித்து இவைகளை போட்டுக் கொண்டு கடை பரப்புவது சாயங்கால வேளை களில்...

சரடு திரிப்பதில், அதில் மஞ்சள் தோய்ப்பதில் அம்மா கெட்டிக்காரி.

இப்பொழுது கூட சாஸ்திரிகள் கடை பரப்பத்தான் கிளம்பிக் கொண்டிருக்கிறார்.

“பிராம்மணனை வாணிகனாக்கிடுத்தே காலம்...” என்கிற சலிப்போடு.

பார்த்துக் கொண்டே நிற்கிறான். வெங்க்கி.

வானக் கோலத்தை மனக்கோலம் மென்று விழுங்கி விட்டது. பரீட்சை ரிசல்ட் இன்று வரப் போகிறது. பாசைப் பற்றிக் கவலையில்லை. முதல் மாணவனா இல்லையா என்பது பற்றித்தான் கவலை.

“கோடீஸ்வரய்யர் நீ முதல்ல வந்தா மெடிகல் சீட் வாங்கித் தர்றதா சொல்லியிருக்கார்...”

“பத்மநாபய்யங்கார் கூட நான் பாத்துக்கறேன் கவலைப் படாதேன்னு சொல்லியிருக்கார்...”

"உன் ஜாதகத்தைக் காமிச்சேன் வெங்க்கி... நீ நிச்சயம் டாக்டராவியாம். வித்யாகாரகன் அத்தனை பலமா இருக்கானாம்..."

– கடந்த ஒரு மாசமாய் இதே மாதிரி பிலாக்கணம் தான்.

"இன்னும் அஞ்சு வருஷம்தான் இந்த உபாத்யாயம் அப்புறம் நான் டாக்டரோட அப்பா. கௌரி, இதே மயிலாப்பூர் டேங்க்கை சுத்தி நாம கார்ல உக்காந்துண்டு வரணும்டி..."

"நன்னாருக்கு! முதல்ல சீட் கிடைக்கட்டும். அப்புறம் பேசலாம். ஒருக்கால் டாக்டருக்குக் கிடைக்கலேன்னா என்ன பண்றது... எஞ்ஜீனியரிங்குக்கும் போட்டு வைக்கணும்."

"பின்ன... படிப்புதானேடி... நமக்குப் பெரிய சொத்தே..?"

சாஸ்திரிகள் சொன்ன சூட்டோடு பூணூல், சரட்டு விலைகளையும் கூட்டி விட்டார்.

உபாத்யாயம் போகுமிடங்களிலும் தட்சணை இவ்வளவு என்கிற கறாா் தன்மை வந்து விட்டது. கொடுப்பதை வாங்கிக் கொண்டவர், வித்தைக்கு விலை வைக்கக் கூடாது அது பாவம் என்றவர்....

இன்று மகனின் கல்விச் செலவு அது இது என்று ஏகப்பட்ட உத்தேசங்கள், கொள்கையைச் சாப்பிட்டு விட்டது.

சமீப காலமாய்ப் பலர் அப்படி வெங்க்கி காதுபடவே சொன்னதை அவனும் கேட்க நேர்ந்தது. அது அவனை என் னென்னவோ செய்து விட்டது.

சந்தி முடித்து, கீழ் இறங்கி வருகிறான். வெறித் தனமாய் வெறும் வயிற்றுடன் அம்மா ஸ்லோகம் சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

மகனுக்கு முதல் மார்க் வர வேண்டுமே என்கிற மகா பெரிய கோரிக்கையோடு... அதைப் பார்க்க, பரவசம் தோன்றுவதற்குப் பதிலாக வெறுப்புத்தான் ஏற்படுகிறது.

மாடப்பிறையில் ரிசல்ட் வருமுன்பே வாங்கி வந் திருந்த அப்ளிகேஷன்கள் கிடக்கின்றன. அதை வரிசை யில் நின்று வாங்கப் பட்டபாடு அவனிடம் ஒரு ஓட்டம் ஒடுகிறது.

சினிமா டிக்கெட் போல ஐம்பது ரூபாய் அப்ளிகேஷனை நூறு ரூபாய்க்கு வாங்கிய கொடுமை அவனை நிற்க வைத்துக் கொளுத்துகிறது.

"யார் சாஸ்திரிகள் பிள்ளையா... அப்படி வா. உனக் குன்னு ஒண்ணு எடுத்து வெச்சிருக்கேன். மொத்த சீட்டே முப்பதுதான். இதுக்கு எட்டாயிரம் பேர் அடிச்சிண்டா என்னத்தடா பண்றது? அதான் கவுண்ட்டர் திறந்த ஒரு மணி நேரத்துல எல்லாம் காலியாயிடித்து."

— புலம்பியபடியே கல்லூரி க்ளார்க் ஒருவர் மார்புக்கு முன், பனியனுக்குப் பின் பதுக்கியிருந்த அப்ளிகேஷனை வியர்வைச் சொத சொதப்போடு எடுக்கிறார்.

ஐம்பது ரூபாயை நீட்டுகிறான்.

"என்ன அம்பி இது... அம்பது தரே... ஆயிரம் ரூவா தர ஆள் இருக்கு தெரியுமா?" அவர் மூக்கைச் சிந்துகிறார். பின் அப்படி இப்படி என்று நூறு ரூபாய் தந்து.

என்னவோ தெரியவில்லை. சரஸ்வதியை ஆளாளுக்குப் பிடித்து வைத்துக்கொண்டு ஒரு ரூபாய்... இரண்டு ரூபாய் என்று ஏலம் போடுவதாக ஒரு கற்பனையை அவனால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. அப்ளிகேஷன் அநியாயத் துக்கு கனக்கிறது. அதைக் கூட்டுகிறது பக்கத்து வீட்டு ருக்மணி மற்றும் பார்த்தசாரதியின் புலம்பல்.

"எல்கேஜிக்கு அஞ்சாயிரமா?"

"மத்த இடத்துல பத்தாயிரம்னா...

"எஜுகேஷன் நன்னா இருக்குமோல்லியோ?"

"ஆத்துல கூட பசங்க இங்கிலீஷ்லதான் பேசணும். அப்படி ஒரு கோச்சிங்."

"என்ன எழவோ... படிச்சு முன்னுக்கு வந்தா சரி. என்னை மாதிரி குமாஸ்தாவா குப்பை கொட்டாம டாக்டராவோ எஞ்ஜீனியராவோ ஆகணும். அதுக்கு என்ன உண்டோ அதைப் பண்ணணும்."

"அப்ப அந்த திருவான்மியூர் ப்ளாட்டை விலை பேசிடுங்கோ. இல்லேன்னா கடத்தேறாது."

"எனக்குத் தெரியாதா... நேத்தே புரோக்கராண்ட சொல்லிட்டேன்."

அவர்கள் பேசுவது காதில் விழுந்ததில் இதய பாகமே இரைச்சலாகி விட்டது. சமுத்திரம் இந்த வினாடி திருவல்லிக் கேணிக்கு அப்பால் பீச்ரோடு கடந்து இல்லை. வெங்க்கியின் மனசுக்கு அது குடிபெயர்ந்து விட்டது.

எரிச்சலாக இருக்கிறது.

யாரைப் பார் எஞ்ஜீனியராகணும், டாக்டர் ஆகணும் – தப்பில்லாத ஆசைதான். ஆனால் அதற்கான பிரயாசைகளில் கொஞ்சமாவது ஒழுங்கிருக்கிறதா, நியாயமிருக்கிறதா!

கேள்வி குத்தி எடுக்கிறது. குடைந்து நெம்புகிறது.

தள்ளிக் கொண்டு வருகிறார் பத்திரிகை நிருபர். வீட்டு வாசலில் கூட நிலைகொள்ளாத கூட்டம்.

"வெங்க்கி ஸ்டேட் ஃபர்ஸ்ட்டாம்."

"தெரியுமே... அவன் வராம யார் வருவா?"

"இனி சாஸ்திரிகள் பொழுது விடிஞ்சுடும்."

"ஹூம்... என் வீட்டு அராத்தும் இருக்கே... அது தலைல கரெஸ்பாண்டென்ஸ் கோர்ஸ் பி.ஏன்னு எழுதியிருக்கு, யார் மாத்த முடியும்."

"அதுக்கு பேசாம பழ வண்டி தள்ளி பொழைக்க லாமே..."

அக்கம் பக்கமாய் இப்படியெல்லாம் பிலாக்கணங்கள். ஆனால் வீட்டுக்குள் கங்கிராஜுலேஷன்ஸ், கங்கிராஜுலேஷன்ஸ் என்கிற ஆங்கிலக் கைகுலுக்கல்கள். பெருமை, அம்மாவின் முகத்தில் ராஜநடனம் போட்டுக் கொண்டிருக்கிறது. சாஸ்திரிகளும் இருப்பதில் உகந்த புதிய துண்டால் மார்பு மூடிய படி கம்பீரமாக உட்கார்ந்து கொண்டு போஸ் கொடுக்கிறார்.

"நாங்க பெரிய மிராசு பரம்பரை.. என் தாத்தா மகா வித்வான் பட்டம் வாங்கினவர். என் தோப்பனார் மினிஸ்ட்ரில செகரட்ரியாவே இருந்தவர். அந்த வம்சாவளி வீண் போகுமா என்ன?"

தன்னைத் தவிர்த்துப் பெருமை பீத்துகிறார் அவர். நிருபர் குறிப்பெடுத்துக் கொள்கிறார்.

“இந்த அளவு மார்க் வாங்க யார் காரணம்?”

நிருபரின் அடுத்த கேள்வி முன் அதுவரை மௌனமாக இருந்த வெங்க்கி என்னும் வெங்கடரமணன் முகம் நிமிர்த்துகிறான்.

“நான்தான்..

“அதுதான் தெரியுமே. உங்க ஸ்கூல் வாத்யார் பத்தி எல்லாம் கொஞ்சம் சொன்னா தேவலை..”

“ஏன் என் அப்பாவை விட்டுட்டேள். அவர்தான் பெரிய காரணம். பூணூல் வித்து உபாத்யாயம் பண்ணி என்னை ஆளாக்கியிருக்கார்...”

“அடுத்து டாக்டராக விருப்பமா இல்லை எஞ்ஜீனியராகவா...?”

“முதல்ல மனுஷனாகணும்” – அவனது பதில் நிருபரை ஒரு இடி இடிக்கிறது.

“என்ன சொல்றீங்க..?”

“இல்ல... நான் மனுஷனாகணும்னேன்.”

“அப்ப இப்ப...?”

“என்னை எங்க எல்லாரும் ஆக உடமாட்டா ளோன்னு பயமா இருக்கு. கொடுக்கக் கொடுக்கக் குறை யாதது கல்வி மட்டும்தான். ஆனா அதை எட்டாத உயரத்துல வெச்சு தங்கம், வைரம் மாதிரி விக்கற கொடுமையை என்னால

ஜீரணம் பண்ணமுடியலை. ஆகையால எனக்கு அந்தப் படிப்பு வேண்டாம். ஆயிரம் பத்தாயிரம் கொடுத்து அதை நான் விலைக்கு வாங்க வேண்டாம். அப்புறமா போட்டதை எடுக்க றேன்னு நாடி பிடிக்க நூறு ரூபா... ஊசி போட்டா நூத்தம்பதுன்னு மாறவும் வேண்டாம். எங்கப்பாவோட உபாத்யாயம், என் பக்கத்து வீட்டுக்காரரோட குமாஸ்தா உத்யோகம், ஒரு ஓட்டல் சப்ளையரோட சர்வர் வேலை எதுவும் தாழ்ந்ததில்லை."

"அப்படின்னா...?"

"நான் இனி உபாத்யாயம் படிக்கப் போறேன்... பழு தில்லாத வேதப் படிப்புதான் எனக்குப் பெரிசு. அது எனக்கு ஒரு அந்தஸ்தைக் கொடுத்தா அதுபோதும்."

"பைத்தியம்... பைத்தியம்... – சாஸ்திரிகள் குறுக்கில் புகுந்து கத்துகிறார். நிருபர் ஸ்தம்பித்துப் போயிருக்கிறார்.

யார் பைத்தியம் என்று அவனுக்குப் புரியவில்லை.

# 16

## அகலிகைக்கல்

**க**டைத் தெருவில் நடக்கும்போது தீபாவளி வேகமாக நெருங்கிக் கொண்டிருப்பதை நன்றாகவே உணர முடிந்தது ஜனனியால்.

கடைக்குக் கடை தள்ளுபடி வியாபாரம்.

வண்ண வண்ண அலங்காரங்கள் வேறு.

ஏதோ நஷ்டப்பட்டுக் கொண்டும், கையைச் சுட்டுக் கொண்டும் ஜனக் கூட்டத்துக்கு தீபாவளி சந்தோஷத்தை விநியோகம் செய்ய அவர்கள் முன் வந்து விட்டதைப் போன்ற பாவ்லாக்கள்! இதை எல்லாம் பார்க்க ஜனனிக்குச் சிரிப்பாக வருகிறது.

'யார் கண்டு பிடித்தது இந்த எழவை?'

தீபாவளியைத்தான் ஜனனி எழவு என்கிறாள்.

ஊரே வியந்து போற்றும் ஒரு திருநாளை இப்படித் தான் சொல்வதா என்று கேட்கத் தோன்றும். ஆனால் ஜனனி வரையில் அது ஒரு எழவு விழுந்த நாள்தான்.

அன்றுதான் அவள் கழுத்தில் தாலி கட்டியவன் அவளது தாய்க்காரியைப் பரலோகத்துக்கு அனுப்பி வைத்தான்.

"என்னடி இது தலை தீபாவளி... முந்நூறுக்கும் நாநூறுக்கும் ஒரு பேண்ட் துணி. சாக்கு மாதிரி ஒரு சர்ட் கொஞ்சம் ஆரியபவன் அல்வான்னு கதையை முடிச்சிடலாம்னு பாக்கறீங்களா? எங்கடி போடறேன்னு சொன்ன வைர மோதிரம்?"

என்று கேட்டு துளியும் விதரணையின்றி ஜனனியின் அம்மாவின் கூந்தலைக் கொத்தாகப் பிடித்தான். அந்த கிழவி கலங்கிப் போனாள். அவன் பிடித்து தள்ளியதில் சுவற்றில் மோதி விழுந்து உயிரையும் விட்டாள்!

அவன் எப்பொழுதுமே அப்படித்தான்...

ஆ ஊ என்றால் கையை நீட்டி விடுவான்.

பெண் பார்க்க வந்தபோது கௌதம புத்தன் போல சாந்தம் காட்டியவன். 'பெண்மை அதன் விடுதலை, சமூகம் அதன் கோரமான குணங்கள் என்று ஜனனி எதிரில் ஏதேதோ பேசியவன் பின்னாளில் ஒரு கஞ்சா விழுங்கியாக அதற்காக அவள் கற்பையே அடகு வைப்பவனாக எல்லாம் மாறிப் போவான் என்று யார் எதிர்பார்த்திருக்கக் கூடும்?

ஜாதகத்தில் கூடப் பத்துப் பொருத்தம் பிரமாதமாகப் பொருந்தியதாக ஜோசியர் கூறினார். ஆனால் ஒற்றைப் பொருத்தம் கூட ஒழுங்காக இல்லை என்பது பிறகல்லவா தெரிந்தது. அப்பா அல்லது அண்ணாக்கள் உயிரோடோ இல்லை, உறவோடோ இருந்திருந்தால் இப்படி எல்லாம் நடந் திருக்காதோ என்னவோ... அது சரி தலை எழுத்தை யார் மாற்ற முடியும்? ஜனனி கடை வீதியில் நடக்கும்போது இந்தச் சனியனையெல்லாம் அசை போடுகிறாள்.

தீபாவளியில் தொட்டெழுந்த நினைப்பு அதன் பட்டாசு நெருப்புப் போலவே பற்றிக் கொண்டு எரிகிறது.

ஒரு தனியார் கடையில்தான் வேலை பார்க்கிறாள். ஆயிரத்துச் சொச்சம் சம்பளமாகத் தருகிறான் அதன் முதலாளி சம்பளம் தரும்போது உள்ளங்கையை எப்படியாவது தொட்டு விடுவான் அந்த ராஸ்கல்.

கூடவே வேலை பார்க்கிறான் ஒரு கோணங்கி. அவ னுக்குப் பக்கவாட்டில் பார்ப்பதும் பால்கோவா நிறத்து இடுப்பு வெளியில் கிறங்குவதுமே வாடிக்கை.

கடைக்கு வருகின்ற ஆண்களும் கூட நூத்துக்குத் தொண்ணூறு பேர் அசந்தால் மார்பு வருடிகள்.

மொத்த ஆண் சமூகமே பெண்களை ஏதோ கடித்து விழுங்கும் சமாச்சாரங்களாக நினைப்பதுதான் நிஜம்.

இந்த மகானுபாவர்கள் தானே மாப்பிள்ளைகளாகி றார்கள்? இவர்களை எப்படி ஒழுங்கானவர்களாக நினைக்க முடியும்? எனவேதான் தீர்மானமாக ஜனனி நம்புகிறாள். அனேகர் கல்யாணம் வெறும் அவஸ்தை மட்டுமே என்று...

நல்ல வேளை ஜனனி இப்போது அவனை விட்டுப் பிரிந்து விட்டாள். 'போடா நாயே நீ இல்லாமலும் என்னால் வாழ்ந்து காட்ட முடியும்' என்று விலகி வெளியே வந்து விட்டாள்.

கல்யாண வாழ்க்கை ஒரு வார சினிமாப்படம் போலத் தோற்றுவிட்டது.

சொந்தமாக வீடு இருக்கிறது. ஒரு பூர்வீகச் சொத்து.

போதுமே.... சென்னையில் வீடு உள்ளவன் தானே குபேரன்? அதை இரண்டாக வகுந்து வாடகைக்கு விட்டு விட்டாள். சும்மா இருக்கப் பிடிக்காமல் உத்யோகமும் பார்க் கிறாள்.

ஏதோ ஜீவனோபாயத்துக்குக் குந்தகமில்லை.

ஓடிக் கொண்டிருக்கிறது வாழ்க்கை.

ஆனால் தீபாவளி, பொங்கல் என்று ஒரு விஷயம் கிடையாது. நினைத்தாலே கொதிப்பைத் தருபவை அவை. பின்னே இப்படி எல்லாம் நடந்தால் தராதா என்ன?

கிட்டத்தட்ட வாசுவும் ஜனனி போலத்தான் தீபாவளி பொங்கல் பற்றி எல்லாம் நினைக்கிறான்.

நான்கு தங்கைகளுக்கு அண்ணனாகப் பிறந்து அவர் களுக்குக் கல்யாணமும் செய்து கொடுத்து உச்சந் தலையில சொட்டை விழுமளவு சோர்ந்து போயிருப்பவன்.

"என்னம்மா இது... இப்பதானம்மா ஒரு தீபாவளி போனது. அதுக்குள்ள அடுத்த தீபாவளியா? வருஷத் துக்கு எத்தனை தீபாவளி?"

"ஒண்ணுதாண்டா... எதுக்கு இப்படி அலுத்துக் கறே?"

"அலுத்துக்காம நான்னா செலவழிக்கிறவன்?"

"போறுண்டா... செலவாம் செலவு கூடப் பொறந்த வளுக்குச் செய்யறதெல்லாம் ஒரு செலவாடா?"

"நீ சொல்ல மாட்டே? மூணு ஷிப்ட் பார்த்து முதுகு ஒடியப் பாடுபட்டு மூவாயிரம் சம்பாதிக்கிறேன் அதுல மூணு காசு சேர்க்க முடியலை எல்லாம் இவங்களுக்கே சரியா இருக்கு..."

"குடும்பம்னா பின்ன என்னடா?"

"ஓயாம வெடி வைக்கறதுக்குப் பேர்தான் குடும் பம்னா எனக்கு அது வேண்டாம்மா. நான் சன்யாசி யாயிடறேன்...

வாசுவின் புலம்பல் பிளைவுட் தடுப்புத் தாண்டி அப்பால் ஜனனியின் போர்ஷனிலும் கேட்கிறது.

ரசித்துச் சிரித்துக் கொள்கிறாள்.

இவனும் தன்னைப் போலவே தீபாவளி பொங்கலை வெறுப்பவன் என்கிற காரணம் கொஞ்சம் அவனைக் கவனிக்க

வைக்கிறது. அவன் விடாமல் புலம்பி அழுகிறான். அவன் அம்மாவும் விட்டபாடில்ல.

“இதோ பாருடா... உனக்கும் ஒரு கல்யாணம் நடக்கும். அப்ப உன்னையும் தாங்க ஒரு மாமனார் மாமியார் மச்சினன் மச்சினின்னு ஒரு கூட்டம் வரும். அப்ப மாசத்துக்கு ஒரு தீபாவளி வராதான்னு மனசு ஏங்கும் தெரியுமா?”

“ஐய்யய்யோ... இங்க நான் அனுபவிக்கிறது பத்தாதா? நான் கல்யாணம் பண்ணி இன்னொரு கூட்டத்தையே கலங்கடிக்கணுமா?

“போடா முட்டாப்பயலே... நாள் கிழமைன்னா செஞ்சா தானே நல்லா இருக்கும். உலகத்துல எல்லா இடத்துலயும் உள்ளது தானே?”

“எல்லா இடத்துலையும் இருக்கலாம். ஆனா ஒண்ணு தெரிஞ்சுக்கோ. நான் வித்யாசமான கேஸ். எனக்கு யாரும் எதுவும் செய்யவேண்டாம். நானும் யாருக்கும் செய்யலை போதும்மா...”

மூக்கைச் சிந்தி உடைந்த குரலோடு வாசு சொன்ன விதத்தில் ஜனனிக்குள் சிரிப்பு பூவாணமாகப் பெருக் கெடுக்கிறது.

அது வாசு காது வரை கேட்டதோ என்னவோ சக்கென்று ஒரு அமைதி அங்கே தொத்திக் கொள்கிறது.

**டொக்....** டொக்...

கதவு தட்டப்பட திறக்கிறாள் ஜனனி. எதிரில் அவன்! ஐய்யோ!

தலைவிரி கோலமாய் உதட்டில் சாராய வாடை யோடு அழுக்குப்பாண்டும் சட்டையும் அங்கங்கே கிழிந்து கிடக்க ஜனனியைப் பார்த்து சிரிக்கிறான் அவன்.

"நீயா?"

"நானேதான். வரவே மாட்டேன்; ஜாலி பண்ண லாம்னு பாத்தியா?"

"வாய மூடு போ வெளியே...

"நான் உன் புருஷன்."

"ஆனா நான் உன் பொண்டாட்டி கிடையாது. ஞாபகத்துல வெச்சுக்கோ..."

"கட்டினதாலி சாட்சி இருக்கு. இல்லேன்னா விட்டுடு வேனா."

"இப்பப் போறியா இல்லியா?"

'நான் போக வரலை... இனிப் போகவும் மாட்டேன்.'

அந்தக்குடிகாரன் அவளைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைகிறான். அவள் கண்களில் சிகப்புச் சேர ஆரம்பிக்கிறது. உடல் பலத்தால் இவனை அசைக்க முடியாது. இனி வேறு விதமாகச் செயல்பட வேண்டியதுதான்... அந்த நிலை யிலும் கோபத்தில் கரைந்து போகாமல் யோசிக்க ஆரம்பிக் கிறாள்.

அவன் உள்ளே நுழைந்து நடு ஹாலில் அமர்ந்து கொள்கிறான். அரை மீசையை நடுங்கும் கரங்களால் நீவி விட்டுக் கொள்கிறான்

அவள் சில வினாடிகள் முறைத்து விட்டு உள்ளே செல்கிறாள். ஒரு பெட்டியில் முக்கியமான துணிமணி நகை பணத்தை அள்ளி எடுத்துக் கொள்கிறாள். அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே வெளியே கிளம்ப ஆயத்தமாகிறாள். போகும் போது சொடக்குப் போட்டு அழைத்துப் பேசுகிறாள்.

“இப்ப நேரா போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான் போறேன். என் வீட்ல திருடன் புகுந்துட்டான்னு கம்ப்ளையிண்ட் பண்ணப் போறேன். உன்னை நாற அடிக்கறேன் இரு...”

வாசுவுக்கு ஜனனியின் அந்த ஆவேசக் கோலம் அதிர்ச்சியைத் தருகிறது.

‘ஒரு பெண்ணுக்கு இத்தனை தைரியம் சாத்யமா?’ என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டு ஆச்சர்யப்படுகிறான்.

“என்னங்க... என்ன விஷயம்?” அவனது கேள்வி முன் அவள் ஆழப்பெருமூச்செறிகிறாள்.

“ஆமா எங்க கிளம்பிட்டீங்க – பொட்டியோட?”

“உள்ள ஒரு ராட்சஸன் இருக்கான் அதான் கிளம்பிட்டேன். வெளில...”

வாசுவின் பார்வை உள் நோக்குகிறது. அவன் தெரிகிறான். வருவது வரட்டும் என்கிற பாவனையில் சாவதானமாக ஒரு சிகரெட் பற்ற வைத்தபடி...

“ஆமாம் யார் அவரு?”

“நான் சொல்றேன். அவளோட புருஷன்” பதில் உள்ளிருந்தே வருகிறது.

"நீயா புருஷன்! நாயே – பணப்பிசாசே... அப்படிச் சொல்லாதே..." அவள் நரம்பு புடைக்கும் வண்ணம் கத்துகிறாள்.

சுற்றிலும் கூட்டம் கூடி விட்டது. எல்லோருமே சுவாரஸ்யமாய் ரசிப்பது போல பார்க்கிறார்களே யொழிய ஒரு பெண்ணின் வேதனை புரிந்த பார்வையாக அது இல்லை.

அவன் வெளியே வருகிறான். நின்று தினவுடன் கத்துகிறான்.

"ஏண்டி நின்னுட்டே... போ போலீஸ் ஸ்டேஷனுக்கு. அவங்க வரட்டும் நான் திருடனா புருஷனாங்கறத இதோ இவங்கள வெச்சே நிரூபிக்கிறேன்."

அவள் முதல் முறையாகப் பெட்டியைக் கீழே வைத்து விட்டு அப்படியே அமர்ந்து அழ ஆரம்பிக்கிறாள்.

வாசுவை மட்டும் அது என்னவோ செய்கிறது.

மற்றவர்களுக்கு அது ஒன்றும் புதிய விஷயமில்லை.

பார்த்துப் பார்த்துப் புளித்த ஒன்றுதான்.

அவன் வந்ததே பணத்துக்காகத்தான். அதை அழுது கொண்டே விட்டெறியவும் பொறுக்கிக் கொண்டு கிளம்புகிறான். வாசு பார்த்துக் கொண்டே இருக்கிறான்.

அவன் போன பின்பு கேட்கிறான்.

"தப்பு உங்க பேர்லதான் இருக்கு... இந்த மாதிரி நபரோட வாழப் பிடிக்கலைன்னு கோர்ட்ல விவகாரத்து கேக்க வேண்டியதுதானே?"

"கேக்கலாம்... கிடைக்கும். ஆனா அது சரியான தீர்வா எனக்குப் படலை வாசு..." – ஜனனி தன் பதிலில் அதிக பட்ச ஆச்சரியம் தருகிறாள்.

விவாகரத்து ஒரு தீர்வில்லை என்கிறாளே?

வாசுவுக்குப் புதிராக இருக்கிறது அவள் விளக்கம்.

"ரொம்ப ஆச்சரியமா இருக்கு உங்க பதில்."

"ஆமா ஆச்சரியமாத்தான் இருக்கும். விவாகரத்து என்னை இந்த மிருகத்துகிட்ட இருந்து பிரிக்கும். அவ்வளவுதானே செய்யும். அதுக்கு மேல அதால என்ன செய்ய முடியும்?"

"வேற என்ன செய்யணும்னு எதிர்பார்க்கறீங்க ஜனனி."

"அவன் தப்புக்குத் தண்டனை தருமா? என் இழப்புக்கு ஈடா ஒரு நல்ல புருஷனை வாங்கித் தருமா? இது நாள் வரை பட்ட கஷ்டத்துக்கும் வேதனைக்கும் இணையா இன்பத்தையும் நிம்மதியையும் தருமா?"

"அது எப்படி முடியும்? அதை நாமதானே தேடிக்கணும்."

"அதை விவாகரத்து செஞ்சுதான் தேடிக்கணுமா? செய்யாமலே தேடிக்கிட்டா."

"அது முடியாத விஷயம் ஜனனி. அவன் கட்டின தாலி உங்க கழுத்துல இருக்கும்போது உங்களோட வாழ யார் முன் வருவாங்க. வந்தாலும் அவன் விடுவானா?"

ஜனனி அவன் கேள்வி முன் மயங்குகிறாள். நியாயமான கேள்விதானே... அதே சமயம் அவள் கேட்டதிலும் என்ன தப்பு இருக்கிறது?

விவாகரத்து ஒன்று மட்டும் தானே நீதி மன்றம் தரும். மற்ற விஷயங்கள்?

இருவரின் இடையே ஒரு உறைந்து போன மௌனம் இறுக்கத் தொடங்குகிறது.

வாசு எழுந்து கொள்கிறான்.

"யோசிச்சு நல்ல முடிவு எடுங்க. முதல்ல இவனை வெட்டிவிடப் பாருங்க... போட்டுக் குழப்பிக்காதீங்க."

— சொல்லிக் கொண்டு தன் போர்ஷன் நோக்கி நடக்கிறான்.

ஜனனி அந்த நிலையிலும் சிரிக்கிறாள். அவள் கணவனைப் பற்றி யோசிக்கிறாள்.

அவன் இந்நேரம் எந்த வைப்பாட்டி வீட்டில் இருக்கி றானோ?

இந்த மாதிரி ஆட்களுக்கெல்லாம் எப்படியாவது பெண்கள் கிடைத்து விடுகிறார்கள்.

ஆனால் ஒரு பெண்ணுக்கு...?

திரும்பவும் அவன் வந்திருந்தான். அவன் பெயர் தான் என்ன? ஜனனி அதை நினைத்துக் கூட பார்க்க விரும்ப வில்லை. அவளும் அவனை 'அவன் அவன்' என்றே அழைத்ததால் கல்யாணப் பத்திரிகையில் இடம் பெற்றிருந்த அந்த ராமன் எனும் பெயர் எவர் நினைப்புக்குமே வராமல் போய் விட்டது.

அவன் ஜனனியை மட்டும் பாழ்படுத்தவில்லை. தன் பெயரையும்தான் என்பது பெயரைக் கேட்ட மாத்திரத்தில் வாசுவுக்கும் விளங்கிவிட்டது.

இந்த முறை வந்தவன் அவளை போகத்துக்கு அழைக்க அவள் அவனை தள்ளிவிட பெரிய ரசாபாசம். சப்தம் வாசுவின் போர்ஷன் வரைக்குமே கேட்கிறது.

வாசுவுக்கும் அவன் அம்மாவுக்கும் ரொம்பத்தான் நிரடுகிறது.

"டேய் வாசு... என்னடா இது – போடா போய் அந்தப் பொண்ணை கொஞ்சம் அட்ஜஸ் பண்ணிகிட்டுப் போகச் சொல்" என்கிறாள்.

வாசு நெளிகிறான்.

"ஆமா அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுன்னா?"

"இதை எல்லாம் சொல்வாங்களா... புருஷன்தானே கூப்பிட்றான். போனா என்ன? எதுக்கு இவ இத்தனை பிகு பண்ணிக்கிறா.... பிகு பண்ணப் பண்ண பிரச்சினை தானே ஜாஸ்தியாகுது. அவன் எப்படி எல்லாம் பேசறான் பாரு. காது கொடுத்துக் கேக்க முடியுதா?"

"அது எப்படிம்மா இதைப் போய் நான் சொல்லிகிட்டு."

அவளே புரிந்தது போல அங்கிருந்தபடியே உரக்க கத்துகிறாள்.

"அம்மா ஜனனி... தயவு செஞ்சு உன் புருஷன் பேச்சைக் கேள் தாயி. மொரண்டு பிடிச்சுப் பிரச்சினையைப் பெரிசு படுத்தாதே..." என்கிறாள்.

ஜனனிக்கு அழுகை பீறிடுகிறது.

இதென்ன அக்கிரமம்... அநியாயம்... தாலி கட்டிவிட்டால் ஒரு பெண்ணை ஒருவன் என்ன வேண்டுமானால் செய்வதா? அதற்கு அக்கம் பக்கமும் ஒத்து ஊதுவதா?

அவள் குமுற அவன் அதை ரசிக்கிறான்.

"வாடி... பெரிஸ்ஸா பிகு பண்ணினே இருக்கற கொஞ்ச நஞ்ச மானமும் போயிடும். வாடின்னா..."

அவனது போதை உதட்டின் ஆக்ரமிப்பான பேச்சு வாசுவை என்னவோ செய்கிறது.

ஜனனியின் மனநிலையை நன்றாகவே அவனால் புரிந்து கொள்ள முடிகிறது.

தாலி இருக்கிறது என்கிற ஒரே காரணத்துக்காக இப்படி எல்லாம் கூடவா அராஜகம் நடத்த முடியும்? ஜன்னி சொல்வது போல விவாகரத்து இம்மட்டில் ஒரு சாதாரணத் தீர்வுதான். சரியான தீர்வு என்பது அவன் மனதில் விழும் பெரிய அடி ஒன்றுதான். அதைத் தன்னால் கூடக் கொடுக்க முடியும் என்பது போல ஒரு மின்னல் நினைப்புத் தோன்ற வேட்டியை மடித்து கட்டிக் கொண்டு வெளியேறுகிறான்.

புயல் போல ஜனனியின் போர்ஷனில் நுழைபவன் அவனை நெருங்கி ஓங்கி ஒரு அறை விடுகிறான். பின் ஜனனி பக்கம் திரும்பிப் பார்த்தபடி சொல்கிறான்.

"டேய் நாயே... நான் ஜனனியை கல்யாணம் பண் ணிக்கப் போறேன். உன் கூட வாழறதுக்கு அவளுக்கு துளிகூட இஷ்டமில்லை. நீ வேணும்னா கோர்ட்டுக்கு போய் உன் தாலியைக் கேட்டு வாங்கிகிட்டு போ.

..."

இப்ப அவ என் ஆள். தொட்டே நறுக்கிடுவேன்....

– வாசுவின் பதில் அவனை ஆகாசத்துக்கே தூக்கி எறிகிறது. வாசு ஒரு வேகத்தில் பேசிவிட்டாலும் ஜனனி என்ன சொல்வாளோ என்பது போல அவள் பக்கம் திரும்ப ஒரு ஆண் காலில் விழுவதே பாவம் என்கிற கொள்கையில் இருந்த அவள் ஒரு நிஜமான ஆணைப் பார்த்த பூரிப்போடு தன் சம்மதத்துடன் ஒரு மரம் போலச் சரிந்து அவன் காலில் விழுகிறாள். சாப விமோசனம் பெற்று எழுகிறாள்.

●

# 17

## ஆசை நெசவு

“தடக் தக்... தடக் தக்... தடக் தக்...

சீதாவின் பட்டுத்தறி ஓடத் தொடங்கிவிட்டது. சப்தம் கேட்டு, கிழக்குவானில் சூரியனும் ஆஜர். புடைவையைச் சற்று ஏற்றி செருகிக் கொண்டு தறிமேடையில் அமர்ந்தபடி அவள் கால், கை, கண் என்று முக்கிய உறுப்பு ஒவ்வொன்றையும் கவனமாக இயக்கி அன்றைய பொழுதுக்கு உழைக்க ஆரம்பித்து விட்டாள்.

சாணி போட்டு மெழுகிய தறி மேடையில் பட்டுப் பாவு **கிண்**ணென்று இழுத்து கட்டப்பட்டிருக்கிறது. பாவு நீட்டத்துக்குக் **கீழே,** தன் வேட்டியையே போர்வையாக நினைத்து தலை எது கால் எது என்று தெரியாத படிக்கு சுருண்டு படுத்திருக்கும் அவள்

அண்ணன் மாதவன், தறியின் சப்தம் கேட்டு, தூக்கம் கலைந்து போகிறான்.

“ஏண்டி இப்படி தூங்க விடாம காலங்கார்த்தால தறில வந்து உக்காந்து கழுத்தை அறுக்கறே...” என்று செல்லக் கோபத்தோடு ஒரு முனகு முனகிவிட்டு, திரும்பவும் சுருண்டு படுத்துக் கொள்கிறான்.

அண்ணனின் அந்த சப்தத்தைப் புறந்தள்ளுகிறாள் அவள். பார்வை சொலைட்டியில் தந்த கேலண்டரை நோக்கித் திரும்புகிறது.

1,2,3, என்று காட்டும் தேதிகளில் ‘தீபாவளி’ என்று போட்டு சிவப்பெழுத்தில் மின்னும் தேதியின் மேல் போய் நிற்கிறது சீதாவின் பார்வை.

விரல் விட்டு எண்ணி இடைப்பட்ட நாட்களைக் கணக்கு போடுகிறாள். இடையில் இருப்பது இன்னும் ஏழே நாட்கள் தான்.

ஐயோ!

சீதாவிடம் பகீர் உணர்ச்சி!

தறியில் வளர்ந்து கொண்டிருக்கும் புடைவையை ஒரு பார்வை பார்க்கிறாள். முழுசாக ஒரு கஜம் கூட வளர்ந் திருக்கவில்லை அது.

இன்னும் ஐந்து கஜ நீளம் வளரவேண்டும். நடுவில் புட்டா வேலைப்பாடெல்லாம் இருக்கிறது. ஏழு நாளில் முடிக்க முடியுமா? நினைக்க மலைப்பாக இருக்கிறது.

தன் மருதாணி விரல்களால் நெய்த வரையில் புடைவையை வருடுகிறாள். பொன்னிறத்தில் மின்னுகிறது. அவளுக்குப் பிடித்த

வண்ணம் முந்தி பார்டரில் எல்லாம் கூட அவளுக்குப் பிடித்த டிசைனில் தட்டுத் தட்டாகப் பூக்கள்.

அவளே அவளுக்காக நெய்யும் முதல் பட்டுப் புடைவை! இருபத்தி நாலு வயதாகிறது. இருநூறுக்கும் மேல் புடைவைகளை நெய்து விட்டாள். ஆனால் அவளுக்கென்று ஒரு பட்டுப் புடைவை கிடையாது.

இந்த தீபாவளிக்காவது ஒரு பட்டுப் புடைவையைத் தனக் கென்று சொந்தமாக்கிக் கொண்டு விடவேண்டும். இராட்டை சுற்றி, திருவட்டம் சுற்றி, பிசிறு பட்டு நூல்களையெல்லாம் திரட்டி, வந்த விலைக்கு விற்று ஒரு பட்டுப் பாவை வாங்கி விட்டாள் சீதா. அண்ணன் மாதவன் எப்படியோ விழுந்து புரண்டு ஜரிகை வாங்கித் தந்து விட்டான். மற்ற சமாசாரங்கள் எல்லாம் ஐந்து பத்துகளில் முடிந்து விடும். முக்கிய மூலதனமே உழைப்புதான்! அதையும் ராவில்லை பகலில்லை என்று கொட்டத் தொடங்கி விட்டாள்.

நடுவில் ஆயிரம் வீட்டு வேலைகள். தகப்பனின் ஜமுக்காளத் தறிக்கு நாடா சுற்றிப் போடவேண்டும். அக்காவும் குழந்தை களும் இங்கேதான் இருக்கிறார்கள். அக்கா புருஷன் அக்காவை விட்டுவிட்டு பம்பாய் பக்கம் ஓடி விட்டான்.

ஓடியதற்குக் காரணம்? அக்காவுக்கு வந்திருக்கும் காசம்! அவனுக்கும் தொற்றிக் கொண்டு விடுமாம்! இது தெருவுக்குச் சொல்லும் சுமாரான காரணம். நிஜம் வேறு! ஒரு திருட்டு கேஸில் போலீஸ் அவனைச் சந்தேகப்பட்டுத் தேடி வருகிறது. இங்கே இருந்தால் ஆபத்து!

அக்காவும் ஒடிந்து விழுந்து விடும் புடலங்கொடி மாதிரிதான் இருக்கிறாள்! அவள் பசங்களைக் குளிக்க வைத்து,

சாப்பாடு போட்டு பள்ளிக்கு அனுப்பவே நேரம் சரியாக இருக்கிறது. அதுமட்டுமா?

வேலையிலேயே பெரிய வேலை தெருக் குழாயில் தண்ணீர் பிடிப்பது தான். அங்கு சங்கமிக்கும் மண்டோதரி குண்டோதரிகள் நடுவில், நசுங்கிப்போன பித்தளைக் குடத்தில் நீர் மொண்டு வரத்தான் அதிகபாடு படவேண்டி இருக்கிறது.

இதில் பட்டுப் புடைவை ஆசைக்கு, தூங்கும் நேரமும் இது போன்ற காலைப் பொழுதுகளும்தான் உடன்படுகின்றன!

நெசவு நெய்யும் போது சீதாவுக்குள் நினைவுகளும் நெய்யப்படுகின்றன! களைப்பாக இருந்தாலும் வரப்போகும் தீபாவளியை உத்தேசித்து, அந்தக் களைப்பு ராஜாவுக்குப் பயந்து ஒதுங்கும் சேவகனாக தூரப் போய் நின்று விடுகிறது! தீபாவளிக்காக மட்டுமா நெய்கிறாள்... வேறு ஒரு காரணமும் இருக்கிறது. அந்த காரணத்துக்குப் பெயர் அத்தை மகன் கோபி! அவனுக்குப் பட்டு புடைவை என்றால் மிகப்பிடிக்கும்... புடைவையை வருடி வருடிப் பார்க்கிறது கை அழுத்தமாக நாடாக் கட்டை விரட்டி ஒத்தி எடுக்கிறாள்.

'தம்... தமதம்..

சப்தம் மாதவன் காதை மொத்துகிறது. தூக்க நடுவில் திரும்பி, கத்துகிறான்.

"ஏய் அழுத்தமா நெய்யறேன்னு நாடாச் சட்டத்தை உடைச்சிப்பிடாதே..."

"தெரியும்... நீ எழுந்திரிச்சு அள்ளு நீட்ற வேலையப் பாரு..

"எட்டு மணி வரை மூச்சு விடாதே...!"

"மணி எட்டாயிடிச்சு!" அவளிடமிருந்து பொய்!

அவன் வேட்டியை ஒதுக்கி ஒரு முப்பது டிகிரிக்குத் தலையை வளைத்து உயர்த்திப் பார்க்கிறான் வீட்டுக் கூரைச் சரிவில் சூரியக் கதிர்களின் குடைவு தெரிகிறது. வாசப் பக்கமும் பார்வையை ஒரு விரட்டு விரட்டுகிறான் பார்த்துவிட்டு அரைச் சிரிப்புடன்,

"மணி ஆறு கூட ஆகலை கதை விடாதே..." என்று திரும்பச் சுருண்டு படுக்கிறான்!

சூரியக் கதிர் ஓட்டுத் துவாரம் வழியாக அவன் முகத்துக்கு நேரே விழும் போதுதான் எழுந்திருப்பான். அப்போது சரியாக மணி எட்டடிக்கும். தெருவில் வசிக்கும் அய்யரும் தம் குமாஸ்தா உத்யோக நிமித்தம் பளிச்சென்று வீட்டைத் தாண்டிக் கொண்டிருப்பார்.

அவனது கணிப்புக் கடிகாரத்தின் வல்லமையை உணர்ந்தவள்போல் தறிமேடையில் அரைப்புன்னகையுடன் புடைவையை வளர்த்துகிறாள்.

அது வளரும் போதே அதைக் கட்டினால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்க்கிறாள். 'இந்தப் பொன்னிறத்துக்குத் தோதாகத் தலையில் பொன் மஞ்சளில் ஏற்காட்டு ரோஜா செருகிக் கொள்ள வேண்டும். பொன் மஞ்சள் ஸ்டிக்கர் பொட்டு வைத்துக் கொள்ள வேண்டும். அளவாக மஞ்சள் தேய்த்துக் குளித்தால் உடம்பும் கூட புடைவைக்கு இயைந்து கொடுத்து விடும்.

அப்படியே மின்ன மின்ன அந்த சிடுமூஞ்சி அத்தை மகனை கோபியைத்தான் முதலில் போய்ப் பார்க்க வேண்டும். ஆசையாய்

நினைத்துக் கொள்கிறாள். அவன் முதலாளி மகளை சைட் அடிக்கிறானாம். அவளும் கூட கிட்டதட்ட விரும்புவதாகத் தகவல்...

அவள் எங்கே? இவன் எங்கே? முதலாளி முப்பது பட்டுத் தறிக்கு சொந்தக்காரர்! இவனோ கூலித் தறி அவளிடம் நாற்பது பட்டுப் புடைவை இருக்கிறதாம். நாளைக்கு ஒன்று கட்டினாலும் மாதம் முடிந்தபிறகு பத்து மிச்சமிருக்கும்!

எல்லாம் எங்களின் உழைப்பை உறிஞ்சிக் குடித்த காசில் வந்தது. அந்தப் பிசாசின் மேல் இவனுக்கு ஆசை வரலாமோ? அது நிஜமோ?

சீதாவின் நினைப்பில் இப்பொழுது அனலும் கனலும் புனலாய் ஓடுகின்றன. கைகால்களில் ஒருவகை அமானுஷ்ய வேகம்.

தம் தம் சப்தம் கூடிப் போகிறது. தூக்கம் கலைந்து நிமிர்ந்து பார்க்கிறான் மாதவன்.

ஒரு பேய் போல் எங்கோ பார்த்தபடி கைகால்களை இயக்கும் அவளைப் பார்த்து ஆச்சரியப்படுகிறான். அவிழ்ந்த வேட்டியை மளமளவென்று இறுக்கி கட்டியபடி, புரண்டு, தறிக்கு அடியில் இருந்து வெளியே வந்து, தறிமேடையில் ஆவேச கதியில் இருக்கும் சீதாவின் கரத்தைப் பிடிக்கிறான்.

ஒருவழியாக அவள் நிலைப்படுகிறாள். லேசாய் கலங்கின விழிகளுடன் மாதவனைப் பார்க்கிறாள்.

“என்னாச்சு உனக்கு...?”

“ஒண்ணுமில்ல... சுதாரிக்கிறாள் சீதா.

“நீ நெய்யறது பட்டு... ஞாபகம் இருக்கா என்னமோ ஜமுக்காளம் நெய்யற மாதிரி படபடன்னு போனா எப்படி?” அவள் காதோர வியர்வையை வழித்து போட்டபடி அவனைப் பார்த்து ஒரு மெலிசான புன்னகைக்கு மாறுகிறாள்.

அவன் தூக்கம் கலைந்துவிட்டிருக்கிறது.

பார்வை தறிமேலும் செல்கிறது. அவள் நன்கு நெய்திருப்பது தெரிகிறது.

“உனக்கு நெஞ்சுக்கற புடைவைன்னா என்னமா நெய்யறே?” – ஆச்சரியப்படுகிறான்.

“நல்லா வந்திருக்கா?”

“பிரமாதம்!”

“கலர்?”

“சூப்பர்...

“எனக்கு நல்லா இருக்குமா?”

“தேவதை மாதிரி இருப்பே...

“நிஜமாத்தான் சொல்றியாண்ணே...

“சத்யமா சொல்றேன்... அவன் அவள் தலையை வருடி திரும்பவும் காதோரம் துளிர்த்த வியர்வையைத் துடைத்து விடுகிறான். “நானும் அப்புறமா வந்து நெஞ்சு தரேன்...” என்கிறான்.

“வேண்டாம்ணே... நானேதான் நெய்வேன். ஒரு அங்குலம் கூட யாரும் நெய்யக் கூடாது. என்னோட முதல் பட்டுப் புடைவைல என் உழைப்புதான் இருக்கணும்.”

— அவள் ஒரு லட்சிய வெறியோடு சொல்வதாகப் படுகிறது. சிரித்துக் கொண்டே டீக்கடை நோக்கிக் காலெடுக்கிறான்.

**வீ**ட்டு வேலைகளை முடித்துவிட்டு அக்கடா என்று படுக்க ஆசைப்பட்ட உடம்பை மன உறுதியோடு பிடித்து இழுத்து தறிமேடையில் ஏற்றி, திரும்பவும் அந்தப் புடைவையை நெய்ய ஆரம்பிக்கிறாள் சீதா.

மூடியிருந்த பாலிதீன் தாளை ஒதுக்கி மடித்துவிட்டு, திமிசுக் கட்டையில் காலை வைக்கிறாள்.

'தடக்தக்... தடக்தக்... தடக்தக்... தறி ஓட்டம். ஆரம்பமாகிறது. வாசப்பக்கம் ஏதோ சப்தம். அக்காள் குழந்தைகளிடம் சலசலப்பு. உடம்பை வளைத்துத் தறி மேடையை விட்டு இறங்காமல் எட்டிப் பார்த்தவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

வெளியே குழந்தைகள் நடுவில் அத்தை மகன் கோபி மனத்தில் நிரம்பி வழிந்தபடி இருப்பவன். இந்தக் காலை நேரத்தில் இங்கு எங்கு வந்தான்?

அவளுக்கு வியர்க்க ஆரம்பிக்கிறது. கோபி பார்க்க லட்சணமாக இருப்பான். நெசவாளி மாதிரியே தெரியாது. கிட்டதட்ட வேட்டி கட்டிய அரவிந்தசாமி அவன்.

அதனால்தான் அந்த முதலாளி மகள் கூட இவனை சைட் அடிக்கிறாளோ?

கோபி வந்து நிற்கிறான். வந்தவன் சீதாவைப் பார்க்கிறான். அவளுக்கு அது தெரியவில்லை. தயங்கித் தயங்கி நாக்கு குழற "வா கோபி..." என்கிறாள்.

“என்ன சீதா... பிரமாதமா ஏதோ புடைவை நெய்யறதா கேள்விப்பட்டனே...” இது அவன்.

— அவளிடம் நாணம் கலந்த சிரிப்பு.

“பரவால்ல புடைவை நல்லாதான் இருக்கு. நல்ல அழுத்தம்.” வருடிப் பார்த்தபடியே சொல்கிறான்.

“உக்காரு கோபி..

‘இருக்கட்டும். இந்தப் புடைவை என்ன விலை சீதா?’

— அவள் அவனை வெடுக்கென்று நிமிர்ந்து பார்க்கிறாள்.

“இது விலைக்கில்லே கோபி,” என்கிறாள் அதே வேகத்துடன்.

“அப்ப எதுக்கு?”

“தீபாவளியன்னிக்கு பார் தெரிஞ்சுக்குவே...

“அப்ப தெரிஞ்சுக்கறது இருக்கட்டும். இப்ப நான் கேட்டா தருவியா?” – சீதா அவனை ஆச்சரியமாகப் பார்க்கிறாள்.

“உனக்கு எதுக்கு கோபி...?”

“அதெல்லாம் உனக்கெதுக்கு – எனக்குத் தருவியா மாட்டியா அதைச் சொல்லு. சும்மா கேக்கலை – நல்ல விலை தந்துருவேன்..”

— அவனிடம் எப்படி மறுப்பது என்கிற திணறல் அவளிடம்.

“என்மேல நீ ஆசை வெச்சிருக்கிறது நிஜம்னா இந்தப் புடைவையை நீ எனக்குத் தருவே... இல்லேன்னா...”

— அவன் போய் விட்டான்.

அவளுக்குள் இப்போது தர்ம சங்கடம் ஆரம்பிக்கிறது ஆடிவெள்ளமாய் மனக் கரைகளில் அதன் உரசல். 'இவனுக்கெதுக்குப் புடைவை?' கேள்விப் பிராண்டலுக்கு விடை தெரியவில்லை.

ஒருவேளை என்கிட்ட வாங்கி எனக்கே தருவதற்காக இருக்குமோ?' – விடை வந்து எட்டிப் பார்க்கிறது.

மாதவன் வந்தபோது அவனிடமும் கோபியின் ஆசையைச் சொல்கிறாள். மாதவனுக்கும் புரியவில்லை. அவனிடமே கேட்டு விடுவது என்கிற முடிவுக்கு வருகிறான் மாதவன்!

"உனக்கெதுக்குடா கோபி சீதா நெய்யற பட்டுப் புடைவை?" – டீக்கடை வாசலில் டீ குடித்தபடி மாதவன் கேட்டே விட்டான்.

கோபியிடம் சற்று நெருடல். மௌனமாயிருக்கிறான்.

"சொல்லுடா! அது அவ ஆசையா நெய்யற புடைவை. நீ கேட்டுட்டுப் போனதுல இருந்து அவளுக்கு நிலை கொள்ளை."

"சொல்றேன் – நீ தப்பா எடுத்துக்க மாட்டியே..." – பீடிகை போட ஆரம்பிக்கிறான் கோபி.

"சொல்லுடா முதல்ல...

"நான் முதலாளி மகள் மஞ்சுளாவை விரும்பறேன்." – கோபியின் பதில் கிட்டதட்ட மாதவனை ஒரு கடி கடித்த மாதிரி இருக்கிறது.

"டேய்... என்னடா சொல்றே நீ?" – மாதவனிடம் பதற்றத்தின் ஆரம்பம்.

"ஆமாண்டா அவளும் என்னை விரும்பறா... அவளுக்கு தீபாவளிப் பரிசா தரத்தான் அந்தப் புடைவை.."

"டேய் மாதவா.... டேய்... டேய்..." கோபியின் அழைப்பை மாதவன் நொறுக்கித் தள்ளியபடி நடக்கிறான்.

வீடு வந்து காளிங்கநாகமாய்ப் பெருமூச்சு முட்டு கிறான். தறிமேடையில் சீதா!

ஆச்சரியமாய்ப் பார்த்துக் கேட்கிறாள்.

"என்னண்ணே ஆச்சு?"

— முதலில் தயங்கி, முடிவில் சகலத்தையும் சொல்லி முடித்தவன், "இனி அவனை நினைக்காதேம்மா, அவன் இனி பணக்கார மாப்பிள்ளை... துரோகி... துரோகி!" – என்று கருவுகிறான்.

சீதாவிடம் ஸ்தம்பித்த நிலை.

விடிந்தால் தீபாவளி!

நல்லவேளையாகப் புடைவை முடிந்து விட்டிருந்தது – தறியிலிருந்தும் அறுத்து, அழகாக மூங்கில் குச்சி உதவியோடு மடித்து ஒரு பாலிதீன் தாளுக்குள் வைத்து மூடுகிறாள் சீதா.

சலனமேயில்லாமல் முடிவுக்கு வந்த மாதிரி தெரிகிறாள். மாதவனுக்கு அது ஆச்சரியமாக இருக்கிறது. மடித்து எடுத்துக் கொண்ட புடைவையோடு கிளம்புகிறாள். மாதவனுக்கு அவள் செயல் புரியவேயில்லை.

"என்ன சீதா பண்றே – எங்க கிளம்பிட்டே?"

— அவளிடம் அர்த்தத்துடன் ஓர் அமைதி.

“கேக்கறேன்ல – இந்தப் புடைவையை நீ கட்டிக் கலையா?”

“இல்லண்ணே... அவள் பதிலில் அவனிடம் அதிர்ச்சி.

“அப்ப வித்துடப் போறியா?”

“அதுவும் இல்லை..

“பின்ன என்ன பண்ணப்போறே?”

“கோபி அத்தான் ஆசைப்பட்ட மாதிரி அதுக்கே கொடுத்துடப் போறேன்.”

“என்ன காதல் தியாகமா?” – கொடூரமான கேள்வி மாதவனிடம்.

“இதெல்லாம் ஒரு தியாகமா என்ன..?”

“பின்ன...?”

“நான் யாரை மயக்கணும்னு நினைச்சு இந்தப் புடைவையை நெஞ்சேனோ அவரே எனக்கில்லாம போகப்போறாரு. இந்தப் புடைவை மட்டும் எனக்கெதுக்குண்ணே?”

“விடும்மா! இவன் இல்லைன்னா உனக்கு வேற எவனுமே கிடைக்கமாட்டானா?”

“நான் அப்படிச் சொல்லலையே...

“பின்ன இதுக்கென்ன அர்த்தம்?”

“ஆசையா நெஞ்ச புடைவைண்ணே இது. இதுல பட்டும் ஜரிகையும் மட்டும் இல்ல... ஆசையும் நிறைய இருக்கு. அந்த ஆசையை என்னால இனி அனுபவிக்க முடியாது. கோபி அத்தானுக்காவது பயன்படட்டுமே...”

"நீ சொல்றத என்னால ஒத்துக்க முடியாது...

"அதுக்காக நான் என்ன பண்ண முடியும். இந்தப் புடைவையை எதுக்காக நெஞ்சேனோ அந்த ஆசை ஈடேறணும். என் உழைப்பு, ஆசை எதுவும் வீண் போயிடக் கூடாது. இது கோபி அத்தானை மயக்கணும். மயக்கும். என்ன.. மயக்கற ஆளா நான் இருக்க மாட்டேன் – அவ்வளவுதான்!"

— சீதா சொல்லிவிட்டுப் புடைவையை மார்பில் அணைத்த படி கிளம்புகிறாள்.

நெய்தது மட்டும் பட்டு அல்ல, அவள் மனதும் அப்படித்தான் என்கிற மாதிரி இருக்கிறது மாதவனுக்கு.

●

# 18

## தலை தீபாவளி

**எ**ங்கேயோ ஒரு பட்டாசு வெடிக்கும் சப்தம். தீபாவளி வரப்போகிறது என்பதற்குக் கட்டாயமாகக் கேட்ட அந்தச் சப்தம் படித்துக் கொண்டிருந்த தீபக்கின் முகத்தில் சந்தோஷத்தைக் கொண்டு வந்து அப்பிய மாதிரி தெரிந்தது. ஏனோ அவன் அப்பா தயாளன் மட்டும் அந்தச் சப்தத்தால் மிரண்டார். இப்போ தெல்லாம் அடிக்கடி அங்கங்கே பட்டாசு சப்தம் கேட்கிறது. தீபாவளி நெருங்க நெருங்கச் சப்தம் கூடிக்கொண்டே போகும். இயல்புதான்.

ஆனால் அந்த ஒலி சந்தோஷத்தைத் தராமல் தயாளனுக்குள் மாத்திரம் பீதியையே கிளப்பிக் கொண்டிருக்கிறதே?

சந்தோஷத்தோடு தன்னைப் பார்க்கும் பதினைந்து வயது மகன் தீபக்கைச் சற்று வெறுப்புடன் பார்க்கிறார் தயாளன்.

"அப்பா, தீபாவளிக்கு இன்னும் எவ்வளவு நாள் இருக்கு?"

அந்தக் கேள்வியையே வெறுக்கிறார்.

"கேக்கறேன்ல...?"

"தெரியாது."

"தீபாவளிக்கு எனக்கு ஜீன்ஸ் பேண்ட் வாங்கித் தருவியா?"

"பார்ப்போம்."

"நிறைய பட்டாசும் வாங்கித் தரணும்."

"பார்ப்போம்."

"என்னப்பா பார்ப்போம் பார்ப்போம்கறே. தலை தீபாவளிக்கு விஜி அக்கால்லாம் வரும், அமர்க்களமா இருக்கும் தீபாவளின்னு அம்மா சொன்னாங்களே...?"

"அப்ப அவகிட்டையே போய் எல்லாத்தையும் கேளு."

— தயாளனுக்கே தான் பேசுவது பிடிக்கவில்லை தான்... இருந்தாலும் என்ன செய்ய? பெருமூச்செறிகிறார்.

பட்டாசு சப்தத்தையும் தீபாவளியையும் நினைத்தாலே அடிவயிற்றில் அமிலம் சுரக்கிற மாதிரி ஓர் உள்ளுணர்வு.

ஒரு காலத்தில் தீபாவளி என்றால் அத்தனை தித்திப்பாய் உணர்ந்தவர்தான்...

அதிலும் முதல் நாள் இரவே களை கட்டிவிடும் அந்த நாளைய சந்தோஷத்தை நினைத்தால் ஏக்கமாக இருக்கிறது.

'புதுத்துணி, இனிப்பு, பட்டாசு, சினிமா, உறவுப் பட்டாளம், கட்டுப்பாடில்லாத சுதந்திரம்' என்று அந்த ஒரு நாளையில்தான் எத்தனை மகிழ்ச்சி!

ஆனால் இன்று ஒரு குடும்பியாகி நான்கு பெண் ணுக்கும் ஒரு பிள்ளைக்கும் அப்பா என்றாகி விட்ட நிலையில் அந்தத் தீபாவளிச் சந்தோஷமெல்லாம் தலை கீழாக மாறிவிட்டது.

வரிசையாய் நான்கு பெண்கள் அடுத்ததாவது ஆணாக இருக்கக்கூடாதா என்ற எதிர்பார்ப்பில் ஏமாற்றத்துடன் அறுவடை செய்யப்பட்டவர்கள்.

நல்லவேளை ஐந்தாவது பையனாகி அவரது குசேலத் தனத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. பையன் பிறந்து விட்டதற்காக நான்கு பெண்களையும் கழுத்தை நெறித்துக் கொன்று விட முடியுமா என்ன?

அதிலும் குதிர் குதிராக வளர்ந்து அவர்கள் வளைய வரும்போது...?

காலம் கலிகாலமாயிற்றே... எவ்வளவு நாளைக்கு வைத்துக் கொண்டிருப்பதாம்? அவர்களுக்குக் கல்யாணம் தலை தீபாவளி என்று தடபுடல் செய்யப்போய்க் கழுத்து வரை இப்போது கடன்.

இந்தக் கடனுக்கு நடுவில்தான் பட்டாசு சப்தம் வெடித்து அவர் மனசைக் கலவரப்படுத்துகிறது.

அப்படியும் இப்படியுமாகப் பிச்சை எடுத்து நான்கு பெண் களையும் கட்டி விட்டாயிற்று.. கடைசிப் பெண் விஜிக்கு தான் இப்போது தலைதீபாவளி!

விஜி கருப்பாய் இருப்பாள். நட்சத்திரம் வேறு மூலம். பிடித்துத் தள்ளுவதற்குள் நுரை தள்ளிவிட்டது. பிள்ளை வீட்டுக்காரர்கள் ஏதோ பரிதாபத்துக்கு அள்ளிக் கொண்டு போவது போல் தான் அவளை அழைத்துப் போனார்கள்.

நடுவில் ஏகப்பட்ட வியாபாரம்.

இல்லாவிட்டால் சரக்கு கரை சேராது என்பது யதார்த்தம். மற்றப் பெண்களுக்கெல்லாம் பத்து பவுன் போட்டால் இவளுக்கு மட்டும் பதினைந்து பவுன். மாப்பிள்ளைக்கு வைரமோதிரம் என்கிற உடன்பாடுகள்.

அதிலும் ஒரு பாதியைத் தான் போட்டிருக்கிறார். மறு பாதிக்குத் தீபாவளிதான் கெடு பீரியட். இப்பொழுது சொல்லுங் கள்! தீபாவளி இனிக்குமா?

தயாளனுக்கு ஒரு புகையிலை கம்பெனியில் வேலை, இது பான்பராக் யுகமாகி விட்டதால் புகையிலை வியாபாரத்தில் அத்தனை சூடு இல்லை. ஆகையால் இந்த முறை போனஸ் கூட ஏதோ பேருக்குத்தான் வரும்.

எல்லாவற்றையும் நினைக்க நினைக்கத் தயாள னுக்குள் பட்டாசு வெடிக்கிறது.

எப்படிச் சமாளிக்கப் போகிறோம்?

மலைப்பு தட்டும்போது விஜியிடமிருந்து கடிதம்.

என்ன எழுதியிருப்பாள் என்று தெரியும்,

பிரித்துப் பார்க்கவே பிடிக்காமல் கடிதத்தை அப்படியே பாக்கெட்டில் வைத்துக் கொள்கிறார்.

முதல் மூன்று பெண்கள் எழுதியதை வாசித்த அனுபவம்...

'அப்பா, தலையை அடகு வைத்தாவது செய்ய வேண்டியதைச் செய்து விடுங்கள்...' – முதல் பெண் இப்படித்தான் எழுதியிருந்தாள்.

'அவருக்குக் குர்தா ஜிப்பாவுடன் மூன்று பவுனுக்கு மைனர் செயின் போதுமாம்...'– இது இரண்டாமவள்.

'வெள்ளிக்குத்து விளக்கைக் குபேர பூஜை செய்து தரச் சொல்லியிருக்கிறாள் என் மாமியார்' – இது மூன்றாமவள்.

— மூன்று பேர் போல் தான் இவளும் எழுதியிருப்பாள். என்னச் சற்றுக் கூடுதலாக இருக்கும் எல்லாமே... மூல நட்சத்திரமல்லவா?

கடிதம் பிரிபடாமலே ஒரு கருங்கல்லாய்ப் பாக்கெட்டில் கனக்கிறது.

முகத்தில் முத்து முத்தாய் வியர்வை!

நடுவில் அவரது தலை தீபாவளி நினைவு வேறு தலை காட்டுகிறது.

அதில் தான் செய்த தர்பாரெல்லாம் ஞாபகத்துக்குள் எழுகிறது.

அவர் மாமனாரும் அவருக்கு ஒரு மோதிரம் போட்டிருந்தார். அது அசல் தங்கம்தானா என்று உரசிப் பார்த்தது முதல் நினைவாக முண்டுகிறது.

'தீபாவளியன்று சமையல் சரியில்லை; வாங்க மாப்பிள்ளை என்று மாமனார் மட்டும்தான் கூப்பிட்டார்... மாமியார்

கூப்பிடவில்லை' என்று அநாகரிகமாய் நடந்து கொண்டதெல்லாம் மனசுக்குள் காத்திருந்து வெளிப்படுகிறது.

நமக்கும் குழந்தைகள் பிறக்கும் - அப்பொழுது அவர்களுக்கும் தலை தீபாவளி வரும் என்கிற சிந்தனையோ அறிவோ இல்லாமல் இளரத்தச் சூட்டோடு மாப்பிள்ளை பந்தா செய்ததெல்லாம் அவர் மனசில் புழு நெளிசல் கொள்கின்றன.

அதற்கெல்லாம் சேர்த்துதான் இப்போது அநுபவிப்பதாக ஒரு நெருடல்.

முற்பகல் தீமைகள் – பிற்பகலில் இப்படித்தான் வெளிப்படும் என்பது புரிந்த விசாரத்தில், தன் மாமனார் மாமியாருக்காக ஏனோ அவர்கள் உயிரோடு இல்லாத இந்தக் காலத்தில் வருந்தி அழுகிறது அவர் உள்ளம்.

மனைவி மங்களம் குறுக்கிடுகிறாள்.

"என்ன தீபாவளி கலக்கமா?"

"ஆமாம் மங்களம்... உங்க அப்பா அம்மா ஞாபகம் வேற வந்திடிச்சு."

அதையே நினைச்சு வருத்தப்பட்டா தீர்ந்துடுமா? போஸ்ட்மேன் வந்த மாதிரி தெரிஞ்சிச்சே..."

சுருக்கென்றது தயாளனுக்கு.

அந்த லெட்டர் ஞாபகம் வந்தது. இவள் அதைப் பிரித்துப் படித்து மனசில் பாரத்தை ஏற்றிவிடப் போகிறாள் என்ற பதைப்பில் சற்றுத் தடுமாறியவர், "போஸ்ட்மேன் வந்தார். ஆனா நமக்கு ஒண்ணும் இல்லை" என்று சமாளித்தார்.

“விஜிகிட்ட இருந்து லெட்டர் வரணுமே...

“ஆமாம் வரணும். வரணும்.”

“ஏங்க எப்படிங்க சமாளிக்க போறீங்க?”

“அதான் புரியலை.”

“பேசாம இந்த வீட்டை வித்துடுவோமா?”

“மங்களம்...” பதறினார் தயாளன்.

“வித்துட்டு வர்ற பணத்துல கடனை அடைச்சிட்டுச் சொச்சத்துல விஜிக்கும் பண்ணிடலாம்க. நம்ம பெண்கள் ளையே விஜி ரொம்ப தங்கம்க...”

“எனக்கும் தெரியாம இல்லை. ஆனா இருக்கற நிழலையும் இழந்துட்டு..”

“என்னங்க பெரிய நிழல். மனசு சதா நெருப்பா இருக்கும்போது?”

வாஸ்தவம்தான்! அவரும் ஒரு முடிவுக்கு வந்த மாதிரி நிமிர்ந்தார்.

“போற விலைக்குப் போகட்டும் புரோக்கரைப் பார்த்துட்டு வரேன்.

– வெளியே கிளம்ப ஆயத்தமானார். ஏறத்தாழ எழுபத் தைந்து வருஷத்து வீடு; முப்பாட்டன் சொத்து. மோசமில்லாத விலைக்கு போகும்.

ஆனாலும் இருக்கும் கடனுக்குக் கால் காசு மிஞ்சப் போவதில்லை.

எல்லா ஏற்பாடுகளையும் செய்து பணமும் வந்து கடன் பட்டுவாடாவும் செய்தாகி விட்டது. சொச்சத்தில் விஜிக்கும் எல்லாம் வாங்கியாயிற்று.

அப்பாடா... பெருமூச்செறிகிறது.

இந்தத் தலை தீபாவளியிலும் ஒருவழியாகத் தப்பித்து விட்டோம்.

மனது சற்று லேசாகும் போது வாசல் பக்கம் ஆட்டோ.

மாப்பிள்ளையும் விஜியும் இறங்கிக் கொண்டிருந் தார்கள்.

'நடந்தது எதுவும் இவர்களுக்குத் தெரியக்கூடாது. தெரிந் தால் விஜி மிக வருந்துவாள். தலை தீபாவளி கொலை தீபாவளியாகிவிடும்.'

அவரது உள்ளுணர்வில் ஏகப்பட்ட எச்சரிக்கை. "வாங்க மாப்பிள்ளை வாம்மா விஜி?" வாய் நிறைய வரவேற்கிறார்.

— விஜி சற்றுப் பூசின மாதிரி தெரிகிறாள். கருப்பு நிறம் கூட மாறிச் சற்று வெண்மைப்பட்டுப் போயிருக்கிறாள்.

மகிழ்ச்சியாக இருக்கிறாள் என்பதை உடனேயே அறிய முடிகிறது.

உள்ளே நுழைந்தவளின் முதல் கேள்வியே, "அப்பா என் லெட்டர் கிடைச்சிச்சா?" – என்பதுதான்.

"கிடைச்சிச்சு, கிடைச்சிச்சு" – அவரிடம் வேகமான பதில்.

"எல்லாம் நல்லபடி முடிஞ்சுச்சு தானே?"

“ஆ... ஆமாம்! ஆமாம்..” – முகத்தில் வியர்வை பெருக உதட்டில் தந்தித்தாளம்.

“வா விஜி... வாங்க மாப்பிள்ளை” மங்களமும் உள்ளிருந்து வெளிப்பட்டு வரவேற்கிறாள்.

**த**லை தீபாவளி களை கட்டத் தொடங்குகிறது.

தீபக்கிற்கு விஜியே புதுத்துணி, பட்டாஸ், வாங்கி வந் திருக்கிறாள்.

இப்படி எந்த மாப்பிள்ளையும் செய்ததில்லை.

அப்படியே ஒரு வேட்டி சட்டை மாமனாருக்கும்,

புதுப் புடைவை மாமியாருக்கு!

“என்ன மாப்பிள்ளை... எதுக்கு இதெல்லாம்..? நாங்களல்லவா உங்களுக்கு செய்யணும்..”

“ஏன் நாங்க செய்யக் கூடாதா?”

– மாப்பிள்ளை மனசு அந்த நிமிஷத்தில் புரிந்து போகிறது. மனசில் மகிழ்ச்சி கட்டிக் கொள்கிறது.

தலை தீபாவளியும் தடபுடலாகக் கழிந்து முடிகிறது.

சற்று வித்யாசமான தீபாவளிதான்!

விஜி புன்னகையோடு திரும்ப புகுந்த வீட்டிற்குக் கிளம்பு கிறாள்.

தீபக் கூட ரயில்வே ஸ்டேஷன் வரை போய்விட்டு வரு கிறான்.

அங்கே பட்டாசு சப்தமும் தேய்ந்து அடங்கிக் கொண்டிருக்கின்றன.

ஒரு கட்டத்தில் நிசப்தம்!

ஈஸிசேரில் மல்லாந்திருக்கிறார் தயாளன்.

சப்தத்துக்குப் பின் வரும் அமைதியில் ஒரு வகை பயங்கரம் இருக்கிறமாதிரி தெரிகிறது.

பார்வைக்கு நேர் மேலே வீட்டுக்கூரை, நிழல் தந்த கூரை. இனி அவருக்குச் சொந்தமில்லை. இன்னும் பத்து நாளில் வீட்டைக் காலி செய்து கொண்டு கிளம்பியாக வேண்டும். நெஞ்சு அந்தவிநாடி அதை எண்ணிக் கனத்துப் போகிறது.

என்ன பெரிய தீபாவளி!

ஹும்!

மனசு சந்தோஷமற்றுச் சவமானது போல் உணரப் படும்போது வாசற்புறம் யாரோ தம்மைத் தேடுவது போல் உணர்கிறார்.

"இங்க தயாளன்கறது...

"உள் வீடுதான் போங்க..

— யாரோ வழிகாட்ட அவர் உள்ளே நுழைகிறார்.

"நீங்கதான் தயாளனா?"

"ஆமாம் என்ன வேணும் உங்களுக்கு?"

"நான் லாட்டரி ஏஜெண்ட். நீங்க வாங்கிப் பரிசு விழுந்த சீட்டைச் சரண்டர் பண்ணலை போல தெரியுதே"

“நானா லாட்டரி சீட்டா... பரிசா?”

“அட ஆமாங்க இந்தத் தீபாவளி குலுக்கல்ல உங்களுக்கு லட்ச ரூபா விழுந்துருக்கு. விஷயமே தெரியாதா?”

– தயாளன் தடுமாறத் தொடங்குகிறார்.

“உங்க மாப்பிள்ளைதான் உங்க முகவரி தந்து சீட்டு உங்கக்கிட்ட இருக்கறதா சொல்லி எங்களைப் போய்ப் பார்க்கச் சொன்னார். தீபாவளி களேபரம் முடியட்டும்னு காத்திருந்தோம். நீங்களும் பேங்கல சரண்டர் பண்ணுவீங்கன்னு எதிர்பார்த்தோம்.”

தயாளனுக்குச் சற்று குழப்பமாகிப் போனது. ‘நாம் எப்பொழுது லாட்டரி சீட்டு வாங்கினோம்?’ கேள்விப் பந்தடித்தது மனது. நினைப்போடு மார்பை வருடிக் கொண்டபோது விஜி முன்பு போட்ட அந்தப் பிரிக்கப்படாத கடிதம். சட்டென்று எடுத்துக் கடிதத்தைப் பிரித்த போது காத்திருந்த மாதிரி விழுந்தது அந்த லாட்டரி சீட்டு கூடவே கடிதம்.

“அன்புள்ள அப்பாவிற்கு!

‘அநேக நமஸ்காரங்கள். இப்பவும் நாங்கள் க்ஷேமம். இத்துடன் நான் ஒரு லாட்டரிச் சீட்டை அனுப்பியுள்ளேன் நீங்கள் நாங்கள் கல்யாணமாகிக் கிளம்பும் போது வெற்றிலை பாக்கில் ஆசீர்வாதம் செய்து வைத்து தந்த ஒரு ரூபாய்க்கு வாங்கிய டிக்கெட்.

‘அந்த டிக்கட்டிற்கு லட்ச ரூபாய் பரிசு விழுந்துள்ளது இந்தத் தீபாவளிக்கு நீங்கள் எவ்வளவு கஷ்டப்படுவீர்கள் என்று எனக்குத் தெரியும். என் கணவரிடம் அதைச் சொன்னேன். அவர் உடனே லாட்டரிச் சீட்டை உங்களுக்கு அனுப்பச் சொல்லிவிட்டார்.

'இந்தப் பணம் உங்கள் பணமாம். இதை வைத்துப் பழைய கடனை அடைத்து விட்டுத் தீபாவளியையும் சிறப்பாகக் கொண் டாட சொல்லியுள்ளார்.

'தயவு செய்து வீடு விற்பது போன்ற தப்பான காரியத்தைச் செய்ய வேண்டாம். உங்கள் காசில் உங்கள் மகள் வாங்கிய டிக்கெட். உங்கள் மாப்பிள்ளையும் உங்களுக்குத்தான் சேர வேண்டும் என்று சொல்லிவிட்டார். தயவு செய்து பெற்றுக் கொண்டு தீபாவளியை நன்கு கொண்டாடவும்.

இப்படிக்கு

**விஜி**

கடிதத்தைப் படித்த தயாளனுக்கு மனசு லேசாகிப் போயிற்று. கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுக்கத் தொடங்கியது.

ஊருக்கெல்லாம் தீபாவளி முடிந்த அந்த நிமிஷத்தில் அவருக்கான தீபாவளி தொடங்க ஆரம்பித்தது.

●

# 19

## முற்பகலும் பிற்பகலும்

**நெ**ருங்கிக் கொண்டிருக்கிறது தீபாவளி!

அதை நினைக்க நினைக்க சந்தோஷமாக இருக்கிறது சுசீலாவுக்கு!

'இந்த தீபாவளிக்கு உனக்கு நெக்லஸ் பண்ணிப் போடப் போறேன்' – பாஸ்கர் சொன்னது காதில் தேனாக ஊறிக் கொண்டிருக்கிறது.

"கட்டாயம் பண்ணிப் போடுவீங்களா?"

"நிச்சயமா?"

"வரப்போற போனஸ் வாங்கிய கடனுக்கு சரியா போயிடும். நெக்லசுக்கு பணத்துக்கு எங்க போவீங்க?"

"அதைப்பத்தி உனக்கு என்ன.. அது என் பாடு."

"இப்படித்தான் ஒவ்வொரு தீபாவளிக்கும் சொல்றீங்க. தீபாவளிதான் வருது – ஆனா நெக்லஸ் வந்த பாட்டைக் காணோம்."

"இல்ல... சுசீ.. இந்தத் தடவை உறுதியா உனக்கு நெக்லஸ் உண்டு."

நெக்லசுக்காக அவனிடம் பேசிய பேச்சும் அவன் பதிலும் அவளுக்குள் ஊர்வலம் போகின்றது.

அவன் அழுத்தம் திருத்தமாக பேசினதை வைத்துப் பார்த்தால் நெக்லஸ் உறுதி என்பதாகவே தெரிகிறது.

அந்த உறுதிப்பாடு அவளுக்குள் குதூகலத்தை உரு வாக்குகிறது. முகத்தில் பரவிய புன்னகை அழியமாட்டேன் என்கிறது. வேலைகளில் எல்லாம் கூட நல்லவேகம்.

பாஸ்கரும் இதை கவனிக்காமல் இல்லை.

இந்த பெண்களை நகை, புடவையில் மிக சுலபமாக கட்டிவிட முடியும் என்று சக நண்பன் அடிக்கடி கூறுவதை நினைத்து சிரித்துக் கொள்கிறான்.

இருந்தாலும் நெக்லசுக்கு எங்கே போவது? அதை நினைத் தாலே மலைப்புத் தட்டுகிறது.

"ஏண்டா நம்மளை மாதிரி ஆட்களுக்கு இந்த நெக்லஸ் அட்டிகையெல்லாம் நினைச்சுப் பார்க்கக் கூட முடியாத விஷய மாச்சே... நீ எப்படிடா அவ்வளவு உறுதியா உன் மனைவிகிட்ட சொன்னே?" நண்பன் ராம்குமார் கூட இப்படித்தான் கேட்டான்.

பாஸ்கரைப் பற்றி அவனுக்கு சரியாக தெரிய வில்லை.

தெரிந்திருந்தால் கேட்டிருக்க மாட்டான்.

பாஸ்கருக்கு எதையும் முடியாது என்று சொல்லும் பழக்கமோ நினைத்துப் பார்க்கும் பழக்கமோ கிடையவே கிடையாது.

மனிதன் நினைத்தால் எதையும் முடித்துவிட முடியும் என்கிற ஜாதியைச் சேர்ந்தவன்.

'முடியும் முடியும் என்றே சிந்திப்போம் – ஒருநாள் முடிந்து விடும்' என்பான்!

இந்த நெக்லஸ் விஷயம் அவனது ஆயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளத்துக்கு நடுவில் எப்படி சாத்யமாகப் போகிறதோ யாருக்குத் தெரியும்?

**வே**லைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான் பாஸ்கர். வெளியே அவனது ஹைதர் காலத்து சைக்கிள். தெருமுக்கில் அவன் வரும்போதே சுசீலாவை தட்டி எழுப்பக் கூடிய விதத்தில் சப்தம் போடக்கூடிய அந்த டப்பா வாகனம் அவன் ஏறிக் கொள்ளவும் ஜூட் விடத் தயாரானது.

— சுசீலா வாசலில் நின்று டாட்டா காட்டாத குறை.

— ஆனால் அவள் சொன்ன ஒரு விஷயம் மட்டும் அவனை சைக்கிளை உற்சாகமாக மிதிக்க விடாதபடி செய்து விட்டது.

"தீபாவளிக்கு இன்னும் பத்துநாள்தான் இருக்கு." – என அவள் சொன்னது சைக்கிளை மிதிக்கும்போது அவனை மிதிக்கிறது. அந்த பத்துநாள் விஷயம் முதலில் பிரம்மாண்டமாய் மிரட்டி பின்னர் புகைபோல கரைந்தும் விட்டது.

பேசாமல் 'இந்த தீபாவளிக்கு முடியாது, எதிர் பார்க்காதே' என்று சுசீலாவிடம் சொல்லி விடலாமா?

நினைத்துப் பார்க்கவே சங்கடப்படுகிறான் பாஸ்கரன்.

எந்த முகத்தை வைத்துக் கொண்டு சொல்வதாம்?

பரிகாசமாய் பார்ப்பாள் சுசீலா.. அதில் 'நீ எல்லாம் ஒரு ஆம்பளையா?' என்கிற கேலி ஒளிந்திருக்கும்.

ஊஹூம் கூடாது... ஒரு பெண்பிள்ளையிடம் போய் முடியாது என்று சொல்வதா? முதல் தடவை என்றாலும் பரவாயில்லை.

அவனது சுயமரியாதை ஊதிய பலூனாக உருண்டு பருக்கத் தொடங்குகிறது.

'அது சரி... ஒருநாள் அந்த நிலாவை கேட்கப் போகிறாள் மாட்டிக் கொள்ளப் போகிறாய்' என்கிறது அவன் புத்தியே...

கேட்டால் என்ன....? சந்திர மண்டலத்துக்கு ராக்கெட் விடும்போது அதில் ஏறிப்போய் சந்திரனைப் பிடித்து வந்து

தருகிறேன் என்று சொல்லி சமாளிக்க வேண்டியதுதான். அப்பொழுது கூட முடியாது என்று சொல்லக் கூடாது.

தனக்குத்தானே சமாதானம் செய்து கொள்கிறான்.

இதை தன்னம்பிக்கை கலந்த விடாத முயற்சி என்று வர்ணிப்பதா இல்லை யதார்த்தம் புரியாத பேராசை என்று சொல்வதா?

புரியவில்லை.

வாழ்வில் பல விஷயங்கள் இப்படித்தான் இரு விதமாகவும் அர்த்தப்படுத்திக் கொள்ள முடிந்த தினுசில் சிக்கிக் கொண்டு விடுகின்றன.

**வே**லையின்போது முதலாளி கூப்பிடுவதாக தகவல் வரவே கிளம்பினான்.

“வணக்கங்க... என்று அவர் எதிரே ஆங்கில ‘எஸ்’ எழுத்து போல வளையாத குறை.

“பாஸ்கர் உனக்கு ஒரு பெரிய வேலை தரப் போறேன்.” முதலாளி பீடிகையுடன் ஆரம்பித்தார்.

“என்னங்க முதலாளி?”

“ரொம்ப ரகசியமான விஷயம்.”

“சொல்லுங்க.”

“டேக்ஸ் ரெய்ட் பயங்கரமா இருக்கு – உனக்கும் தெரியும் தானே?”

“நல்லா தெரியுங்களே..

“கஷ்டப்பட்டு நாம சம்பாதிக்கிறோம். ஆனா அரசாங்கமோ அதைப் புரிஞ்சுக்காம வரிபோடப் பாக்குது. ஒரு அளவுக்கு மேல போனா சீஸ் பண்ண நினைக்குது. இது கொண்டுகிட்டு போகவா நான் சம்பாரிச்சேன். விடக்கூடாது பாஸ்கர்.”

“ஆமாம் முதலாளி, விடக்கூடாது.”

“ஆகையால் நான் ஒரு சூட்கேஸ் தரேன். அதை உன் வீட்ல வெச்சுக்கோ. கேக்கும் போது தந்தா போதும். ரொம்ப ஜாக்கிரதையா வெச்சுக்கணும். வெளிய மூச்சு விடக்கூடாது.”

பாஸ்கர் அதைக்கேட்டு சற்று மிரண்டு போனான். முடியாது என்று சொல்லப் பார்த்து சுபாவம் காரணமாக முடியாமல் போனான்.

“நீ ஒண்ணும் சும்மா வெச்சுக்க வேணாம் பாஸ்கர். அதுக்காக நான் தனியா மாசம் ஆயிரம் ரூபா தருவேன் உனக்கு. என்ன சொல்றே?”

— அந்த ஆயிரம் ரூபா அந்த நிமிஷம் பாஸ்கர் மனதில் சர்க்கரை மழையைக் கொட்டியது.

“பேங்க் லாக்கரை விடவா நான் பாதுகாப்பானவன்.” கேட்க நினைத்ததைக் கேட்டு விட்டான்.

“உன்னை நான் இன்னிக்கு நேத்தா பாக்கறேன். நீயும் பதினைஞ்சு வயசுல இருந்து என்கிட்ட வேலை பாக்கறே. உன்னை விட எந்த லாக்கரும் எனக்கும் பெரிசில்ல..”

சொல்லிவிட்டு அந்த சூட்கேஸை தூக்கி அவன் கைகளில் கொடுத்தார்.

"இதுல என்ன இருக்கு முதலாளி...?"

"அது எதுக்கு உனக்கு... பத்திரமா வெச்சிருந்து கேக்கும் போது கொண்டு வந்து கொடு. ஒரே ஒரு வார்த்தை.."

"சொல்லுங்க."

"வாழ்க்கைல எது எப்படி நடக்கும்னு சொல்ல முடியாது. அந்த வகைல நீ மனசு மாறி பெட்டியோட தலைமறைவாயிட நினைக்காதே. இப்ப இருக்கற நம்பிக்கைக்கு குந்தகம் வரவே கூடாது. இதை ஒரு பேச்சுக்கு சொல்லி வைக்கறேன்."

பணிவாகவும், பயத்தோடும் தலையாட்டி விட்டு பெட்டியை வாங்கிக் கொண்டான்.

ஆயிரம் ரூபாய் கூடக்கிடைக்கும் சந்தோஷம் மெல்ல தலை எடுக்கத் தொடங்கியது.

'சுசீ உன் நெக்லஸ் விஷயம் ஓ.கே.. ஆயிடப் போவுது கண்ணே..."

மனதுக்குள் ஒரு செல்லக்குயில் கூவியது.

மறுநாள்...

அந்த அதிர்ச்சியான செய்தி காதில் விழுந்தபோது பாஸ்கருக்கு நின்ற இடத்துக்கு கீழே நிலமே நழுவிப் போவது போல் ஒரு பிரமை.

முதலாளி திடீர் ஹார்ட் அட்டாக்கில் காலமாகி விட்டார்.

பெட்டியை தன்வசம் தந்த விஷயமும் யாருக்கும் தெரியாது. சாவுச் செய்தி கேட்டு துக்கப்பட வேண்டியவன்.

வானுக்கும் பூமிக்கும் எகிறிக் குதித்தான்.

"என்னங்க இது, கவலைப்படாம சந்தோஷமா இருக்கீங்க..

"ஆமா... சுசீ.... நான் குபேரனாயிட்டதாலதான் இந்த குதி குதிக்கறேன்."

"புரியலைங்க...

– ஓடிப்போய் முதலாளி தந்த அந்தப் பெட்டியை எடுத்து வந்தான்.

"சுசீ... இனி இது எனக்கே எனக்கு. என் முதலாளி தந்த பெட்டி."

"ஆமா பத்திரமா வெச்சுக்க சொன்னதா சொல்லி நேத்து தானே கொண்டு வந்தீங்க."

"டேக்ஸ் ரெஸ்டுக்கு பயந்துகிட்டு அவர் தன்னோட சொத்துக்கள்ள ஒரு பகுதியை இப்படி என் மாதிரி நபர்கள் கிட்ட கொடுத்து வெச்சிருக்காரு. அதெல்லாம் வெளிய தெரியாது. இப்ப மண்டையப் போட்டுட்டாரு. கஷ்டப்பட்டு உழைச்சதுக்கு பலன் இந்த ரூபத்துல வந்துடிச்சு சுசீ..."

"அப்படின்னா இது இனி நமக்கேவா?"

"பின்ன, திருப்பி கொடுக்கச் சொல்றியா? பைத்தியம்."

"அதிர்ஷ்டம் நமக்கு இந்த ரூபத்துல வந்துருக்குன்னு நினைக்கறீங்களா?"

"பின்னே...

"வேண்டாங்க. இது நம்பிக்கைத் துரோகம்."

"அவர் கவர்மெண்ட்டுக்கு செஞ்சதுதான் நம்பிக்கைத்துரோகம். நான் இப்பகூட அவர் வந்து கேட்டா தந்துடுவேன்."

"இது அரசாங்க சொத்துங்க. கவர்மெண்ட்கிட்ட உண்மையைச் சொல்லி ஒப்படைச்சிடுங்க. அவர் வரமாட்டாருங்கற தைரியத்துல இப்படி பேசாதீங்க."

"பைத்தியம் வலிய வந்த சீதேவியை யாராவது விடுவாங்களா?" – கேட்டுக் கொண்டே பெட்டியை உடைக்கத் தொடங்கினான்.

"வேண்டாங்க... வேண்டாங்க...

"நீ சும்மா இரு... பேச்சோடு பேச்சாக உடைத்தும் விட்டான்.

திறந்தால் அவ்வளவும் தங்க நகைகள்! வெளிச்சக் கொத்தாய் கண்ணைப் பறிக்கிறது.

"வாவ்....!" – பிளந்த வாயை பாஸ்கரால் மூட முடியவில்லை.

"சுசீ... நான் உனக்கு ஒரு நெக்லஸ் பண்ணிப் போடவே முடியுமான்னு திணறினேன். ஆனா முடியாதுன்னு நினைச்சுப் பார்க்கக்கூட சங்கடப்பட்டேன். எப்படியும் முடிக்கணும்னு நினைச்சேன். என் நினைவு தெரிஞ்சு கடவுளா பார்த்து ஒண்ணுக்கு பத்தா கொடுத்துருக்கார் பார்த்தியா?"

— சுசிலா வேண்டா வெறுப்பாக அதைப் பார்க்கிறாள்.

"இந்தா இதை போட்டுக்கோ...

"மாட்டேன்."

"அட சொன்னா கேளு. அவ்வளவும் உனக்கு தான்." சண்டை போட்டு அவ்வளவு நகையையும் போட்டு அழகு பார்த்தான்.

கோவில் சிலை போல தெரிந்தாள் சுசீலா.

பாஸ்கரால் சந்தோஷ நினைப்பை கட்டுப்படுத்த முடியவில்லை.

திரும்பவும் துள்ளிக் குதித்தான்.

**கோ**வை எக்ஸ்பிரஸ் விரைந்து கொண்டிருக்கிறது. உள்ளே ஏ.சி. கோச்சில் பாஸ்கர். பெரிய பிசினஸ்மேனைப் போல தோற்றம் தருகிறான். போல என்ன போல... பிசினஸ் மேனேதான்! எல்லாம் நகைகள் தந்த வாழ்க்கை! கோவை வரைபோய் புதிதாக ஒரு பிசினசுக்கு அஸ்திவாரமும் போட்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருக்கிறான்.

மனது முழுக்க மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கிறது. முதலாளி இறந்த பிறகு அந்த வேலைக்கும் முழுக்கு போட்டாகி விட்டது.

இனி என்ன, ராஜாதான்!

திடீரென்று எங்கிருந்து இவ்வளவு காசு வந்தது என்று சிலர் கேட்கலாம். ஆகையால் குடும்பத்தையே கூட கோவைக்கு மாற்றிக் கொள்ளப் போகிறான்.

அதற்காக வீடு பார்த்து அட்வான்சும் கொடுத்தாகி விட்டது.

நல்ல பெரிய வீடு.

சகலத்தையும் நினைக்க மிக மிக சந்தோஷமாக இருக்கிறது.

இந்த காலத்தில் நேர்மையாக இருந்தால் யார் மதிக்கிறார்கள். அப்படி எல்லாம் இருந்தவரை அந்த ஹைதர் காலத்து சைக்கிள்தான்! அதை மிதிப்பதற்குள் உயிர் போய்விடும்.

இதுபோல் ஏ.சி. கோச் ரயில் பயணமெல்லாம் நேர்மையாக நன்றியாக இருந்திருந்தால் வாய்த்திருக்குமா?

இதெல்லாம் புரியாமல் சுசீலா தினமும் அவனை கண்டித்ததை நினைத்து சிரிக்கிறான்.

"சுசீ... இதெல்லாமே உனக்குதானே? நீ நல்லா இருந்தாத் தானே நானும் நல்லா இருக்க முடியும்?" – மனதுக்குள் பதில் சொல்லிக் கொள்கிறான். அந்த சந்தோஷம் கலையாமல் ரயிலை விட்டு இறங்கி ஒரு டாக்ஸி பிடித்து தீபாவளிச் சந்தோஷத்துடன் வீட்டை எட்டியவனுக்கு தூக்கிவாரிப் போட்டது.

வீட்டு வாசலில் போலீஸ் கூட்டம்.

"என்னாச்சு?"

"ராத்திரி திருடங்க வந்து சுசீலாவை கத்தியால குத்திட்டு பீரோவுல இருக்கறதையெல்லாம் சுருட்டிக்கிட்டு ஒடிட்டாங்க. நீங்க வேற ஊர்ல இல்லை, அதான் நாங்களே போலீசுக்கு சொல்லி.."

— வீட்டுக்காரர் பேசுவது அவன் காதில் விழவேயில்லை. மாறாக மயக்கமும், மௌனமும் அவனை இறுக்கத் தொடங்குகின்றன.



திருமகள்
நிலையம்